விலை : 20.00 website : www.valampurii.lk

பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 31 திங்கட்கிழமை (15.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 240

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.con
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## செப்ரெம்பர் 7,9ஆம் திகதிகளில்

# பிரமாண்டமான

# மக்கள் பேரணி

### தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் உபகுழு ஏற்பாடு



### செஞ்சோலை படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு



## பிரபாகரனின் உருவப்படத்துடன் கண்டியில் ரிசேட்டுகள் மீட்பு!




(கண்டி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உருவப்படம் மற்றும் தமிழீழத்துக்கான வரைபடம் ஆகியவற்றுடன் கூடிய ரிசேட்டுகளை, கண்டியில் உள்ள புடைவைகடையொன்றிலிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

விற்பனைக்கு எடுத்துவரப்பட்ட ஆடைகள் அடங்கிய

24ஆம் பக்கம் பார்க்க....

### துப்பாக்கி முனையில் இராணுவத்தினரால்

## ஊடகவியலாளர்களுக்கு நேற்று அச்சுறுத்தல்!

(பரந்தன்)

கிளிநொச்சி பரவிப் பாஞ்சானில் இராணுவத்தினரிடம் உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி இரண்டாவது நாளாகவும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றுக் கொணடிருந்த வேளை நேற்று இரவு எட்டு இருபது

24ஆம் பக்கம் பார்க்க....

## போரின் வேதனையை குறைக்க முடியாது

க.பொ.த (சா/த)
பரீட்சை

# தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் உபகுழு ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

திட்டமிடப்பட்டுவரும் தமிழின விரோத செயல்களை கண்டித்து பிரமாண்டமான மக்கள் எழுச்சி பேரணி ஒன்றை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திலும் 9ஆம் திகதி யாழ்.மாவட்டத்திலும் முன்னெடுக்கவுள்ளதாக தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் உப குழு அறிவித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## காட்டுக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

(கிளாலி)

கிளாலி, சபரிபுரம் தோட்டப் பகுதி காட்டுக்குள் கடந்த 12ஆம் திகதி சென்ற நிலையில் காணாமல் போயிருந்த நபர் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பளை பொலி 24ஆம் பக்கம் பார்க்க....

## பிரித்தானியா பாராட்டு

(லண்டன்)

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் அமைப்பது குறித்த சட்ட மூலம் இலங்கைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டமையை பிரித்தானியா வரவேற் 24ஆம் பக்கம் பார்க்க....

## செஞ்சோலை படுகொலையின் 10ஆம் ஆண்டு நினைவு அனுஷ்டிப்பு





(யாழ்ப்பாணம்)

செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு விமானப்படையின் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட 24ஆம் பக்கம் பார்க்க....

# ஊடகவியலாளர்களுக்கு நேற்று அச்சுறுத்தல்!

(பரந்தன்)

கிளிநொச்சி பரவிப் பாஞ்சானில் இராணுவத்தினரிடம் உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி இரண்டாவது நாளாகவும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றுக் கொணடிருந்த வேளை நேற்று இரவு எட்டு இருபது 24ஆம் பக்கம் பார்க்க....

## போரின் வேதனையை குறைக்க முடியாது

(கொழும்பு)

நாட்டில் கடந்த மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற கொடிய போரின் வேதனையை அரசியலமைப்பினால் மாத்திரம் குறைக்க முடியாதென முன்னாள் ஜனாதிபதி சந்தி 23ஆம் பக்கம் பார்க்க....






## விடுவிக்க கோரியது 1,528 ஏக்கர்

# 500 ஏக்கரை விடுவிக்க சாத்தியம்

(யாழ்ப்பாணம்)


வலி.வடக்கு உயர்பாதுகாப்பு பகுதியில் மீதியாக உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் மீள்குடியேற்ற அமைச்சினால் விடுவிக்க கோரிய ஆயிரத்து 528 ஏக்கர் காணிகளில் 500 ஏக்கர் காணிகளையே இராணுவத்தினர் விடுவிப்பதற்கான சாத்தியக் கூறுகள் 24ஆம் பக்கம் பார்க்க....

# காணாமல் போனோர் அலுவலகம் மூலம் படையினர் பழிவாங்கப்படமாட்டார்கள்

## ஜனாதிபதி மைத்திரி உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பாக செயல்படும் அலுவலகம் அமைக்கப்படுவதன் மூலம் பாதுகாப்பு படையினர் பழிவாங்கப்படமாட்டார்களென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



நேற்று முன்தினம் இரவு தொலைகாட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

காணாமல் போனோர் தொடர்பாக செயல்படும் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டால், அதன் மூலம் பாதுகாப்பு படையினர் பழிவாங்கப்படுவார்களென்று சிலர் குற்றச்சாட்டினர்.

அதனை நிராகரித்த ஜனாதிபதி சிறிசேன இறுதி 24ஆம் பக்கம் பார்க்க....

## காரைநகரில் காணாமல் போயிருந்த பாடசாலை மாணவியொருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியில் காணாமல் போயிருந்த பாடசாலை மாணவியொருவர் வயற்கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட மாணவி கொலை செய்யப்பட்ட பினனர் கிணற்றுக்குள் போடப்பட்டாரா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த சம்பவத்தில் காரைநகர் களபூமி திக்கரையை சேர்ந்த சண்முகராஜக் குருக்கள் துவாரகா (வயது 16) என்ற என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவரு. 24ஆம் பக்கம் பார்க்க....



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் திருமதி
**இராஜேஸ்வரி கனகசபை**

மலர்வு 09.02.1942 — உதிர்வு 16.07.2016

எங்கள் அன்புத் தெய்வமே!
என்றும் எங்கள் இதயக்கோயிலில்
நீங்கள் தெய்வமாக உறைந்திருப்பீர்கள்.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

இல.07, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். -குடும்பத்தினர்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



யாழ்ப்பாண மாநகர சைவசமய
விவகாரக் குழுவின் விளம்பர
அனுசரணையாளர் **திரு.த.கனகசபை**
(ஓய்வுபெற்ற சிறாப்பர், யா.மா.சி)
அவர்களின் அன்பு மனைவி
**திருமதி இராஜேஸ்வரி கனகசபை**
அவர்களின்ஆத்மசாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சைவசமய விவகாரக் குழு
யாழ்.மாநகர சபை

## மரண அறிவித்தல்

### விஸ்வலிங்கம் வசந்தராஜன் (பெல்ஜியம்)



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் வசந்தராஜன் (பெல்ஜியம்) 13.08.2016 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லம்மா தம்பதியினரின் (அல்லைப்பிட்டி) பேரனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி-இலட்சுமி தம்பதியினரின் (மண்டைதீவு) பாசமிகு பேரனும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் கனகலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும், ஜெயந்தி, விஜயராஜன் (லண்டன்), ஜீவராஜன் (லண்டன்), ஜெயராஜன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக தெஹிவளை மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இன்று (15.08.2016) பி.ப ஒரு மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முகவரி:இல.45, சந்தனமாதா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொ.இல:0766156764

தகவல்:
S.ஜெயந்தி (சகோதரி)

(சி-5451)

## எவர் எப்படி எதிர்த்தாலும் காணாமல்போனோர் அலுவலக சட்டம் நடைமுறையில் இருக்கும்

## பாக்கியசோதி தெரிவிப்பு



(கொழும்பு)

காணாமற் போனோர் அலுவலகம் தொடர்பான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இனி எவரும் அதனை எதிர்ப்பதில் அர்த்தமில்லை. அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும்.

மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளரும் நல்லிணக்கச் செயலணியின் பொதுச் செயலாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பியின் ஆதரவுடன் காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றில் கடந்த வியாழக்கிழமை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. சட்டமூலத்தை நிறைவேற்றவிடாமல் மகிந்த அணியினர் சபைக்குள் எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டபோதும் அனைத்தையும் முறியடித்து 17 திருத்தங்களுடன் சட்டமூலத்தை அரசு வெற்றிகரமாக நிறைவேற்றியது.

இந்நிலையில், இந்தச் சட்டத்திற்கு எதிரான பிரசாரத்தை மகிந்த அணியினர் முடுக்கிவிட்டுள்ளனர்.

குறிப்பாக இராணுவத்தி னருக்குத் தண்டனை வழங்கும் நோக்குடனேயே இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும், ஒருபோதும் அந்தக் கனவு நிறைவேறாது என்றும், சட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்கமாட்டோம் என்றும் தெற்கில் மகிந்த அணியினர் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் நல்லிணக்கச் செயலணியின் பொதுச் செயலாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மேலும் தெரிவித்ததாவது,

பலகட்ட முயற்சிகளின் பின்னர் காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது காணாமற் போனோர் தொடர்பில் உண்மைகளைக் கண்டறியும் அலுவலகம் அரசமைப்பு ரீதியாக அங்கீகாரம் பெற்றுள்ளது.

எவரும் இதனை எதிர்ப்பதில் அர்த்தம் இல்லை. எதிர்ப்பதால் அவர்களுக்கு எந்தச் சாதகமும் ஏற்படப் போவதில்லை.

உண்மைகளைக் கண்டறிவதற்காகவே காணாமற் போனோர் அலுவலம் அமைக்கப்படுகின்றது.

இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணியை அரசு விரைவில் ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அதற்கு கட்டாயம் அனைவரும் ஒத்துழைப்பை வழங்கவேண்டும். எதிர்ப்பதால் ஒன்று நடைபெறப் போவதில்லை. எவர் எதிர்த்தாலும் சட்டம் நடைமுறைக்கு வருவதைத் தடுக்கமுடியாது என மாற்றுக்கொள்கைக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளரும் நல்லிணக்கச் செயலணியின் பொதுச் செயலாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**வான் விற்பனைக்கு**
50-XXXX இலக்க முடைய ரிங்கர், பெயின்ரிங் வேலைகள் செய்த ரொயோடா வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0772395843
(5619)

**North Lanka IIT**
**Mason, Carpenter, Plumber & Welder**
North Lanka IIT, இந்தியாவில் பிரபலமானதும் மத்திய அரசாங்கத்தின் அங்கிகாரம் பெற்றதுமான Indian Council of Vocational Education உடன் இணைந்து பின்வரும் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன.
தகைமை: எட்டாம் வகுப்பு படித்திருக்கவேண்டும் & 18 வயதிக்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும்.
காலம்: 6 - 9 மாதங்கள்
பயிற்சி காலத்தில் சம்பளம் வழங்கப்படும்
பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதல் வழங்கப்படும்.அத்துடன் அரசாங்கத்தினூடாக மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு பெற்றுத்தரப்படும்
People's Bank Bulilding, Top Floor, Stanly Road, Jaffna.
Contact: 0767504535, 0214927088

# எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் யாராயினும் என்னைத் தொடர்பு கொள்ள முடியும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**காணாமற்போனவர்கள் தொடர்பில் கண்டறியும் காரியாலயத்துக்கு யாராவது எதிர்ப்புத் தெரிவிப்பதாக இருந்தால், அது தொடர்பில் தன்னுடன் தொடர்பு கொள்ள முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.**

இச்சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் எந்தவித நோக்கமும் இன்றியே எதிர்த்து வருகின்றனர் என நேற்றுமுன்தினம் தொலைக்காட்சியில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

காணாமற்போனோர் தொடர்பில் கண்டறியும் இக்காரியாலயம் இராணுவத்தைப் பலிக்கடாவாக்கும் நடவடிக்கை என சிலர் விமர்சனத்தை முன்வைக்கின்றனர்.

கடந்த காலங்களிலும் காணாமற்போன சம்பவங்கள் பல இடம்பெற்றன. 88-89 காலப் பகுதிகளில் இடம்பெற்ற காணாமற்போன சம்பவம் தொடர்பிலும் இதன்போது கண்டறியப்படும். இதனை அறியாதவர்கள் ஒரு தரப்பை மாத்திரம் மையப்படுத்தி இக்காரியாலயம் குறித்து கருத்துத் தெரிவித்து வருவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-5-7)

## 4ம் கட்ட பேச்சுவார்த்தைக்குமுன் படகுகள் விடுவிக்கப்பட வாய்ப்பு

### நாராயணசாமி தகவல்

இந்திய - இலங்கை மீனவர்கள் இடையேயான நான்காவது கட்ட பேச்சுவார்த்தைக்கு முன்பே, பறிமுதல் செய்யப்பட்ட படகுகள் விடுவிக்கப்பட்டு விடும் என, புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

புதுச்சேரியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை டில்லியில் மரியாதை நிமித்தமாக சந்தித்தேன்.

அப்போது, இந்திய-இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக இரு தரப்பிலும் நான்காம் கட்ட பேச்சுவார்த்தை விரைவில் சென்னையில் நடைபெறவுள்ளது. அதில், எந்தெந்த காலங்களில் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் பகுதியிலும், இந்திய மீனவர்கள் இலங்கை கடல் பகுதியிலும் மீன்பிடிப்பது என்பது குறித்தும், படகுகளை விடுதலை செய்வது குறித்தும் உரிய தீர்வு காணப்படும் என வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், பேச்சுவார்த்தைக்கு முன்பே பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார். (இ-7)

## கோத்தபாய, கெஹலிய, மகிந்தானந்த இவ்வாரம் கைது செய்யப்பட வாய்ப்பு







பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோரைக் கைது செய்ய பொலிஸ் பாரிய நிதிக் குற்றப் பிரிவு சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஏ.டி.ராஜபக்ஷவின்நினைவு மண்டபத்தை அமைக்க தாழ்நிலத்தை நிரப்பும் சபையிடமிருந்து 61 மில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொண்டதற்காக கோத்தபாய ராஜபக்ஷவிடம் விசாரணை நடத்தவும், ஜனாதிபதி நிதியத்திலிருந்து 20 மில்லியன் ரூபாவைச் சிகிச்சைக்காக பெற்றுக் கொண்டதற்காக கெஹலிய ரம்புக்வெலவிடம் விசாரணை நடத்தவும், விளையாட்டுத்துறை அமைச்சுக்கு விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்ததில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடி தொடர்பாக மகிந்தானந்த அளுத் ஹகமகேவிடம் விசாரணை நடத்தவும் கைது செய்ய வேண்டுமெனவும் சட்டமா அதிபரிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-7)

## இலங்கையில் ஊடுருவியுள்ள ஐ.எஸ்.முகவர்கள்

### பொதுபல சேனாவுக்கு தகவல்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத முகவர்கள் கொழும்பு, வில்பத்து, காத்தான்குடி போன்ற பிரதேசங்களுக்கு ஊடுருவியிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளது என தெரிவிக்கும் பொதுபல சேனா, அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக பொதுபல சேனாவின் நிர்வாகப் பணிப்பாளர் கலாநிதி டிலந்த விதானகே மேலும் குறிப்பிடுகையில், சிரியாவில் உயிரிழந்த இலங்கையின் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிக்கு இவ்வியக்கம் நட்ட ஈடு வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

அத்துடன் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், மாலைதீவு, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாத முகவர்கள் இலங்கைக்குள் ஊடுருவியிருப்பதாகவும் இவர்கள் கொழும்பு, வில்பத்து, காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் தங்கியிருப்பதாகவும் இவர்களுக்கு அடையாள அட்டை பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் அறியவருகிறதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-7)

## பலவந்தமாக அனைத்தையும் செய்ய விரும்புகின்றது அரசு

### கெஹலிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் பலவந்தமாக அனைத்தையும் செய்ய விரும்புகின்றது என முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

வார இறுதிப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கம் எதேச்சாதிகாரமாக செயற்பட்டு வருகின்றது.

நாட்டுக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தவே அரசாங்கம் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றது.

நாட்டில் எவ்வித அபிவிருத்தியையும் பார்க்க முடியவில்லை.

கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள உள்ளதாக கூறப்பட்ட போதிலும் அவ்வாறு எவரும் கூட்டு எதிர்க்கட்சியில் இணைந்து கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார். (இ-5-7)

## பிரதான பிரச்சினைகளுக்கான தீர்வு ஜே.வி.பியிடம் மாத்திரமே உள்ளதாம்

தற்போதைய அரசாங்கத்தினுள் பல்வேறு நெருக்கடிகள் தோன்றியுள்ளதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

அவிசாவளை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடன் மூலமான நிதி நெருக்கடி, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, உற்பத்தி துறையின் வீழ்ச்சி, அரச நிறுவனங்களுக்கான வருமான வீழ்ச்சி, இலாப பங்கீட்டில் முரண்பாடு என்ற 5 பிரதான பிரச்சினைகள் உள்ளன.

இந்த 5 பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்காத நிலையில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் பயனில்லை. இந்தநிலையில், இந்த 5 பிரதான பிரச்சினைகளுக்கும் ஜே.வி.பியிடம் மாத்திரமே தீர்வு உள்ளதாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (இ-5-7)

## இலங்கையைப் பொருளாதாரக் கேந்திர நிலையமாக மாற்றுவதற்கு சீனா உதவி

இலங்கையை தெற்காசியாவின் பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றுவதற்கு, தமது முழுமையான உதவியை வழங்கவுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

சீனாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பிரதமர் தலைமையிலான தூதுக்குழுவிடம் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளக்கூடிய வாய்ப்பு ஆசிய நாடுகளுக்கே இருப்பதாக பிரதமர் தலைமையிலான தூதுக்குழு குறிப்பிட்டுள்ளது.

இந்தியா, சீனா, ஜப்பான், சிங்கப்பூர் உட்பட்ட ஆசிய நாடுகள் உலக பொருளாதாரத்தை தீர்மானிக்கக்கூடிய சக்திகளாக மாறியுள்ளதாக இதன் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தூதுக்குழு தெரிவித்தது.

அத்துடன் இலங்கையை தெற்காசியாவின் நிதி, பொருளாதார கேந்திர நிலையமாக மாற்றுவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (இ-5-7)



# வலுவான நிலையில் இலங்கை; ஆஸி சிறப்பான ஆரம்பம்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்சில் 355 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இலங்கை - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் தொடங்கிய இந்தப் போட்டியில் இலங்கை அணி 26 ஓட்டங்களுக்கே 5 விக்கெட்டை இழந்து மோசமான நிலையில் இருந்தது.

இதன் பின்னர் தனன்ஜெய டி சில்வா சதம் அடிக்க, இலங்கை அணி முதல் நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 214 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

தனன்ஜெய டி சில்வா 116 ஓட்டங்களுடனும், சந்திமால் 64 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேறறு 2ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடிய டி சில்வா 129 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் வந்த சந்திமாலும் சிறப்பாக விளையாடினார். ரங்கன ஹேரத 33 ஓட்டங்கள் எடுத்த நிலையில் காயம் காரணமாக வெளியேறினார்.


சிறப்பாக ஆடிய சந்திமால் சதம் அடித்தார். அவர் 132 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஸ்டார்க் பந்தில் வெளியேறி னார்.

இதனால் இலங்கை அணி முதல் இன்னிங்சில் 355 ஓட்டங்கள் எடுத்தது. அவுஸ்திரேலியா அணி சார்பில் ஸ்டார்க் 5 விக்கெட்டும், லயன் 3 விக்கெட்டும் வீழ்த்தினார்கள்.

பின்னர் அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்சை தொடங்கியது. தொடக்க வீரர்களாக வோர்னரும், ஷேன் மார்ஷும் இறங்கினா ர்கள்.

வோர்னர் 11 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். தற்போது அவுஸ்திரேலியா 1 விக்கெட்டுக்கு 129 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஷோன் மார்ஷ் (57), அணித்தலைவர் ஸ்மித் (56) ஆட்டமிழக்காமல் உள்ளனர். போட்டியின் மூன்றாம் நாள் இன்றாகும்.(க)

# 100 மீற்றர் தகுதி சுற்றில் போல்டை முந்தினார் காட்லின்




ரியோ ஒலிம்பிக்கின் 100 மீட்டர் ஓட்டப் பந்தய தகுதிச் சுற்றில் 10.01 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து காட்லின் அசத்தினார். உசைன் போல்ட் 10.07 வினாடியில் கடந்தார்.

தடகளத்தின் முக்கிய போட்டியான 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தின் தகுதிச் சுற்று நேற்று நடைபெற்றது. இதில் அமெரிக்க வீரர் காட்லின் பந்தய தூரத்தை 10.01 வினாடிகளில் கடந்தார். உசைன் போல்ட் 10.07 வினாடிகளில் கடந்தார். தகுதிச் சுற்று 8 ஹீட்டாக (பிரிவு) நடை பெற்றது. ஒவ்வொரு ஹீட்டிலும் தலா 9 வீரர் கள் இடம்பிடித்திருந்தனர்.

2-வது ஹீட்டில் இடம்பிடித்திருந்த அமெரிககாவின் ஜஸ்டின் காட்லின் 10.01 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து முதல் இடம் பிடித்தார். ஆன்டிகுவா அண்டு பார்புடா வீரர் டேனியல் பெய்லி 10.20 வினாடிகளில் கடந்து 2-வது இடம் பிடித்தார்.

7-வது ஹீட்டில் இடம்பிடித்திருந்த உசைன் போல்ட் 10.07 வினாடிகளில் கடந்து முதல் இடத்தை பிடித்துள்ளார். பஹ்ரைன் வீரர் அன்ட்ரீவ் பிஷெர் 10.12 வினாடிகளில் கடந்தார்.

6-வது ஹீட்டில் இடம்பிடித்திருந்த யோஹன பிளேக் 10.11 வினாடிகளில் கடந்து முதல் இடம் பிடித்தார். துருக்கி வீரர் ஹார்வெய் 10.14 வினாடிகளில் கடந்து 2-வது இடம் பிடித்தார்.

4-வது ஹீட்டில் கனடா வீரர் பந்தய தூரத்தை 10.04 வினாடிகளில் கடந்தார். 5-வது ஹீட்டில் ஐவரி கோஸ்ட் வீரர் 10.03 வினாடிகளில் கட்ந்தார். காட்லின் உடன் இணைந்து இவர்களும் போல்டிற்கு கடும் நெருக்கடி கொடுப்பார்கள். (க)

# கீழே விழுந்தும் விடாமுயற்சியால் தங்கம் வென்ற பிரித்தானிய வீரர்



பிரேசிலில் நடந்து வரும் ரியோ ஒலிம்பிக் போட்டியில் 10 ஆயிரம் மீற்றர் மாரத்தான் ஓட்டத்தில் கலந்து கொண்ட பிரித்தானிய வீரர் மொகமது பராக் விடாமுயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கியுள்ளார்.

ரியோவில் ஒலிம்பிக் தொடரில் நேறறு ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது.

இதில் பிரித்தானிய நாட்டின் சார்பில் மொகமது பராக் கலந்து கொண்டார். வெற்றியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த பராக், 10 ஆயிரம் மீற்றர் இலக்கை நெருங்கும் போது நிலைதடுமாறி கீழே விழுந்தார்.

இதனால் மற்றைய வீரர்கள் அனைவரும் அவரைத் தாண்டி வேகமாக சென்று கொண்டிருந்தனர். இருப்பினும் போராட்டத்தை எளிதில் விட்டுக் கொடுக்காத பராக் விடா முயற்சியால் எழுந்து மீண்டும் வேகமாக ஓடி முதல் இடம் பிடித்து தங்க பதக்கம் வென்றார்.

கீழே விழுந்த பிறகும் தனது முயற்சியால் வெற்றி பெற்ற பராக் தனது நாட்டிற்காக வரலாற்று சாதனையைப் படைத்தார். இதற்கு முன் தடகளத்தில் பிரித்தானிய வீரர்கள் மூன்று தங்க பதக்கம் வென்றது கிடையாது. தற்போது முதன்முறையாக பராக் மூன்று தங்க பதக்கங்கள் வென்று வரலாற்று சாதனைப் படைத்துள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் 5 ஆயிரம் மற்றும் 10 ஆயிரம் மீற்றர் மாரத்தான் போட்டியில் தங்கம் வென்றிருந்தார். (க)

# இங்கிலாந்தை வீழ்த்தியது பாகிஸ்தான் தொடர் சமநிலையில் முடிவுற்றது

ஓவல் டெஸ்டில் பாகிஸ்தான் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 2-2 என சமநிலைப்படுத்தியது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. ஏற்கெனவே நடைபெற்று முடிந்த மூன்று போட்டிகளின் முடிவில் இங்கிலாந்து 2-1 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் கடந்த 11ஆம் திகதி 4-வது மற்றும் கடைசி டெஸ்ட் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்று முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 328 ரன்கள் சேர்த்தது. பின்னர் விளையாடிய பாகிஸ்தான் அணி யூனிஸ்கான் இரட்டை சதத்தால் 542 ரன்கள் குவித்தது.

214 ரன்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து அணி 2-வது இன்னிங்சை தொடங்கியது. யசீர் ஷாவின் அபார பந்து வீச்சால் இங்கிலாந்து அணி 253 ரன்னில் சுருண்டது. யசீர் ஷா ஐந்து விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

இதனால் இங்கிலாந்து அணி இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து 39 ரன்களே முன்னிலை பெற்றிருந்தது. இதனால் பாகிஸ்தான 40 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2-வது இன்னிங்சை தொடங்கியது.

அந்த அணியின் தொடக்க வீரர்கள் அசார் அலி (30), சமி அஸ்லாம் (12) ஆகியோர் விக்கெட் ஏதும் இழக்காமல் 42 ரன்கள் சேர்த்தனர். இதனால் பாகிஸ்தான் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது, அத்துடன் தொடரை 2-2 என சமன் படுத்தியது. இரட்டை சதம் அடித்த யூனிஸ்கான் ஆட்ட நாயகன் விருது பெற்றார். தொடர் நாயகனாக வோக்ஸ் மற்றும் மிஸ்பா தெரிவாகினர். (க)

# பெண்களுக்கான ஓட்டம் ஜமைக்கா தங்கப் பதக்கம்




ரியோ ஒலிம்பிக்கில் 100 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்பந்தய போட்டியில் ஜமைக்கா வீராங்கனை தங்கம் வென்று அசத்தியுள்ளார்.

பிரேசிலில் நடைபெற்று வரும் ரியோ ஒலிம்பிக்கில் தடகள போட்டிகள் நடைபெற்றது.

இதில் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தய போட்டியில், இறுதி சுற்றுக்கு ஜமைக்காவை சேர்ந்த Elaine Thompson (24), இரு முறை ஜமைக்கா நாட்டிற்கு தங்கம் பெற்று தந்த Fraser-Pryce மற்றும் அமெரிக்காவின் Tori Bowie பங்குபெற்றனர்.

ஆட்டத்தின் ஆரம்பத்திலே அனல் பறக்க ஓடிய Elaine Thompson பந்தைய தூரத்தை 10.71 வினாடிகளில் கடந்து முதல் இடம் பிடித்து தங்கம் வென்றார். இரண்டாவது இடத்தில் அமெரிக்காவின் Tori Bowie 10.83 வினாடிகளில் கடந்து வெள்ளி வென்றார்.

ஜமைக்கா சார்பில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட Fraser-Pryce மூன்றாவது இடம் பிடித்து வெண்கல பதக்கம் வென்றார்.

இது குறித்து Elaine Thompson கூறியதாவது, இந்த வெற்றியை எப்படி கொண்டாடப் போகிறேன் என்றே தெரியவில்லை என்று கூறியுள்ளார். மேலும் ஜமைக்கா சார்பில் பங்குபற்றி மூன்றாவது இடம் பிடித்த Fraser-Pryce ஹாட்ரிக் தங்கம் பெறும் வாய்ப்பை இழந்தார்.

இவர் கடந்த 2008 மற்றும் 2012 ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# ஆட்டோ மீது முறிந்து விழுந்த தென்னைமரம்; ஒருவர் பலி, மூவர் படுகாயம்

திருக்கோவில் - தம்பட்டை பிரதேசத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த ஆட்டோ மீது நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு தென்னைமரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில்,. ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில், விநாயகபுரம் 2ம் பிரிவு கற்புகனார் வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய சிவகுமார் வினோஜன் என்பவரே பலியாகியுள்ளதாக தெரியவந்துள்ளது.

. திருக்கோவிலில் இருந்து அக்கரைப் பற்றுக்கு ஆட்டோ ஒன்றில் சாரதி உட்பட நால்வர் சென்று கொண்டிருந்தபோது திடீரென பலத்த காற்று வீசியுள்ளது.

இதனால் வீதிக்கு அருகாமையில் இருந்த தென்னை மரம் ஒன்று ஆட்டோ மீது முறிந்து வீழ்ந்தது.

இதனையடுத்து. இதில் பயணித்த நால்வரும் படுகாயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (இ-5)


## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் (கோப்பாய் பெற்றோல் செற்றுக்கு முன்பாக) 3 1/2 பரப்பு காணிக்குள் அழகிய வீட்டுடன் பயன்தரு மரங்களும் உண்டு.

உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

0771041151, 0766571899

(5583)

## வைத்தியம்

உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல், தலைமுடி உதிர்தல், ஆஸ்துமா, சலரோகம், பாரிசவாதம், குழந்தையின்மை, ஆண் மைக் குறைபாடுகள், தாம்பத்திய திருப்தி யின்மை, மாதவிடாய் குறைபாடுகள், வெள் ளைபடுதல், தழும்புகள் மறைய, முள்ளந் தண்டு நசிவுகள் குணமாக. (5472)

தொடர்பு:- Shan's Health Care, 255, K.K.S. Road, Kokuvil, Jaffna.

T.P: 077 035 7307(முன் பதிவு அவசியம்)

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை

021 222 8117, 077 900 8776

வவனியாவில்: (024) 324 4444

(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


# 101 ஆவது பிறந்த நாளும் 17 ஆம் ஆண்டு நினைவுகளும்

பிறப்பு 15.08.1915 — இறப்பு 14.02.1999



## அமரர் பிலிப் மரியநாயகம்

*வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த தெய்வமே*
*எம் இல்லத்தின் ஒளிவிளக்காய் குடும்பத்தின் கோபுரமாய்*
*வாழ்ந்த நாட்களை எண்ணி ஏங்கி தவிக்கின்றோம்*

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 95, கட்சன் வீதியை வதிவிடமாகக் கொண்ட அமரர் திரு.பிலிப் மரியநாயகம் அவர்களின் 101 ஆம் பிறந்த தின நாளும் 17 ஆவது நினைவு தின நாளில் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள்:-அன்ரன் யோசப், மரியநாயகம் போல்
மருமக்கள்:- மரிஸ்ரலா மதுரம், கிறிஸ்ரீன் ஜனகலஷ்சுமி
பேரப்பிள்ளைகள்-மறிஷா மிருனாலினி-யூட் நிமலேந்திரன், டிலோஜென், லோஜினி, நிருஷா, நிருனாலினி, நிரோஷன்
பூட்டப்பிள்ளைகள்-றியானா, றெனோஜன், நிவர்ஸ்த்திகா, ரோசன், கீத், இயோன்.

225, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(5611)

# இராசி பலன்

15.08.2016
(ஆடி 31,திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
துவாதசி பிற்பகல் 4.58 மணிவரை
பூராடம் பின்னிரவு 12.45மணிவரை
சுப நேரம்-12.05-1.35மணிவரை
இராகு காலம் 7.35-9.05மணிவரை
பிரதோச விரதம், ஸ்ரீபத்மாவதி அம்மா பிறந்த தினம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரோகிணி மிருகசீரிடம் | | சூரி |
| | | | ராகு சுக். புத |
| சந் | சனி செவ் | | குரு |

**மீனம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், செய் தொழிலில் சிறப்புக்கள் கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

**மேடம்** விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தொழில் சம்பந்தமாக எடுத்த திட்டங்கள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்பு உண்டு.

**இடபம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், பழைய சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை ஏற்படும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணிய படி கைகூடலாம், வருமானம் திருப்தி தரும், தூரிய நன்மையுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**கடகம்** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், காரிய அனுகூலம் உண்டு, மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடி கொள்ளும், கௌரவமான நாள்.

**மகரம்** உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், இறை வழிபாட்டுச் சிந்தனை உருவாகும், திட்டமிட்ட காரியங்களில் மாற்றம் ஏற்படலாம்.

**சிம்மம்** பிள்ளைகள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**தனுசு** உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு ஆச்சரியப்பட வைக்கும், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், நல்ல காரியத்திற்கு பிள்ளையார் சுழி போடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள வழியில் உற்சாகமான தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** பெற்றோர் மீது பிரியம் கூடும், வாகன சுகமுண்டு, சுப காரியச் செலவுகளில் அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு , முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.



தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் உபகுழுவினர் நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் பொது அமைப்புக்கள், சங்கங்கள் எனப் பலதரப்பட்ட மக்கள் அமைப்புக்களுடன் தமிழரின் இன்றைய நிலையில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய மக்கள் அணிதிரட்டல்கள் சம்பந்தமாக கலந்தாலோசித்த போது... (படங்கள்:-பொ.சோபிகா)

# சிங்களத் தலைவர்கள் யாராக இருந்தாலும் எமக்கான தீர்வைத் தரப் போவதில்லை

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எம். பி. சாள்ஸ் தெரிவிப்பு



(கரணவாய்)

**எமக்கு ஒரு தலைவன் இருந்தான். அவன் மூலம் எங்களுக்கு ஒரு கௌரவமான வாழ்க்கை வரும் என நினைத்தோம். ஆனால் மீண் டும் ஒரு இனத்தின் கீழ் அடிமைகளாக வாழ்வோம் என யாரும் சிந்திக்கவில்லை. எங்களது இனம் காப்பாற்றப்படுவதற்கு அரசியல் ரீதியாக எடுக்கப்படுகின்ற முயற்சிகள் எந்தளவிற்குச் சாத்தியப் படுமோ தெரியாது. சிங்களத் தலைவர்கள் யாராக இருந்தாலும் எமக்கான தீர்வைத் தரப் போவதில்லை. இதுவே வெளிப்படை யான உண்மை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**

மறந்திருமோமணதைவிட்டு என்னும் கவி நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் வல்வெட்டித் துறை அ.மி.த.க. பாடசாலையில் நடை பெற்ற போது பிரதம விருந்தினராக் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழினியினுடைய நூல் வெளியீட்டை ஒரு திட்டமிட்ட இராணுவப் புலனாய்வாளர்களால் வெளியிடப்பட்ட நூல் வெளியீடாகத் தான் நான் பார்க்கிறேன். அது உண்மையான விடயமும் கூட. ஏனெனில் அவரை நான் நன்கு அறிவேன். அவர் அப்படியான நூல் ஒன்றை எழுதியிருக்க மாட்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினைக் கொஞ்சப்படுத்தியே கூர்வால் என்கின்ற அந்த நூல் வெளி யிடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் வீரம் நிறைந்த மண்ணாக அடம்பன்காணப்பட்டது அதேபோன்று யாழ்ப்பாணத்திலே வீரம் நிறைந்த மண்ணாக வல்வெட்டித் துறை இருக்கிறது.

அவ்வாறான வீரம் நிறைந்த மண்ணான அடம்பனிலேயே பிறந்து வல்வெட்டித் துறையிலேயே திருமணம் செய்த ஒருவர் கூர்வாளில் நிழலிலேயே என்ற நூலினை எழுதியிருக்க மாட்டார்.

எமது இனத்தின் அடையாளங்களைக் காப்பாற்ற வேண்டிய தேவை உங்களது கைகளிலேயே உள்ளது.

எமக்கு ஒரு தலைவன் இருந்தான். அவன் மூலம் எங்களுக்கு ஒரு கௌரவமான வாழ்க்கைவரும் என நினைத்தோம். ஆனால் மீண்டும் இவ்வாறு ஒரு இனத்தின் கீழ் அடிமையாக வருவோம் என யாரும் சிந்திக்கவில்லை.

எங்களது இனம் காப்பாற்றப்படுவதற்கு அரசியல் ரீதியாக எடுக்கப்படுகின்ற முயற்சிகள் எவ்வளவு சாத்தியப்படுமோ தெரியாது. சிங்களத் தலைவர்கள் யாராக இருந்தாலும் எமக்கான தீர்வைத் தரப் போவதில்லை. இதுவெளிப்படையான உண்மை.

இப்படியான சூழலில் இருந்து எமது மக்களை எப்படிக் காப்பாற்றப் போகின்றோம் என்கின்ற கடப்பாடு எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே நாம் எல்லோரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்.

எமக்குள்ளே ஒற் றுமையின்மை இருக்கிறது. விட்டுக் கொடுத்துப் பார்க்க வேண்டும். எமது மக்கள் பிரதி நிதிகள் மத்தியில் விட்டுக்கொடுப்பு என்பது மிக மிகத் தேவையாக உள்ளது.

இன்று எமது மக்கள் பிரதிநிதிகள் தமக்குள்ளே விரோதங்களை வைத்துக் கொண்டு தங்களது கோபாவேசங்களை வெளிக் கொணர்கிறார்கள். இது நிச்சயமாகப் போராடி மடிந்த மாவீரர்களுக்கு செய்கின்ற துரோகமாகத் தான் நான் பார்க்கின்றேன்.

எந்த அரசியல் கட்சியாலும் தமிழ் மக்களிற்கு விடுதலைகிடைக்கவேண்டும்என்றே அரசியலுக்கு வந்தவர்கள். ஆனால் இன்று ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித்துவமான முறையில் செயற்பட்டு வருகின்றது. இது எமது தமிழின வரலாற்றில் ஆக்க பூர்வமான செயலாகக் கருத முடியாது. எல்லோரும் இணை ந்து விட்டுக் கொடுப்புடன் செயற்பட்டால் எமது தலைவர் நினைத்ததை நாம் அடைவதற்கான அல்லது அதிலும் குறை வானதை அடைவதற்கு முதலில் எங்களுக்குள் ஒரு ஒற்றுமை வேண்டும். அந்த ஒற்றுமை இல்லாத பட்டசத்தில் எமது இனத்திற்கு எதுவும் வந்து சேராது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சாரணர் நூற்றா ண்டு விழாவினை முன்னிட்டு அண்மையில் நடத்தப்பட்ட இரத்ததான முகாமின் போது சாரண பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இரத்ததானம் செய்ததைப் படத்தில் காணலாம்




## புராண இசை நாடகங்கள்

அளவெட்டி நாகவரத நாராயணர் கோவில் வருடாந்த மஹோற்சவத் திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம் வழங்கும் புராண இசை நாடகங்கள், கூத்துக்கள் என்பன இம்முறை இடம்பெறவுள்ளன. ஆலய முன்றலில் , தினமும் இரவு 7.30 மணி தொடக்கம் 10 மணிவரை இடம் பெறவுள்ள நிகழ்வுகளில் கொடியேற்றத்திருவிழாவானநாளைசெவ்வாய்க்கிழமை இரவு ஸ்ரீவள்ளி திருமணம் இடம் பெறும். (இ-3)

## புனரமைப்பு பணிகளை பூரணப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கவும்



வடமராட்சிக்கிழக்கு மாமுனை கட்டைக்காடு- வெற்றிலைக்கேணி வீரகத்தியர் தொடுவாய்ப்பகுதியில்பாலங்கள் அமைக்கும் பணி இதுவரை முற்றுப் பெறாதநிலையில்உள்ளது.

இதனால் பொது மக்கள் குறித்த பாலத்தின் ஊடாக போக்குவரத்துச் செய்ய முடியாமல் அவதிப்படுகின்றனர்.

மழைகாலங்களில் வெள்ளம் தேங்கிநிற்பதாகவும் போக்குவரத்து மேற்கொள்ள முடியாமல் அவதிப்படுவதாகவும் மக்களால் ஏற்கனவே முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டன.

இதற்கமைவாக அந்த இடத்தில் இரண்டுபாலங்கள் அமைத்தல், சுமார் 200 மீற்றர் நீளம் கொண்ட பகுதியை கிரவல் கொண்டு செப்பனிடுதல் போன்றவற்றிற்காக வடக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீட்டின் மூலம் 90 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண சபையின் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் இவ்வீதி வேலைக்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

ஆனால் தற்போது வீதி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையாகக் காணப்படுவதோடு வீதி வேலைக்கான சல்லி, கருங்கல், கிரவல் என்பன வீதியோரங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. இதனால் இவ்வீதியின் ஊடாக போக்குவரத்து செய்வது மிகுந்த சிரமத்தைத் தருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் மாரிகாலம் அண்மித்து வருகின்றமையால் இவ் வீதி வேலைகளை விரைவாகச் செய்து முடிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-64)

## மிக் விமான ஆவணங்கள் மாயம் குறித்து

# முன்னாள் விமானப்படை தளபதிகளிடம் விசாரணை

(கொழும்பு)

**மிக்-27 போர் விமானங்களின் கொள்வனவு தொடர்பான மூல ஆவணம் காணாமற்போனமை குறித்து, 2006 ஆம் ஆண்டுக்குப்பின்னர் பதவியில் இருந்த முன்னாள் விமானப்படைத்தளபதிகளிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.**

2005ஆம் ஆண்டு மிக்-27 போர் விமர்னங்க்ளைக் கொள்வனவு செய்ததில் முறைகேடுகள் இடம்பெற்றது தொடர்பாக கொழும்பு கோட்டே நீதிமன்றத்தில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த முறைகேடு குறித்து நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தநிலையில் மிக் போர் விமானக் கொள்வனவு தொடர்பான மூல ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு விமானப் படைக்கு கடந்த ஜூன் மாதம் நீதிமன்றம் உத்தரவிட்டது.

எனினும், மிக்-27 போர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டது தொடர்பான மூல ஆவணங்கள் காணாமற்போய் விட்டதாக விமானப்படை சார்பில் முன்னிலையான சட்ட அதிகாரி கடந்த ஜூலை 27ஆம் திகதி நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்தினார்.

இதுகுறித்து விசாரிக்க விமானப்படை விசாரணை நீதிமன்றம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், கடந்த 8ஆம் திகதி இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட கோட்டே நீதவான், மிக் விமானக் கொள்வனவு குறித்த மூல ஆவணங்கள் எவ்வாறு காணாமற்போயின என்பது தொடர்பாக நிதிக் குற்ற விசாரணைப்பிரிவினர் விசாரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

ஆவணங்களை மறைத்து, இந்த விசாரணைகளைக் குழப்ப எவர் நடவடிக்கை எடுத்திருந்தாலும், அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் நீதவான் பணித்துள்ளார்.

இதனிடையே, மிக் கொள்வனவு ஆவணங்கள் காணாமற்போனமை தொடர்பாக, விமானப்படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்படும் நிலையை எதிர் நோக்கியுள்ளார்.

இந்த முறைகேடு குறித்து ரவி வைத்தியாலங்கார தலைமையிலான நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு, விசாரித்து வருகிறது.

இந்த விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் ககன் புலத்சிங்களவிடம், ரவி வைத்தியாலங்கார கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5-7)

## யாழ்ப்பாணம்-கொழும்பு புகையிரதங்களுக்கு ஆயுதம் தாங்கிய காவலர்களின் பாதுகாப்பு

யாழ்ப்பாணம்-, கொழும்பு புகையிரதங்கள் மீது தொடர்ந்தும் கல்லெறித் தாக்குதல்கள் நடத்தப்பட்ட நிலையில் அந்த புகையிரதங்களுக்கு ஆயுதம் தாங்கிய காவலர்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமையும் தாக்குதல் நடத்தப்பட்டமையை அடுத்தே நேற்று முன்தினம் ஆயுதம் தாங்கிய காவலர்கள் பணிகளில்ஈடுபடுத்தப்பட்டனர்.

அண்மையில் வவுனியாவை நோக்கிச் சென்ற புகையிரதம் ஒன்றின் மீது கொழும்பின் புறநகர் ஒரு கொடவத்தையில் வைத்து நடத்தப்பட்ட கல்லெறித் தாக்குதலின்போது அநுராதபுரத்தைச் சேர்ந்த கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

இந்நிலையில் திட்டமிட்ட அடிப்படையில் இந்த தாக்குதல் நடத்தப்படுவதாக புகையிரதக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இதனையடுத்தே தூரச் செல்லும் புகையிரதங்களுக்கு ஆயுதங்களுடன் கூடிய பாதுகாவலர்களின் பாதுகாப்பு நேற்று முன்தினம் முதல் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-7)

## அமெரிக்காவிலுள்ள இலங்கை தூதரக அதிகாரி ஒரு இலட்சம் டொலர் மோசடி

அமெரிக்காவிலுள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர், சுமார் ஒரு இலட்சம் டொலர்கள் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகளுக்கான விஜயம் என்ற போர்வையிலேயே இந்த மோசடி இடம் பெற்றுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் 2005ஆம் ஆண்டில் இருந்து ஐக்கிய நாடுகள் சபைக்கு மேற்கொண்ட விஜயங்கள் தொடர்பான விபரங்களை அண்மையில் அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதன்போது பல ஆவணங்கள் காணாமல் போயுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டு தாம் வெளியுறவு அமைச்சராக இருந்தபோது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் 142 பேரைக் கொண்ட குழு ஒன்று ஐக்கிய நாடுகள் சபைக்கு சென்றது. எனினும், வெளியுறவு அமைச்சின் ஆவணத்தில் 71 பேரே மகிந்தவுடன் சென்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ-5-7)

## வர்த்தகர்களிடம் கப்பம் பெற்ற யோஷித

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அவரது இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்ஷ, வர்த்தகர்களிடம் கப்பம் பெற்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

நண்பர்களில் ஒருவரான வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் வர்த்தகர் ஒருவரின் மகனிடம் யோஷித ராஜபக்ஷ கப்பம் பெற்றுள்ளார்.

சுரேஷ் எதிரிசிங்க என்ற யோஷிதவின் நண்பரின் வங்கிக்கணக்கில் இருந்து யோஷித ர்ராஜபக்ஷவின் வங்கிக்கணக்கிற்கு 4 மில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு நடத்திய விசாரணைகளில் யோஷித இந்த பணத்தை கப்பமாக பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த பணத்தை யோஷிதவின் வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யுமாறு தனது தந்தையிடம் கூறியுள்ள சுரேஷ் எதிரிசிங்க, அந்த பணம் திரும்ப கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார். எனினும் அந்த பணத்தை யோஷித ராஜபக்ஷ திருப்பி தரவில்லை எனவும் அதனை கப்பப்பணமாக வைத்துக்கொண்டதாகவும் சுரேஷ் எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (இ-5-7)


## கல்யாண மாலை


இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 19 செவ் 8 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்<br>தொ.இ: B/4862 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 48 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: G/622 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 5<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BIT/அரச தொழில்<br>தொ.இ: B/4884 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 25<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BA, MA, HNDE, PGDE/விரிவுரையாளர்<br>தொ.இ: G/631 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 51 செவ் 8 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L/கனடா<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/4892 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 36 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BFA, MA/ஆசிரியர்<br>தொ.இ: G/633 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 60 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/4895 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 58 செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/641 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

## தமிழர்களின் பூர்வீக நிலங்களை

# சிங்கள பௌத்த மயமாக்கும் நோக்கில் விகாரைகள், புத்த சிலைகள் அமைப்பு



(பரந்தன்)

தமிழர்களை இனச் சுத்திகரிப்பு செய்வதற்கான ஒரு அங்கமே கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலயத்திற்கு அருகில் அமைக்கப்படும் புத்தகோவில் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலயச் சூழலில் இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரையை அண்மையில்பார்வையிட்ட பின்னர் கருத் துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழர்களின் பூர்வீக நிலங்களைச் சிங்கள பௌத்த மயமாக்கும் நோக்கத்துடனேயே இராணுவத்தின் துணையுடன் பௌத்த விகாரைகளும் புத்தர் சிலைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஒரு வீதம் கூட பௌத்தர்கள் இல்லாத தமிழர்களை மட்டும் கொண்ட பகுதியில் இப்படியான பிரமாண்டமான பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாகவும் இதே நடவடிக்கைகள் தொடருமாயின் சில காலத்தில் தமிழர்களது கலாசாரம் அழிக்கப்பட்டு. தமிழர்கள் என்றொரு இனம் இங்கு வாழ்ந்துள்ளதா? என்ற நிலைதான் ஏற்படும்.

பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிக்குள் செல்ல முடியாதவாறு இராணுவத்தினரால் முட்கம்பி வேலியும் மதிலும் அமைக்கப்பட்டுத் தடுக்கப்பட்டுள்ளதுடன் காவலுக்கும் ஆயுதம் தரித்த இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் அப்பகுதிக்குச் செல்ல முடியாது முட்கம்பி வேலிக்கு அப்பால் நின்று பௌத்த விகாரையின் கட்டுமான வேலைகள் இடம்பெற்று வருவதை பாராளுமன்ற உறுப்பினர் பார்வையிட்டார்.

தமிழர்களுடைய பாரம்பரிய வழிபாட்டிடமான வரலாற்றுச் சிறப்பு மிக்க கனகாம்பிகை அம்மன் ஆலயத்தின் மகிமையை அழிப்பதற்காக இராணுவ இயந்திரத்தை வைத்து அரசாங்கத்தால் திட்டமிட்ட வகையில் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்திற்குரிய காணியில் இராணுவம் பிரதேச சபையிடமோ ஆலயத்திடமோ அனுமதி எதுவும் பெறப்படாமல் அரசாங்கச் சட்டங்களை மீறிய வகையில் சட்ட விரோதமாக மதில் அமைத்துள்ளது. அதற்குள் சட்ட விரோதமாக, அடாத்தாக பௌத்த விகாரை அமைக்கின்றது.

நொந்துபோயுள்ள தமிழர்களை மேலும் நோகடிப்பதிலும் நல்லாட்சி என்னும் போர்வையில் தமிழர்களை நாசமாக்குவதிலும் இந்த அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக நான் ஜனாதிபதிக்கு கடித மூலமாகவும் தெரியப்படுத்தியுள்ளேன், பிரதேச சபையிடமும் அறிவித்துள்ளேன். சாதாரண பொது மக்கள் ஒரு மதில் கட்டுவதற்கு, வீடுகட்டுவதற்கு அனுமதி பெறப்படாது விட்டால் தண்டங்கள் அறவிடப்படும் போது இராணுவத்தினர் மாத்திரம் எந்தவித அனுமதியும் பெறப்படாது பாரிய பௌத்த விகாரையையும் அடாத்தாக அமைப்பதற்கும் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? என நான் எழுத்து மூலம் கேட்டுள்ளேன்.

அரசாங்கம் உலக நாடுகளுக்குத் தமது நல்லெண்ணம் வெளிப்படுவது போலக் காட்டிக்கொண்டு தமிழர் தாயகப் பகுதிகளை ஆக்கிரமித்துச் சிங்களக் குடியேற்றங்களையும் ஆக்கிரமிப்புச் சின்னங்களையும் இராணுவ முகாம்களையும் விஸ்தரித்துக்கொண்டுள்ள நிலை மிகவும் அபாயகரமானது.

இத்தனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இது தொடர்பில் நாங்கள் தொடர்ந்தும் எமது நடவடிக்கைகளை மேற்கொள்வோம், எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்டப் பொது அமைப்புக்களால் தமிழர்களுக்கு சர்வதேச நீதி வேண்டியும் தமிழர்களுடைய இருப்பை வலியுறுத்தியும் ஆக்கிரமிப்புக்களுக்கு எதிராக முன்னெடுக்கவுள்ள நீதிக்கான நடைபயணத்திற்கு நாம் முழு ஆதரவை வழங்கவுள்ளோம். தமிழர் தாயக ஆக்கிரமிப்புக்களை நாம் அனுமதிக்க முடியாது என்றார்.

இதனைத் தொடர்ந்து, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மாவட்ட அமைப்பாளர் அ.வேழமாலிகிதன், மத்திய செயற்குழு உறுப்பினர் க.ஜெயக்குமார், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சுப்பையா ஆகியோர் குறித்த விகாரை அமைக்கப்படும் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டனர். (2-312)




## கார் - மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் வைத்தியசாலையில்



(பரந்தன்)

கிளிநொச்சி இந்துபுரம் பகுதியில் நடைபெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த காரும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இவ்விபத்து நேர்ந்துள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் காயமடைந்த இருபத்து இரண்டு வயதான கிளிநொச்சி கிருஸ்ணபுரத்தைச் சேர்ந்த இளைஞராவார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-312)

## பரீட்சை நிலையங்களை அண்மித்த பகுதிகளில் ஒலிகளை எழுப்பி இடையூறு விளைவிக்காதீர்

### வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் வேண்டுகோள்

(பனிக்கன்குளம்)


க.பொ.த. உயர்தர பரீட்சை நடைபெறும் நிலையங்களை அண்மித்த பகுதிகளில் மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்களது எதிர்காலத்தை நிர்ணயிக்கும் மிக முக்கியமான உயர்தர பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், இப பரீட்சையில் மாணவர்கள் சித்திபெற வேண்டி, மாணவர்களது பெற்றோர்களும் ஆசிரியர்களும் மிகுந்த ஆர்வம்காட்டிவரும் குறித்த தருணத்தில் பல பரீட்சை நிலையங்களை அண்மித்த பகுதிகளில் வாகனங்கள் மற்றும் ஆட்டோக்களினாலும் ஒரு சில பொதுமக்களினாலும் அதிக ஒலிகளை எழுப்பியும், பாடல்களை இசைத்தும் இடையூறுகளை விளைவிப்பதாக பல்வேறு தரப்பினராலும் முறையிடப்பட்டுள்ளது.

இவ் விடயத்தை கருத்தில் எடுத்த வடக்கு போக்குவரத்து அமைச்சர் உடனடியாக வாகன உரிமையாளர்கள், சாரதிகள், ஆட்டோச் சாரதிகள் பாடசாலைகளுக்கு அண்மித்த வியாபார நிலையங்கள் உட்பட அனைவரும் பாடசாலைகளுக்கு அண்மித்த பகுதிகளில் ஒலியெழுப்பாது அமைதியைப்பேணி, எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன், இவ்வாறு இடையூறு விளைவிப்பவர்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி பொலிஸாரினால் முறியடிப்பு

## சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதானார் 6 பரல்கள், 31 கசிப்பு போத்தல்கள் மீட்பு



(மல்லாவி)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 8 ஆம் யூனிட் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோத கசிப்பு உற்பத்தி பொலிஸாரால் முறியடிக்கப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கசிப்பு உற்பத்தி நடைபெற்ற இடத்திலிருந்து 6 பரல்கள், 31 கசிப்பு போத்தல்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டன.

குறித்த சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த 6 பரல் கோடாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கோடாவினை தயாரித்த நபர் தொடர்பிலான் விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(2-15-312)

## 'சிரம சக்தி' வேலைத் திட்டப் போட்டியில்

# மாவட்டமட்ட போட்டியில் 16 வேலைத்திட்டங்கள் தெரிவு

(மல்லாவி)

தேசிய இளைஞர் மன்றத்தினால் நாடு தழுவிய ரீதியில் உள்ள இளைஞர் கழகங்களுக்கு இடையில் முன்னெடுத்துள்ள **சிரம சக்தி** வேலைத் திட்டம் போட்டியில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்டப் பிரிவினரால் மாவட்ட மட்டத்திலுள்ள ஆறு பிரதேச செயலக பிரிவுகளில் இருந்தும் 30 வேலைத் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு, மாவட்ட மட்டப் போட்டியில் 16 வேலைத் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட அதிகாரி திருமதி. சரோஜா குகதாசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சிரமசக்தி வேலைத் திட்டப் போட்டிக்கு முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆறு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இளைஞர் கழகங்களில் இருந்து 118 வேலைத் திட்டங்கள் போட்டிக்காக முன்வைக்கப்பட்டன.

இவை பிரதேச ரீதியாக நடைபெற்று முடிந்த போட்டியில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்தும் தலா ஐந்து திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட மட்ட போட்டிக்கு 30 தெரிவாகியுள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற மாவட்ட மட்ட போட்டியில் 16 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு திட்டமும் தலா 75 ஆயிரம் ரூபா பணப்பரிசை வென்றெடுத்துள்ளது.

இந்த 75 ஆயிரம் ரூபா நிதியுடன் பிரதேச மட்ட ஒத்துழைப்புடன் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் மனித வலு மற்றும் பண உதவிகளைப் பெற்று இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியில் தம்மால் முன் வைக்கப்பட்ட வேலைத் திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்த வகையில் துணுக்காய் 3, மாந்தை கிழக்கு 2, ஒட்டுசுட்டான் 2, புதுக்குடியிருப்பு 3, கரைதுறைப்பற்று 3, வெலிஓயா ஒன்று என மொத்தம் 16 திட்டங்கள் தெரிவாகியுள்ளன.

மாகாண மட்டத்தில் வெற்றி யீட்டும் திட்டத்திற்கு 10 இலட்சம் ரூபா பணப்பரிசும் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டும் வேலைத் திட்டத்திற்கு ஒரு கோடி ரூபா பணப்பரிசு கிடைக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# சிறார்களுக்கு அறத்தை போதியுங்கள் பாராளுமன்ற உறுப்பினர் வலியுறுத்து

(முள்ளியவளை)

இன்றைய சந்ததியினர் அறத்தினை பின்பற்றாமையினாலேயே சமூகத்தில் பல வேண்டத்தகாத நிகழ்வுகள் நடைபெறுகின்றன. சிறார்களுக்கு அறத்தை போதிக்க வேண்டியது எமது தலையாய கடமை என.பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. சாந்தி ஸ்ரீஸ்கந்தாராஜா தெரிவித்துள்ளார்.



மாங்குளம் தச்சடம்பன் கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள புதியநகர் கிராமத்தில் மக்கள் குறைகேள் சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இத்தியடி சித்தி விநாயகர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா கலந்துகொண்டு அங்கு குடியிருக்கும் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்தார்.

இதன்போது மக்கள் தமது குறைபாடுகளாக பாடசாலை மாணவர்களிற்கான பேருந்து போக்குவரத்து சீரில்லை எனவும் பெண்களுக்கு தொழில் வாய்ப்பில்லை என்றும் இங்குள்ள உள்ளூர் வீதிகள் சீரில்லை,பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களிற்கு கல்வியைத் தொடர்வதற்கு உதவிகள் இல்லை. அத்துடன் சுயமாக தோட்டம்,நெற்பயிர்ச்செய்கைக்கு காணிகள் வழங்கப்படவில்லை போன்ற குறைபாடுகளை முன்வைத்தனர்.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்த பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவிக்கையில்,

. மாணவர்களுக்கும் பெண்களுக்குமான பேருந்து போக்குவரத்து பிரச்சினைக்கு உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு விரைவில் தீர்த்து வைக்கப்படும். தொழில் வாய்ப் பினை ஏற்படுத்துவதற்கு கூட்டுப் பண்ணை அமைத்தல் தொடர்பாக ஆராய்வதாகவும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கல்வியைத் தொடர்வதற்கு உதவித் திட்டங்களை ஒருங்கிணைத்துத் தருவதாகவும் உறுதியளித்தார்.

இத்தியடி சித்தி விநாயகர் ஆலய கட்டட வளர்ச்சிக்கு அடுத்த வருட பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இரண்டு இலட்சம் ரூபா நிதியினை ஒதுக்கீடு செய்வதாகவும் வாக்குறுதி வழங்கினார்.வீதிப் புனரமைப்புக் குறித்து உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொல்வதாகவும் கூறியதுடன் மேலும் இன்றைய சந்ததியினர் அறத்தினை பின்பற்றாமையினாலேயே சமூகத்தில் பல வேண்டத்தகாத நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

சிறார்களுக்கு அறத்தை போதிக்கவேண்டியது எமது தலையாய கடமை எனவும் எனவே இங்கு அறநெறியை போதிக்க உரிய வழிமுறைகளை மேற்கொள்ளுமாறும் அதற்கு தன்னாலான உதவிகளை புரிவதாகவும் கூறினார்.

இக்குறைகேள் மக்கள் சந்திப்பில் தச்சடம்பன் கிராம அலுவலர் உட்பட சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், மக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-302)




# செட்டிகுளத்தில் நடைபெற்று முடிந்த நல்லிணக்க செயலணியின் அமர்வு



(குருமன்காடு)

நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் மக்கள் கருத்தறியும் செயலணியின் அமர்வு நேற்று முன்தினம் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை இடம்பெற்று வருகின்றது.

சுமார் 100 இற்கும் அதிக மானவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த இக் கருத்தறியும் செயலமர்வில் காணாமல் போனோரின் உறவினர்கள் அதிகளவில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்திருந்தனர்.

இதேவேளை நல்லிணக்கத்திற்கான வழிவகைகள் தொடர்பில் பலர்கருத்துக்களை முன்வைத்திருந்த அதேவேளை முஸ்லிம்கள் எதிர்கொண்டு வரும் இடர்பாடுகள் தொடர்பிலும் ஒருவர் கருத்து தெரிவித்திருந்தார். (2-250)

# பரவிப்பாஞ்சான் மக்களின் இரவுபகல் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி காணி உரிமையாளர்கள் இரண்டாவது நாளான நேற்றைய தினமும் தமது கவன யீர்ப்பு தொடர் போராட்டத்தை இரவு பகலாக முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் முன்பாக ஆரம்பித்த போராட்டம் அமைதியான முறையில் நடைபெற்று வருகின்றது.

தமது காணியை விட்டு இராணுவம் வெளியேறி சொந்த இடத்தில் தம்மை குடியமர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி குறித்த பகுதி மக்கள் நேற்று முன்தினம் தொடக்கம் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.நேற்று முன்தினம் குறித்த பகுதிக்கு சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார்பொன்னம்பலம், செ.கஜேந்திரன் உள்ளிட்டோர் மக்களை சந்தித்து குறித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்தனர். (2-15)

# தொழில்வாய்ப்பின்றி இருப்போர் தமது விபரங்களைப் பதிவு செய்க

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட மட்டத்தில் தொழில் வாய்ப்பின்றி இருப்போர் விபரங்கள்திரட்ப்படுவதால்துணுக்காய், மாந்தை கிழக்கு , ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து 18 தொடக்கம் 45 வயதிற்கு ட்பட்ட இருபாலாரும் தத்தமது கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலகங்களில் பதிவுகளை மேற்கொள்ளமுடியுமென துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேச செயலாளர்கள் அறிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

தொழில்வாய்ப்பின்றி இருப்போர் விபரங்கள் கிராம ரீதியாக திரட்டப்பட்டு பின்னர் அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாறு திரட்டப்படும் விபரத்தின் மூலம் எதிர்காலத்தில் மாவட்டம், மாகாணம், தேசியம் ஆகிய மட்டங்களில் ஏற்படுகின்ற தொழில் வாய்ப்புகளுக்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் திறமையின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

அத்துடன்வெளிநாடுகளில் உள்ள தொழில் நிலையங்களுக்கு அரசாங்கத்தினால் தொழிலாளர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றபோது மாவட்ட மட்டத்தில் தொழில் வாய்ப்பிற்காக பதிவில் உள்ளவர்கள் முன்னுரிமைப் படுத்தி அனுப்ப வைக்கப்படவுள்ளதாகவும்அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே 18 தொடக்கம் 45 வயதிற்குட்பட்ட வேலை வாய்ப்பின்றி இருக்கின்ற இருபாலாரும் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளுமாறு அவர்கள் கேட்டுள்ளனர். (2-15)

# மின்னொழுக்கினால் தீப்பற்றி வீடு முற்றாக எரிந்து நாசம்

முல்லைத்தீவு குமுழமுனை மத்தி கிராம சேவகர் பிரிவில் உள்ள விவசாயி ஒருவரின் வீடு மின்னொழுக்கு காரணமாக பொருட்கள் அனைத்தும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன.



இச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

இரவு வேளையில் ஏற்பட்ட மின்னொழ்க்கு காரணமாக சுகுமார் என்ற விவசாயியின் வீடே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளது.

வீட்டில் இருந்த அனைவரும் பாதுகாப்பாக வெளியேறியதன் காரணமாக எவருக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

வீட்டில் இருந்த பணம், நகை ,நெல்லு ,உழவியந்திர பெட்டி விவசாய உபகரணங்கள்,முக்கிய ஆவணங்கள் உள்ளிட்ட, சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து சாம்பலாயின.

இக் குடும்பம் விவசாயத்தையே வாழ்வாதாரமாக கொண்டுள்ள குடும்பம் என்பது குறிப்பிடத்தக்கது.(2-281)

# பூசகர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

இந்துக் கோயில் பூசகர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுவதாக கிளிநொச்சி மாவட்டத்தின் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தலைவர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சிநெறியை தொடர்வதற்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து பின்வரும் தகுதிகள் எதிர்பார்க்கப்படுகின் றன.

வன்னி நிலப்பரப்பை வதிவிடமாகக் கொண்டவர்களாகவும் ஆசாரசீலர்களாகவும் சைவ உணவு மட்டும் உண்பவர்களாகவும் குடிவகை, போதை வஸ்து பாவனை உட்பட எந்த வித தீய பழக்கங்களும் இல்லாதவராகவும் பிரபல சைவ சமயக்குடும்பபின்னணிஉடையவராகவும் சமூகத்தில் உயர்ந்த மதிப்புடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலும் ஆகக் குறைந்தது க.பொ.த. சாதாரண தரம் வரை கற்றவர்களாகவும் சிறந்த முறையில் எழுத வாசிக்க தெரிந்தவராகவும் பண்ணிசையில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இப் பயிற்சி நெறியானது ஒரு வதிவிடப் பயிற்சி நெறியாகும்.

ஆதலால் தங்குமிடம். உணவு உட்பட அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

தேவையான புத்தகங்கள் கொப்பிகள், எழுதுகருவிகள், உடைகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படும்.

பொறுமையும் தியாகமும் ஆன்மீகத்தில் ஈடுபாடும் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

தங்களுக்கிடையே ஒப்பந்தம் ஒன்று செய்யப்படும். இடையில் விலக முடியாது. பயிற்சி ஒரு வருடத்திற்குரியது. கோயில் வேலைகளில் இணைக்கப்பட்டு வெளிக்களப் பயிற்சி வ ழங்கப்படும்.

இதற்கான போக்குவரத்துப்படியும் பரீட்சை முடிவில் சான்றிதழும் வழங்கப்படும். இப்பயிற்சிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 05.09. 2016.

தங்களது குடும்ப விபரம், தங்களது சுய விபரம் கொண்ட சுய விபரக்கோவையை நீங்கள் எழுதி அனுப்புவதுடன் கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், ஊர்ப் பிரமுகர் இருவரது நற்சான்றிதழ் இணைத்து அனுப்புதல் வேண்டும். பயிற்சியாளர்கள் இரு சிவாச்சாரியார்கள் கொண்ட நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள். மேலும் விபரங்களுக்கு 077 060 4950, 021 492 3118 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள பெருமளவான கோயில்களுக்கு பூசகர் இல்லாத காரணத்தினால் இங்கு வரும் பக்தர்கள் பொது முறையான வழிபாடுகளையே மேற்கொள்கின்றனர். இதனால் ஆகம விதிமுறைப்படியான கோயில் வழிபாட்டு முறை தகர்ந்து வருகின்றது.

இவ்விடயம் தொடர்பில் சைவக்குருமார் ஒன்றியத்திடம் உதவி கோரிய போதும் பயனளிக்காது. தற்போது திருகோணமலைவிஸ்ணுகோவில் உரிமையாளரின் நிதியுதவியுடன் இந்தியாவிலிருந்து ஒரு வரும் பயிற்சி நெறிக்கான இரு சிவாச்சாரியர்களைக் கொண்டு இப் பயிற்சி கல்லூரி ஆரம்பிக்கப்படவுள்ளதாக மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தலைவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# ஆண்டு இரண்டானாலும் ஆறாது அம்மா உன் நினைவு



## திருமதி மகாலட்சுமி இராஜலிங்கம்

மலர்வு
27.08.1934

உதிர்வு
22.08.2014

### திதி: துவாதசி - 15.08.2016

கருவினில் எம்மைச் சுமந்திடும் போதே
கனவையும் சுமந்தவள் அம்மா– நாம்
திருவுடல் சுமந்து திரிந்திடக் கண்டு
திருமுகம் மலர்ந்தவள் அம்மா
உருவினைத் துறந்து உயிரினைப் பிழிந்து
எங்களை வளர்த்தவள் அம்மா– இன்று
அருகினில் இல்லாத் துயிரினில் நாங்கள்
அழுவதைப் பார்ப்பாளா அம்மா

இல்லையே என்று இரப்பவர்க் கெல்லாம்
ஈய்ந்து உவப்பவள் அம்மா– எந்தப்
பிள்ளையும் பெற்ற பிள்ளையே என்று
போற்றிக் காப்பவள் அம்மா
நல்லாள் என்றே நவின்றிட வாழ்ந்த
நாயகி எங்கள் அம்மா– நீ
இல்லையே என்று இயம்பிட எமக்கு
இதயம் இல்லையே அம்மா

நீராவி யடியில் நீவாழ்ந்த ஞாபகம்
நிழலாய் என்றும் நீளுமே– சொந்த
ஊரோடும் வாழ்ந்து உறவினைக் காத்த
உத்தமி நீயென்று கூறுமே
ஆறாத நினைவு அகலாது நெஞ்சில்
ஊற்றாகி எம்முள் ஊறுமே– என்றும்
மாறாத உந்தன் புன்னகை காண
மனம் தினம் வேகுமே

லிங்கம்மா என்று அழைத்திடும் போதே
அங்கம் குளிர்ந்திடு வாளே– தன்
இன்முகம் காட்டி சுகநலம் கேட்டு
அன்பாய் உபசரிப் பாளே
பண்பினைக் கூட பிள்ளைகள் எமக்கும்
பாடமாய் புகட்டிவிட் டாளே–நாம்
என்பெலாம் உருக அழுகிறோம் அம்மா
என்று நீ எமையடை வாயோ?

84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(க-5444)

குடும்பத்தினர்.

# செய்தித்துளிகள்

## புகையிரதம் மீது கல் வீசிய 4 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பு கோட்டை - கல்கிஸை நோக்கி பயணித்த புகையிரதம் மீது கொள்ளுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து கல் வீசிய 4 பேர் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டை புகையிரத பாதுகாப்பு பிரிவு படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-5-7)

## ஜனாதிபதியின் முடிவு 4ம் திகதி வெளியாகும்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முற்றிலும் புதிய வேலைத் திட்டத்துடன் பயணிப்பதாகவும், எதிர்வரும் 04 ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சியின் 65 ஆவது நிறைவு விழாவில் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பில் அறிவிக்கப்படும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.(இ-5-7)

## வருமானத்தை முடக்கும் நோக்கில் 29வழக்குகள்

தேசிய அரசாங்கத்திற்கு கிடைக்கும் வருமானத்தை முடக்கும் அல்லது தடுக்கும் நோக்கில் உச்ச நீதிமன்றில் 29 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

அரசாங்கத்திற்கு கிடைக்கும் பல்வேறு வருமானங்களை முடக்கும் நோக்கில் வரலாற்றில் முதல் தடவையாக இவ்வளவு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் இவ்வாறான சவால்களை எதிர்கொண்டு வெற்றியீட்ட அரசாங்கத்திற்கு சக்தியுண்டுஎன அரசதரப்பு தெரிவித்துள்ளது. (இ-5-7)

## கழிவுத் தேயிலையுடன் 7 பேர் கைது

வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கத்தில் கழிவுத் தேயிலை ஏற்றப்பட்ட லொறிகள் 3 கைப்பற்றப்பட்டுள்ளதுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பியகம பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட இவர்கள் கண்டி, கம்பளை மற்றும் நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுளளது. (இ-5-7)

## உரப்பையில் யுவதியின் சடலம்

எஹெலியகொட, பலிகல்லப் பிரதேசத்தில் 24 வயதுடைய யுவதியின் சடலம், உரப்பையொன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.


அவசர சேவைப் பிரிவு இலக்கமான 119 அழைப்புக்குக் கிடைத்த தகவலையடுத்து எஹெலியகொடப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்தவர், திகனப் பிரதேசத்தைச் சேர்ந்த ரங்கா ஜயசிங்க என அடையாளங்காணப்பட்டுள்ளார். (இ-5-7)

## இந்தியாவில் இலங்கை முதியவர் திடீர் மாயம்

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு யாத்திரைக்காகச் சென்ற முதியவர், டில்லி விமான நிலையத்தில் வைத்துக் காணாமற் போயுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனைப் பிரதேசத்தைச் சேர்ந்த, ராமநாயக்க முதியான் சலாகே ஜெயசேகர என்பவரே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.(இ-5)



# நல்லூர் ஆலய சூழலில் இன்று

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா இன்றும் பி.ப 3 மணி தொடக்கம் மாலை 6மணிவரை நடைபெறும்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணிப் பிரதேச செயலாளர் கே.கனகேஸ்வரன் கலந்து கொள்வார். இதில் சிறப்பு சொற்பொழிவினை வே.சிவராசா வழங்குவார். (இ-3)

## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் "தெய்வீகச் சொற்பொழிவு" இன்றும் இடம்பெறும்.

மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் சைவப்புலவர் க.கமலநாதன் "திருமுறையும் வாழ்வும்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க் கந்தனின் பெருந்திருவிழாவினை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7மணி முதல் 8 மணிவரை நடத்திவரும் தெய்வீக இசைச் சங்கமத்தில் இன்று திங்கட்கிழமை ஸ்ரீமதி வனஜா ஈஸ்வரசர்மா (வயலின்), செல்வி லிலித்யா ஈஸ்வரசர்மா, ஈஸ்வரசர்மா சிவராம் ஆகியோரின் இசைச் சமர்ப்பணம் இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை "நல்லைக்குமரன்" எனும் தலைப்பில் கவிமணி அன்னைதாஸன் சிறப்பு சொற்பொழிவாற்றுவார். (இ-7)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 15 ஆம் திகதி திங்கட்கிழமை பாட்டு-ர.சுரசாகத்தியன், வயலின் -கே.வேலவன், மிருதங்கம்- கே.பிரணவன் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

# மகாநாயக்க தேரர்களின் உதவியை நாட கூட்டு எதிர்க்கட்சியினர் முக்கிய தீர்மானம்

காணாமற்போனோர் அலுவலகம் குறித்த சட்டத்தை தடுக்க கூட்டு எதிர்க்கட்சியினர், பௌத்த மகாநாயக்க தேரர்களின் உதவியை நாடத் தீர்மானித்துள்ளனர்.

அண்மையில் நாடாளுமன்றில் காணாமற் போனோர் அலுவலகம் குறித்த சட்டம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.


இந்த அலுவலகம் அமைக்கும் பணிகளைத் தடுக்க மகாநாயக்க தேரர்களின் உதவியை நாடத் தீர்மானித்துள்ளனர்.

மகாநாயக்க தேரர்களின் ஊடாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அழுத்தங்களை பிரயோகிக்க கூட்டு எதிர்க்கட்சியினர் முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டை மீட்டு எடுத்த படைவீரர்களைக்காட்டிக் கொடுக்கும் வகையில் இந்த அலுவலகம் செயற்படும் என்பதனால் அதனை தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு மகாநாயக்க தேரர்களிடம் கோரப்படவுள்ளது.

இந்த அலுவலகம் அமைக்கும் பணிகளை நிறுத்துமாறு மகாநாயக்க தேரர்கள், கர்தினால் உள்ளிட்ட மதத் தலைவர்களின் ஊடாக கோரப்படும் என பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (இ-5-7)

# நல்லூரானுக்கு இன்று 8ஆம் திருவிழா



## சரவணனே சரணமப்பா

ஓடி வரும் அடியாரை முகம் மலர்ந்து
வரவேற்கும் சரவணனே சரணமப்பா
உன் கழலை பணிந்து விடும் அடியாரை
காத்திட வேண்டும் குமரனே சரணமப்பா
நம்மொழிப் புகழை உலகிற்கே அறியச் செய்த
தமிழ்க்கடவுளே வடிவேலனே சரணமப்பா
ஆடி வந்தே துதிக்கின்றோம் பாடி வந்தே பணிகின்றோம்
அருள் மழையைத் தாருமப்பா மயில்வாகனனே சரணமப்பா

-நி.கவிஅழகன், தாவடியூர்.

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

வானேது மண்ணேது வளியேது வொளியேது
வற்றாத வளங்களேது
தானாக நீநின்று காப்பதா லல்லவோ
தளராது கொழிக்குமீது
தேனாகப் பண்பாடு செண்பாக நின்றாடத்
திசையெட்டுந் திகழும்வேலே
நானேதான் என்றிங்கு நர்த்தன மாடிடும்
நல்லூரின் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்

## நலமிருந்து அருள்புரிவாய்



ஆறுபடை அழகை
அருந்தமிழில் உள்ளத்தில்
அன்பள்ளித் தூவவா
அருணகிரி அழைத்தபோது
அருள் தந்து காத்தவா
விண்ணவர் துயர் தீர்த்து
தெய்வயானையை மணந்தவா
மனமுருகி போற்றிடும்
மானிடர் வாழ்வில்
நலமிருத்தி அருள்புரியும்
நல்லூரான் சேவடி போற்றி

– க.சிவகுமார், சுழிபுரத்தூர்

## விடிவினைத்தந்து எமக்கு வழிகாட்டு நல்லைவேலா

குடிசைகள் எல்லாம் மாறி மாடிகளாகின்றன உண்மை
மாடியினர் கூட இங்கே கோடீஸ்வரராகின்றார் நன்மை
குபேரவாசற் திறப்பின் பின் ஏற்பட்ட மாற்றமென்று
நாவாரப் போற்றுகின்றார் நம்பும் அடியார் உன்னை
குடியொடு போதை காமம் குடிகளைக் கெடுக்காவண்ணம்
அடியவர் வாழ்வை என்றும் ஆனந்த மயமாக்கி இங்கே
விடிவினைத் தந்து எமக்கு வழிகாட்டு எங்கள்
துடியிடை வள்ளிவேலா தூயனே நல்லைவேலா

-கவிமணி அன்னதாஸன், ஊரெழு.

## தங்க பத்ம பீடம்தனில் அமர்வோனே

சித்திரத் தோகையும் கொள் வண்ண மயிலில்
வள்ளியும் தெய்வயானையொடும் மகிழ்வோடே
தங்க மகுடம் பதக்கம் அணிமணிகள் நிறைந்தே
தங்க பத்ம பீடந் தனில் அமர்வோனே

-த.அபிநாத்
தரம்-8B
யாழ்.இந்துக்கல்லூரி

# இந்தியாவில் 70வது சுதந்திரதினம் இன்று நாடு பூராகவும் கோலாகலக் கொண்டாட்டம்




இந்தியாவின் 70ஆவது சுதந்திர தின விழா இன்று திங்கட்கிழமை நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்படும். 70 ஆவது சுதந்திர தினத்தினை முன்னிட்டு இம்முறை தொடர்ச்சியாக 15 நாட்களுக்கு கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

அந்த வகையில், இன்று டில்லியில் உள்ள செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தேசிய கொடியை ஏற்றி வைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். இதேபோல் மாநில தலை நகரங்களில் நடைபெறும் சுதந்திர தின விழாக்களில் அந்தந்த மாநில முதலமைச்சர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து உரையாற்றவுள்ளனர்.

இதேவேளை, நாடு முழுவதும் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருந்து வருவதால், டில்லியில் நடைபெறும் சுதந்திர தின விழாவுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், மாநிலங்களிலும் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழக அரசின் சார்பில் சென்னை புனித ஜோர்ஜ் கோட்டையில் இன்று சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

இதன் பிரகாரம் முதல்வர், இன்று விழா இடம் பெறும் இடத்திற்கு வருகை தருவதற்கு முன்பாக, வழியில் போர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து, போரில் உயிர் நீத்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவார் என்றும் பின்னர் அங்கிருந்து, பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் அணிவகுப்புடன், கோட்டைக்கு வருவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இந்திய-பாகிஸ்தான் எல்லையில் மோதல்

ஜம்மு - காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி நேற்று முன்தினம் சனிக்கிழமை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பாகிஸ்தான் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இந்திய இராணுவம் பதில் தாக்குதலை தொடங்கியுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் தொடக்கம் இரு தரப்புக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சமர் இடம்பெற்று வருகின்றது.

உயிரிழப்புக்கள் தொடர்பிலோ, அல்லது சேத விபரம் தொடர்பிலோ இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை. இந்நிலையில், இந்தியா தனது 70ஆவது சுதந்திர தினத்தை இன்று கொண்டாடவுள்ள நிலையில், காஷ்மீர் எல்லையில் இருதரப்பு இராணுவ மோதல் இடம் பெறுவது சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)

# சுதந்திர தினத்தில் நாசவேலைக்கு சதி

## மனித வெடிகுண்டு தீவிரவாதிகள் ஊடுருவல்; பாகிஸ்தான் உளவுத்துறை எச்சரிக்கை



(லாகூர்)

**இந்திய சுதந்திர தினத்தன்று எல்லைப் பகுதிகளில் மனித வெடிகுண்டுகள் மூலம் தற்கொலை தாக்குதல் நடத்த தலிபான் தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியிருப்பதாக பாகிஸ்தான் உளவுத்துறை எச்சரித்துள்ளது.**

இந்தியாவின் 70ஆவது சுதந்திர தினம் இன்று திங்கட்கிழமை நாடெங்கும் மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடப்படவுள்ளது.

இதையொட்டி தலைநகர் டில்லியிலும், மாநில தலை நகரங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சிறப்பு அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கான ஒத்திகைகளும் நடந்து வருகின்றன.

கடந்த ஒரு மாதமாக காஷ்மீர் மாநிலத்தில் வன்முறை சம்பவங்கள் நடந்து வரும் நிலையில், சுதந்திர தின கொண்டாட்டங்களில் எந்த அசம்பாவிதமும் நடைபெற்று விடக் கூடாது என்பதில் மத்திய அரசு உறுதியாகவுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு சுதந்திர தின கொண்டாட்டங்கள் நடக்கும் இடங்களில் பல அடுக்கு பாதுகாப்பு ஏற்பாட்டுக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் இன்று மிகப்பெரிய குண்டுவெடிப்புகள் நடத்த சதி திட்டம் தீட்டி இருப்பதாக உளவுத்துறை எச்சரித்தது. இதைத். தொடர்ந்து டில்லியில் 7 அடுக்கு பாதுகாப்புக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. டில்லி முழுவதையும் ஏற்கனவே பாதுகாப்புப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டனர்.

இதற்கிடையே இந்திய சுதந்திர தினத்தன்று எல்லைப் பகுதிகளில் மனித வெடி குண்டுகள் மூலம் தற்கொலை தாக்குதல் நடத்த தலிபான் தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியிருப்பதாக பாகிஸ்தான் உளவுத்துறை எச்சரித்துள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் உள்ள வாகா மற்றும் கண்ட்சிங் ஆகிய 2 இடங்களில் இந்த தற்கொலை தாக்குதல் நடைபெறக்கூடும் என்றும் பாகிஸ்தான் உளவுத் துறை தகவல் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலுக்காக 2 தலிபான் மனித வெடிகுண்டுகள் எல்லைக்குள் ஊடுருவி விட்டதாகவும் எனவே உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுமாறும் உளவுத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். வாகா எல்லையில் அணிவகுப்பு நடத்தப்படும் போது மனித வெடிகுண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தி மிகப்பெரிய உயிரிழப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதே தலிபான்களின் இலக்காகும் என்றும் எச்சரிக்கை தகவலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீரை மீட்பதுதான் உண்மையான வெற்றியாகும்

## இந்திய இணையமைச்சர் வலியுறுத்து



(டில்லி)

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரை மீட்பதுதான் உண்மையான வெற்றியாகும் என்று பிரதமர் அலுவலக இணையமைச்சர் ஜிதேந்திர சிங் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்துள்ளார்.

கில்ஜித் - பல்டிஸ்தான் பகுதியிலும், ஆக்கிமிரப்பு காஷ்மீரிலும் அரங்கேறும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்துவது அவசியம் என்றும் இதன் போது அவர் வலியுறுத்தியுள்ளார்.

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை டில்லியில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, 'பலுசிஸ்தான் பகுதி மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியா துணை நிற்கும்' என்று பகிரங்கமாக அறிவித்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் கருத்து தெரிவித்த மத்திய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், 'பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் மூவர்ணக் கொடியை பட்டொளி வீசிப் பறக்கச் செய்வதுதான் உண்மையான வெற்றி' என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக டில்லியில் செய்தியாளர்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,


ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும், கில்ஜித் - பல்டிஸ்தானிலும் வசித்து வரும் நமது சகோதரர்களின் நலனுக்கு உறுதுணையாக செயற்படுவது இந்தியாவின் தார்மீகக் கடமையாகும்.

அங்கு மனித உரிமைகள் மீறப்படுவதையும், போராடும் மக்கள் ஒடுக்கப்படுவதையும் உலக நாடுகளின் முன்பு வெளிச்சமிட்டுக் காட்டுவது அவசியம்.

பாகிஸ்தான் ஆக்கிரமித்து வைத்துள்ள இந்தியப் பகுதியான முசாபர் நகரின் கோட்லியில், தேசியக் கொடியை ஏற்றினால் தான், 'மூவர்ணக் கொடிப் பயணம்' (பா.ஜ.க. சார்பில் மேற்கொள்ளப்படும் யாத்திரை) வெற்றியடைந்ததாகக் கருத முடியும்' என்றார். (இ-5)

# சுதந்திரதின உரையில் என்ன பேசவேண்டும்?

## மோடியிடம் சச்சின் கோரிக்கை



பிரதமர் மோடி தனது சுதந்திர தின பேருரையில் ஒலிம்பிக் வீரர்களை ஊக்குவிக்குமாறு பேச வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கோரிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளார்.

சுதந்திர தினப் பேருரையில் பிரதமர் நரேந்திர மோடி ரியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இந்திய வீரர்களுக்கு ஊக்கமளித்து பேச வேண்டும் என்று சச்சின் டெண்டுல்கர் கடிதம் மூலம் கோரிக்கை வைத்துள்ளார்.

சுதந்திர தினப் பேருரையில் எவையெல்லாம் பற்றி பேச வேண்டும் என்று பொது மக்களிடம் பிரதமர் கருத்து கேட்டு வருகிறார்.

இந்நிலையில் பிரதமர் மோடிக்கு கடிதம் மூலம் தனது கோரிக்கையை வலியுறுத்திய சச்சின் கூறியிருப்பதாவது,

'உங்களது உற்சாகம் தரும், ஊக்குவிக்கும் வார்த்தைகள் நிச்சயம் தோல்வி அடைந்த வீரர்களுக்கும் ஒலிம்பிக்கில் தற்போது போராடிக் கொண்டிருக்கும் இந்திய வீரர்களுக்கும் உதவிகரமாக அமையும்.

இந்தியாவை ஒலிம்பிக் போட்டிகளில் பிரதிநிதித்துவம் செய்யும் வீரர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள். ஒவ்வொருவருமே தடைகளைக் கடந்த விடாமுயற்சியின். ஒரு அருமையான உதாரணம்.

ஒலிம்பிக்கில் நாட்டுக்காக விளையாடுவது ஒரு அரிய சாதனையாகும். நமது சம்பியன் வீரர்களை நாம் பாராட்ட வேண்டும், கொண்டாட வேண்டும். ஏனெனில் உலகின் மிகச்சிறந்த வீரர்களை எதிர் கொண்டு இவர்கள் விளையாடி வருகிறார்கள். களத்திலும் அதற்கப்பாலும் பல சவால்களைக் கடந்து இவர்கள் வந்துள்ளார்கள்.

இளம் இரத்தங்களின் மக்கள் தொகை அதிகமாக நம் நாட்டில் தான் உள்ளது. இந்தியாவில் விளையாட்டுக் கலாசாரத்தை வளர்த்தெடுக்கும் வாய்ப்பை நாம் பெற்றுள்ளோம். எனவே சுதந்திர தின உரையில், ஒலிம்பிக்கில் பங்கேற்கும் இந்திய வீரர்களை உற்சாகப்படுத்தி உரையாற்ற வேண்டும்' என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# குண்டுவீச்சுத் தாக்குதலில் பத்து குழந்தைகள் பலி!

(சனா)

**சனா அருகேயுள்ள ஹைடான் நகரம் மீது சவுதி அரேபியாவின் போர் விமானங்கள் குண்டு வீசி தாக்கின. இத்தாக்குதலில் 10 குழந்தைகள் பலியாகினர். 28 பேர் காயம் அடைந்தனர்.**

ஏமனில் கடந்த ஒரு ஆண்டாக உள் நாட்டு போர் நடைபெற்று வருகிறது. தலைநகர் சனாவை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றிக் கொண்டு ஜனாதிபதி மன்சூர் ஹாதியை விரட்டியடித்தனர்.


ஏமனில் தங்கியிருந்த போது அவரது அரண்மனை மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனவே, பதவியை ராஜினாமா செய்த அவர் சவுதி அரேபியாவுக்கு தப்பி ஓடி தஞ்சம் அடைந்தார்.

அதை தொடர்ந்து அவருக்கு சவுதி அரேபியா ஆதரவு அளித்து வருகிறது. அமெரிக்கா உதவியுடன் சவுதி அரேபிய படைகள் ஜனாதிபதி ஹாதியின் ஆதரவுடன் ராணுவத்துக்கு உதவி வருகின்றன.

இந்த நிலையில் ஹாதி கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருக்கும் தலைநகர் சனா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை கைப்பற்ற இரு தரப்பினருக்கும் இடையே கடும் சண்டை நடந்து வருகிறது. நேற்று முன் தினம் சனா அரு கேயுள்ள ஹைடான் நகரம் மீது சவுதி அரேபியாவின் போர் விமானங்கள் குண்டு வீசி தாக்கின.

அதில், ஒரு குண்டு அங்குள்ள பாடசாலை மீது விழுந்தது. அதில் அக்கட்டடம் இடிந்து பலத்த சேதம் அடைந்தது. இத்தாக்குதலில் 10 குழந்தைகள் பலியாகினர். 28 பேர் காயம் அடைந்தனர். (இ-7)

# அலெப்போ நகரில் தொடரும் தாக்குதல்களால் மக்கள் பாதிப்பு



சிரியாவின் தென்மேற்கு நகரான அலெப்போவில்ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய ரொக்கெட் தாக்குதல்களில் 9 பேர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் 20 பேர் காயமடைந்துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் சிரிய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில், "நேற்று முன் தினம் சனிக்கிழமை மாலை அலெப்போவின் சலாஹுடீன், ஹம்டானியா மற்றும் அல்-ஸக்ரா ஆகியு புறநகர்ப் பகுதிகளின் குடியிருப்புப் பகுதிகளை இலக்கு வைத்து ஐ.எஸ். தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். இதன்போது காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அலெப்போவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் அரச படையினர் முன்னெடுத்த விமானத் தாக்குதல்களில் 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும், அலெப்போ மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் ரஷ்ய போர் விமானங்கள் நடத்திய விமானத் தாக்குதல்களில் 27 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# தேசிய விருது பெற்ற பாடலாசிரியர் நா.முத்துக்குமார் திடீர் மரணம்



காலை இளம் பாடலாசிரியர் நா.முத்துக்குமார் மரணம் அடைந்ததாக வந்துள்ள தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தேசிய விருது பெற்ற நா.மூத்துக்கு மாருக்கு நேற்று கடுமையான காய்ச்சல் இருந்ததாகவும், அதன் காரணமாக அவர் மரணம் அடைந்ததாகவும்செய்திவெளியாகியுள்ளது. 41 வயதே ஆன கவிஞர் நா.முத்துகுமார் தங்க மீன்கள் திரைப் படத்துக்காக எழுதிய "ஆனந்த யாழை மீட்டுகிறாய்" என்ற பாடலுக்கும், "சைவம்" திரைப் படத்துக்காக எழுதிய "அழகே அழகே எதுவும் அழகே" என்ற பாடலுக்கும் தேசிய விருது கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

வியட்நாம் வீடு சுந்தரம், பஞ்சு அருணாச்சலம், ஜோதி லட்சுமி ஆகிய திரையுலக பிரமுகர்கள் மறைவு அடுத்தடுத்து நடந்ததால் அந்த அதிர்ச்சியில் இருந்து இன்னும் மீளாத கோலிவூட் திரையுலகினர்களுக்கு நேற்றுக்

# சீனாவில் வாகனங்கள் மோதி கோர விபத்து

## 11 பேர் பலி! 21 பேர் படுகாயம்






சீனாவில் ஜிபோ நகரில் வாகனங்கள் அடுத்தடுத்து ஒன்றின் மீது ஒன்று மோதியதால் 11 பேர் பலியாகினர். 21 பேர்படுகாயம் அடைந்துள்ளனர்.

சீனாவின் ஜிபோ நகரில் உள்ள முக்கியமான வீதியில் எப்போதும் வாகனங்கள் சென்றுகொண்டிருக்கும். அந்த வீதியில் டிராக்டர் ஒன்று அதிக பாரத்துடன் வீதியை கடக்க முயன்றது. அப்போது வீதியை கடக்கும் போது எதிரே வந்த பேருந்து கட்டுப்பாட்டை இழந்து வீதியை கடக்க முயன்ற டிராக்டருடன் பயங்கரமாக மோதியது. அதனை பின் தொடர்ந்து வந்த பேருந்தும் மோதி விபத்துக்குள்ளானது. வீதியில் தொடர்ந்து வாகனங்கள் வந்துகொண்டிருந்ததால் வாகன சாரதிகள் பிரேக் போட்டதில் ஒன்றுடன் ஒன்று மோதி பயங்கர விபத்துக்குள்ளானது. இந்த வீதி விபத்தில் 11 பேர் பலியாகியுள்ளதாகவும், 21 பேர் படுகாயம் அடைந்துள்ளதாகவும், அதில் 2 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் சீன அரசின்சின்குவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-5)

# நிலச்சரிவில் சிக்கி சுற்றுலா பயணிகள் பேருந்து விபத்து



கிழக்கு சீனாவின் புஜியான் மாகாணத்தில் தாய்வான் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து நிலச்சரிவில் சிக்கி விபத்திற்குள்ளானதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளதோடு, மேலும் 22 பேர் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

இது தொடர்பில் உள்ளூர் ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில், நேற்று முன் தினம் சனிக்கிழமை புஜியான் மாகாணத்தின் யங்டிங் மாவட்டத்தில் அமைந்துள்ள லொங்யன் நகரத்தின் நெடுஞ்சாலையூடாக 23 தாய்வான் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து பயணித்துள்ளது. இந்நிலையில் உள்ளூர் நேரப்படி முற்பகல் 10.43 மணியளவில் அப்பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவை அடுத்து, பாறைகளும் சேறும் வேகமாக கீழ் நோக்கி வந்ததில் குறித்த பேருந்து கவிழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு காஷ்மீரில் பாதுகாப்பு தீவிரம்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் சுதந்திர தின விழாவை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம் பெற்றுள்ளன.

பயங்கரவாத தாக்குதல்களுக்கு வழி அமைக்கும் என்ற அச்சத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இணைய சேவைகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன.

மாநிலத்தின் ஹண்ட்வாரா பகுதியில் ஏற்பட்ட வன்முறை சம்பவத்தில் மூன்று பேர் வரை உயிரிழுந்துள்ளனர்.

இதேவேளை, தொடர்ந்து குப்வாரா மாவட்டத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காஷ்மீரில் தொடர்ச்சியாக பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என்ற அச்சமும் நிலவிவரும் சூழ்நிலையில், இன்று திங்கட்கிழமை மாநிலத்தில் சுதந்திரதின கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நிலையில் மேலும் வன்முறை சம்பவங்கள் மற்றும் வதந்திகள் பரவாமல் தடுக்கும் வகையில் குப்வாரா, பாரமுல்லா ஆகிய மாவட்டங்கள் மற்றும் கோடைகால தலைநகரான ஸ்ரீநகர் ஆகிய பகுதிகளில் இணைய சேவைகள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன.

இது குறித்து பொலிஸார் கூறுகையில், மாநிலத்தில் தற்போதுள்ள நிலைமை சீரான உடன் இணைய சேவை மீண்டும் வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்த புர்ஹான் வானி என்பவன் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

இதனையடுத்து நிகழ்ந்த வன்முறை சம்பவத்தின் போது சுமார் 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இதனை தொடர்ந்து மேலும் வன்முறை குறித்து வதந்திகளை பரவாமல் தடுக்க மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் இணைய சேவைகள் முடக்கப்பட்டன.

எனினும் சில நாட்களில் வழமைக்குத் திரும்பிய பகுதிகளில் படிப்படியாக இணைய சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (இ-7)

# காணாமற்போனோர் பணியகம் கொழும்பிலேயே செயற்படும்

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு

**(கொழும்பு) காணாமற்போனோர் பணியகத்தின் தலைமையகம் கொழும்பிலேயே இயங்கும். இந்தப் பணியகத்தின் ஆணையை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்டால் பிராந்திய பணியகங்களை அமைக்க சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது என நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



காணாமற்போனோர் பணியகச் சட்டத்தில் சபாநாயகர் கையெழுத்திட்டபின்னர், இந்தப் பணியகத்துக்கான 7 உறுப்பினர்களை அரசியலமைப்புச் சபை பரிந்துரைக்கும் என்றும் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அடுத்தடுத்த வாரங்களில் காணாமற்போனோர் பணியகத்தை உருவாக்குவதற்கான பணிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. அரசியலமைப்பு சபை தனது பரிந்துரைகளைச் சமர்ப்பித்த 15 நாட்களுக்குள் ஜனாதிபதி காணாமற்போனோர் பணியகத்தின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களை நியமிப்பார்.

நியமனங்கள் விரைவில் மேற்கொள்ளப்படும், எனினும் சபாநாயகரின் கையொப்பத்துக்காகவே காத்திருக்கின்றோம். இந்தப் பணியகம் இந்த ஆண்டு இறுதிக்குள் செயற்படத் தொடங்கும். பணியகத்தின் உறுப்பினர்கள் பதவிக்காலம் 3 ஆண்டுகளாக இருக்கும்.

எல்லா இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 7 உறுப்பினர்கள் இந்தப் பணியகத்திற்கு நியமிக்கப்படுவர்.

காணாமற்போனோர் பணியகத்தின் தலைமையகம் கொழும்பிலேயே இயங்கும். இந்த பணியகத்தின் ஆணையை நிறைவேற்றுவதற்குத் தேவைப்பட்டால், பிராந்திய பணியகங்களை அமைக்க சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.

இதன் உறுப்பினர்களாக இருப்பவர்கள் உண்மையைக் கண்டறிவதில், விசாரணைகளை மேற்கொள்வதில், மனித உரிமைச் சட்டங்களில், அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டங்களில் அனுபவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் மேலும்தெரிவித்தார். (இ-5-7)

# கூட்டு எதிர்க்கட்சி உயர்நீதிமன்றத்தில் மனு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை மனுவைத் தாக்கல் செய்ய மகிந்த தரப்பின் கூட்டு எதிர்க்கட்சிதயாராவதாக அதன் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நிலைமைகளை அவதானித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

காணாமற் போனோர் அலுவலகம் அமைக்கப்படுவதைத் தமது கட்சி எதிர்க்கவில்லை.

எனினும் அது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட யோசனையின் அடிப்படையில் அமைந்து விடக் கூடாது என்பதையே தாம் வலியுறுத்தி வருவதாக நாணயக்கார கொழும்பு ஊடகம் ஒன்றிடம் தெரிவித்தார். (இ-5-7)

# ஜனாதிபதியின் இரண்டு பக்கத்திலும் மகிந்த, சந்திரிகாவிற்கு ஆசனங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இரண்டு பக்கத்திலும் முன்னாள் ஜனாதிபதிகளும் இலங்கை சுதந்திரக் கட்சியின் ஆலோசகர்களுமான மகிந்த ராஜபக்ஷ மற்றும் சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோருக்கு ஆசனங்கள் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரக் கட்சியின் 65ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு குருநாகலில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு நிறைவு நிகழ்வு மேடையில் ஜனாதிபதியின் இடது மற்றும் வலது பக்கங்களில் முன்னாள் ஜனாதிபதியும் கட்சியின் சிரேஷ்ட ஆலோகர்களுமான சந்திரிகா, மகிந்த ஆகியோருக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படவுள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொதுச் செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட ஏனைய முக்கிய பதவிகளை வகிப்போருக்கு முன் வரிசையில் ஆசனம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இதேவேளை, சுதந்திரக் கட்சியின் 65 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கமாட்டார் எனவும் தனியாக ஓர் நிகழ்வினை ஏற்பாடு செய்வார் எனவும் ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (இ-5-7)

# மூன்று மாணவர்கள் மீது கத்திக்குத்து

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டுவீடு திரும்பிய மாணவர்கள் மீது கத்திக்குத்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மூன்றுமாணவர்கள்கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளனர்.

கண்டி அக்குரஸ்ஸ பேருந்து நிலையத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கான மாணவர்கள் மூன்று பேரும் அக்குரஸ்ஸ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொடபிட்டிய தேசிய பாடசாலை மாணவர்கள் மீது இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட சந்தேக நபர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-5-7)

## இன்று ஒரு தகவல்

### வணக்கம் தெரிவிக்கும் முறைகள்

இடுப்புக்குக் கீழே தொங்கிக்கிடக்கும் கைகள், பண்பு கருதி உயரும் போது நம் மீதான மதிப்பும் உயரும் என்பது பலருக்குத் தெரிவதில்லை.

சிலர், வணக்கம் செய்வதை ஏதோ கேவலமான செயல் என்றும், அது தங்களுக்குப் பெருமை சேர்க்காமல் காக்காய் பிடிப்பவர்கள் இரகத்தில் சேர்த்துவிடும் எனவும் எண்ணிக் கொள்கிறார்கள்.

இது ஒரு தவறான முடிவே. எண்ணற்ற வார்த்தைகளால் உருவாக்க முடியாத நன்மதிப்பை நாம் வணக்கத்தின் மூலம் ஏற்படுத்திவிட முடியும். வணக்கம் என்பது இரு கைகளால்தான் செலுத்தப்பட வேண்டும் என்பதில்லை. ஒரு கையால் வணங்குவதும் (Wish) ஹாய்! ஹலோ! குட்மோர்னிங் என்பனவுங்கூட வணக்கத்தின் வகைகள் தான். ஆனால் சற்று நவீன முறைகள்.

யார் யாரெல்லாம் இரு கரம் கூப்பி வணங்குவதற்குத் தகுதியுள்ளவர்கள் என்று பட்டியலிட்டுக் காண்பிப்பது கடினம்.நம்மைவிட வயதால், பண்பால், தகுதியால் மூத்தவர்கள், இரு கை கூப்பி வணங்குவதற்கு உரியவர்கள்.

எல்லாத் தகுதியாலும் சமநிலையில் உள்ளவர்கள் ஒருவகை வணக்கத்திற்கு உரியவர்கள். வயதில் இளையவர்கள், நண்பர்கள் , நண்பிகள் ஹாய்களுக்கும் ஹலோக்களுக்கும் உரியவர்கள்.

இந்த விடயத்தில் தெளிவு இல்லாமல் இருந்தால் அல்லது மாற்றம் செய்தால் , அது நமக்கு நல்லதல்ல.

பெரும்பாலானவர்களுக்கு எழக்கூடிய பிரச்சினை , யார் முதலில் வணங்குவது என்பதுதான். நாம் முந்திக் கொள்வது நல்லது. இது நம் மீது மற்றவர்களுக்கு உள்ள அன்பை , மரியாதையை எளிதில் புலப்படுத்தச் சிறந்த வழி.

நாம் ஏதோ அவர்கள் தயவு வேண்டுமென்று தான் வணக்கம் செய்கிறோம் என்று மற்றவர்கள் எண்ணுவதாகச் சந்தேகப்படுகிறீர்களா? ஓரிரு முறைகள் வணக்கம் தெரிவிக்காமல் இருந்துவிடுங்கள். உங்கள் சந்தேகப்படி இவர்கள் முதலில் வணக்கம் தெரிவிக்காமல் இருந்தால் , உங்கள் சந்தேகம் உண்மை தான் என்று ஆகிவிடும். இப்போது , பிறகு அவரை விட்டு ஒதுங்குவதா ஒதுக்குவதா என்பதை முடிவு செய்யுங்கள்.

நம்முடைய வணக்கத்தில் உண்மை இருக்க வேண்டும் கூழைக் கும்பிடுகள் அவசியம் இல்லை. இவற்றை மற்றவர்கள் விரைவில் புரிந்து கொண்டு விடுவார்கள்.

மற்றவர்கள் உங்கள் வணக்கத்திற்குப் பதில் வணக்கம் செலுத்தும் போது சுருதி குறைந்தால், உடனே இவரிடம் என்ன கோளாறு அல்லது நம்மிடம் என்ன கோளாறு என்று ஆராயுங்கள்.

இவருக்கு எதற்கு வணக்கம் செய்ய வேண்டும், இவரால் நமக்கு என்ன பயன் என்கிற இலாப நட்டக் கணக்கெல்லாம் போடாமல் , நம்மைச்சுற்றியுள்ளவர்களால் நம் வாழ் க்கையை இனிமையாக்கிக் கொள்ள இது ஓர் உத்தமமான வழி!

**லேனா தமிழ்வாணன்**

# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## வரலாறு பகுதி-I

OLD

01) வினயபிடகம் எனும் நூலுக்குப் பாளி மொழியில் எழுதப்பட்ட விளக்க நூல்
1.ஜாதகக் கதை 2.சமந்தபாசாதிக்கா
3.தம்மபதட்ட கதை 4.அத்தசாலினிய

02) இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான மூலாதாரங்கள்
1. கல்வெட்டுக்கள் 2. நாணயங்கள்
3. இலக்கியங்கள் 4.கலைப் படைப்புக்கள்

03) முற்காலத்தில் இலங்கை "செரன்டிப்" என அழைக்கப்பட்டது
1. அராபியர்களால் 2. கிரேக்கர்களால்
3. உரோமர்களால் 4.இந்தியர்களால்

04) தொழில்நுட்பம், அழகியல், பூங்கா அமைப்பு என்பன உயர் மட்டத்தில் இருந்தன என்பதை உறுதிசெய்யும் வரலாற்று இடம்
1. தம்பதெனிய 2. ரிட்டிகல 3. சிகிரியா 4. மிகிந்தலை

05) பின்வரும் விடைகளில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் மரணச் சடங்கு தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ள உதவும் இடங்களைக் கொண்ட விடை யாது?
1. பெல்லன்பதிபெலஸ்ஸ, அத்தனகொட அலுலென
2.பட்டதொம்பலென, இராவணன் எல்ல குகை
3. பட்டதொம்பலென, பாகியன்கல குகை
4.நில்கல பெலிகல்கே, பெல்லன்பதிபெலஸ்ஸ

06) ஆரியக் குடியேற்ற பரம்பல் தொடர்பாகப் பின்வரும் நிகழ்வுகளை வரலாற்று ரீதியாக ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் சரியான விடை
A - பத்தகச்சானா உள்ளிட்ட குழுவினரின் வருகை
B - விஜிதகாம, தீககாம குடியேற்றங்கள் தோற்றம் பெற்றமை
C - மதுராபுரி இளவரசி உள்ளிட்ட குழுவினரின் வருகை
D - உபதிஸ்ஸகாம, அனுராதகாம என்பன தோற்றம் பெற்றமை
1. D,A,B,C 2. B,C, A,D 3.D,B,A,C 4.D,C,A,B

07) பின்வரும் நிகழ்வுகளில் வலகம்பா மன்னனின் காலத்தில் நிகழ்ந்தவை மாத்திரம் உள்ளடங்கிய விடை
A - மகா விகாரை நிறுவப்பட்டமை
B - தனிப்பட்ட ரீதியில் முதலாவது ஆராமை அன்பளிப்பு செய்யப்பட்டமை
C - சங்கத்தில் (நிக்காய) பேதம் ஏற்பட்டமை
D - ஜேத்தவன விகாரை அமைக்கப்பட்டமை
1. A,B 2. A,C 3.A,D 4.B,C

08.பொலனறுவைக் காலத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகள் சில "அ:" நிரலிலும், அவற்றோடு தொடர்புடைய நபர்களின் பெயர்கள் "ஆ:" நிரலிலும் கொடுக்கப்பட்டுள்ளன. அ நிரலுக்கு அமைவாக ஆ நிரலை ஒழுங்குபடுத்தினால் வரும் சரியான விடை

| விடைநிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| சோழர் ஆட்சியிலிருந்து நாட்டை விடுவித்தமை | A.கலிங்க மாகன் |
| தந்ததாதுவையும், பாத்திர தாதுவையும் பெற்று அரச பதவியை உறுதிசெய்து கொண்டமை | B.நிசங்கமல்லன் |
| துலாபாரக் கொடை வழங்கியமை | C.முதலாம் விஜயபாகு |
| பராக்கிரம பாண்டியனைத் தோற்கடித்தமை | D.முதலாம் பராக்கிரமபாகு |
| | E.இரண்டாம் விஜயபாகு |

1.C,D,B,A 2.C,B,D,E 3.B,C,D,A 4.D,B,A,E


09. "அ" நிரலில் கொடுக்கப்பட்டுள்ள கால்வாய் வழியாக நீர் கொண்டு செல்லப்பட்ட இடங்கள் "ஆ" நிரலில் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தினால் சரியான விடையாக அமைவது.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| அங்கமடில்ல கால்வாய் | A.அம்பன் கங்கையிலிருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கு |
| யோத கால்வாய் | B.மகாவலி கங்கையிலிருந்து அம்பன் கங்கைக்கு |
| எலஹரக் கால்வாய் | C.தெதுறு ஓயாவிலிருந்து மாகல்ல வாவிக்கு |
| ரிதிபெந்தி கால்வாய் | D.கலா வாவியிலிருந்து திஸ்ஸவாவிக்கு |
| | E.அம்பன் கங்கையிலிருந்து மின்னேரிய கிரித்தல வாவிக்கு |

1.A,D,E,C 2.A,B,E,C 3.E,B,C,A 4.E,D,B,C

10. "பிட்டதடஹச", "மதஹச", "அகலஹச"; ஆகிய நெல் பயிரிடப்படும் மூன்று போகங்கள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு
1.சித்துல்பவ்வ 2.குசலானகந்த 3.பம்பரகல 4.தோணிகல

●கொடுக்கப்பட்டுள்ள இந்தியப் படத்தின் உதவியுடன் 11, 12 ஆம் வினாக்களுக்கு விடை தருக.



11. மகதத்தின் தலைநகரான பாடலிபுத்திரம் எந்த எழுத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது?
1.A
2.B
3.C
4.D

12. கிருஷ்ணா நதி எந்த இலக்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது?
1) 1
2) 2
3) 3
4) 4

13. A - திரிலோக சுந்தரியை விவாகம் செய்து கொள்ளல்
B - பண்டுவாசுதேவன் உள்ளிட்ட குழுவினரின் வருகை
C - சங்கமித்தா பிக்குணி உள்ளிட்ட குழுவினரின் வருகை
D - சோமா தேவியைக் கடத்திச் செல்லுதல்.
மேற்கூறப்பட்டவற்றை வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் விடை
1.B,D,C,E 2.B,C,D,A 3.D,C,A,B 4.B,C,A,D

14. கலிங்க மாகன் பொலனறுவையை ஆட்சி செய்யும்போது கோவிந்த மலையில் சுயாதீன நிர்வாகத்தை முன்னெடுத்துச் சென்ற பிரதேசத் தலைவன்
1.சுப தளபதி 2.சங்க தளபதி 3.புவனேகபாகு ஆதிபாதன் 4.விஜயபாகு

15. A - பெலிகலக் குன்றின் உச்சியில் தலதா மாளிகையை அமைத்தல்
B - கண்டியில் அஸ்கிரிய பீடத்தை ஆரம்பித்தல்
C - ஜாதகக் கதை நூலை சிங்களத்தில் மொழிபெயர்க்க ஆதரவு வழங்குதல்
D - சந்திரபானுவை இரு முறை தோற்கடித்தல்
மேற்கூறப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளில் நான்காம் பராக்கிரமபாகு மன்னனது காலத்திற்குரிய நிகழ்வுகள் உள்ளடங்கிய விடை
1.A யும் B யும் 2.A யும் C யும் 3.B யும் C யும் 4.B யும் D யும்

16. யாப்பகுவ இராசதானியின் முதலாவது ஆட்சியாளனாக விளங்கியவன்.
1.நான்காம் விஜயபாகு 2.முதலாம் புவனேகபாகு
3.நான்காம் பராக்கிரமபாகு 4.இரண்டாம் புவனேகபாகு


17. பின்வரும் "அ" நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசர்கள் அரசராவதற்கு முன்னர் வழங்கப்பட்ட பெயர்கள் "ஆ" நிரலில் கொடுக்கப்பட்டுள்ளன. "அ" நிரலுக்குப் பொருத்தமாக "ஆ" நிரலை ஒழுங்குபடுத்தினால் பெறப்படும் சரியான விடை

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1.ஆறாம் புவனேகபாகு | A டிக்கிரி பண்டார இளவரசன் |
| 2.எட்டாம் வீரபராக்கிரமபாகு | B மகா அஸ்தான இளவரசன் |
| 3.முதலாம் இராஜசிங்கன் | C அம்புலுகல இளவரசன் |
| 4.இரண்டாம் இராஜசிங்கன் | D சப்புமல் இளவரசன் |

1.A.C.D.B 2.D.A.B.C 3.C.D.B.A 4.D.C.A.B

18. முதலாம் இராஜசிங்க மன்னனால் போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்ற முடியாமைக்கான காரணம்
1.மன்னனுக்குப் பொது மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காமை
2.முதலாம் இராஜசிங்க மன்னன் சிறந்த ஆட்சியாளனாக செயற்படாமை
3.முதலாம் இராஜசிங்க மன்னனுக்குக் கடற்படை வலிமை இல்லாமை
4.தர்மபாலன் கோட்டை இராச்சியத்தை நன்கொடைப்பத்திரத்தின் மூலம் போர்த்துக்கேயருக்கு வழங்கியமை

19. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் காணப்படுவது.



1.இஸ்லாமிய கட்டடக் கலைக்கு அமையக் கட்டப்பட்ட குதுப்மினார் ஆகும்.
2.இஸ்லாமிய கட்டடக் கலைக்கு அமையக் கட்டப்பட்ட அங்கோர்வட் கோயிலாகும்.
3.பர்மிய சம்பிரதாயத்திற்கு அமையக் கட்டப்பட்ட புத்தகயாவாகும்.
4.மொகலாயக் கட்டடக் கலைக்கு அமையக் கட்டப்பட்ட தாஜ்மஹால் ஆகும்.

20. பின்வருவனவற்றில் ஐரோப்பியர் கீழைத்தேசங்களுக்கு வருவதற்கான முக்கிய காரணங்களாக அமைந்த விடயங்களைக் கொண்ட விடை
A - வர்த்தக ஏகபோக உரிமை பெறல்
B - அரசர்களின் புகழையும், வலிமையையும் பெருக்கிக் கொள்ளுதல்
C - கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதல்
D - அரசர்கள் கடற்பிரயாணங்களுக்கு ஆதரவு நல்குதல்
1. A யும் C யும் 2. A யும் D யும் 3. B யும் C யும் 4. C யும் B யும்

21. A - நீதித்துறைச் செயற்பாடுகள் பிரபுக்களிடம் இருந்தமை
B - நிலத்தில் பயிர் செய்தலின் மூலம் பெறப்படும் வருமானம் முக்கிய இடத்தைப் பெறல்
C - பயிர்ச்செய்கையின் பொருட்டு நிலமாற்று முறையும், பயிர் மாற்று முறையும் மேற்கொள்ளல்
D - பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சமூக அந்தஸ்து நிலவுதல்
மேற்கூறப்பட்டவற்றில் ஐரோப்பாவின் மானிய முறைப் பொருளாதார இயல்புகளை மட்டும் உள்ளடக்கிய விடையாக அமைவது.
1. A யும் B யும் 2. B யும் C யும் 3. B யும் D யும் 4. C யும் D யும்

22. A - பைபிளை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தல்
B - திருச்சபையை விமர்சித்ததால் மரணத்திற்கு உள்ளாகுதல்
A, B என்ற நிகழ்வுகளுக்கு உட்பட்ட சமய தத்துவவாதிகளை ஒழுங்கு முறையில் காட்டும் விடை யாது?
1.மார்டின் லூதர், உல்ரிச் சுவிங்ளி 2.மார்டின் லூதர், ஜோண் கல்வின்
3.ஜோண் வைக்கிளிப், ஜோண் ஹஸ் 4.ஜோண் கல்வின், ஜோண் ஹஸ்

23. ஒல்லாந்தரது கீழைத்தேச நிர்வாகத் தலைமை நிலையமாக விளங்கியது.
1.பத்தேவியா 2.கல்கத்தா 3.கோவா 4.சென்னை

24. ஐரோப்பியரின் ஆதிக்கப் பரம்பலின்போது சமயப் பரப்புதலின் பிரதான ஊடகமாக விளங்கியது.
1.வர்த்தகம் 2.கல்வி 3.சுகாதாரம் 4.விவசாயம்

25. "அ" நிரலில் கொடுக்கப்பட்டுள்ள அரசியல் சீர்திருத்தங்களின் சிபார்சுகள் "ஆ" நிரலில் தரப்பட்டுள்ளன. இவற்றை இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| கோல்புறூக் | A சர்வசன வாக்குரிமை |
| டொனமூர் | B சட்டவாக்கக் கழக உறுப்பினர் தொகையை 21 வரை உயர்த்துதல் |
| குறூ மக்கலம் | C 16 மாகாணங்கள் ஐந்து மாகாணங்களாகக் குறைக்கப்படல் |
| சோல்பரி | D பிரதமர் தலைமையிலான அமைச்சரவையை நியமித்தல் |

1.A,B,C,D 2.C,A,B,D 3.C,B,D,A 4.D,A,C,B

26. நிரல் "அ" உடன், நிரல் "ஆ" வை இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| செஞ்சட்டைப் படை | A பிரான்சியப் புரட்சி |
| "மீண்டும் பிறத்தல்" எனும் நூல் | B இத்தாலி |
| "பஸ்டீல்" தாக்கப்படல் | C கவுண்ட் கவூர் |
| பதினாறாம் லூயி மன்னன் | D மாரி அன்டனட் |

1.B,C,D,A 2.A,D,B,C 3.B,C,A,D 4.A,B,C,D

16 ஆம் பக்கம் பார்க்க....

### English Part II Answer

Language
4 - 5 Almost no errors, well-connected sentences, good range of vocabulary, Style of language used is suitable for an essay.
2 - 3 A few errors, Meaning is not clear at times due to language problems. good range of vocabulary
1 Only a few correct sentences.
0 All sentences incorrect.

Format and Organization [ 16 - (a)]
2 Appropriate beginning and an end for a speech, well organized ideas, connected meaningful paragraphs
1 Ideas not well-connected
0 No organization at all

16 (c)
Content - Article
4-5 All points included. Sufficient facts. Article of required length.
2-3 Most of the points included. Insufficient facts. Article is required length.
1 Attempts to write on the topic. Insufficient content and description.
0 Question copied / Totally irrelevant

Language
3 Almost no errors. well-connected sentences, good range of vocabulary Style of language used is suitable for an article.
2 A few errors, meaning is not clear at times due to language
problems. Good range of vocabulary
1 Only a few correct sentences.
0 All sentences incorrect

Language
4 - 5 Almost no errors, well-connected sentences, good range of vocabulary
3 Very few errors, well-connected sentences, good range of vocabulary
2 Some errors
1 Only a few correct sentences
0 All sentences incorrect

Format and Organization [ for question (a)]
2 Appropriate beginning and an end for a speech, well organized ideas, connected meaningful paragraphs
1 Ideas not well-connected
0 No organization at all

◆ ◆ ◆

## வரலாறு பகுதி-I தொடர்ச்சி...

27. பின்வரும் கூற்றுக்களில் சுபாஸ் சந்திரபோஸ் தொடர்பான சரியான விடை
1. இந்தியாவில் முஸ்லிம்களுக்கென தனியான அரசொன்றைக் கோரியமை
2.பிரித்தானியருக்கு எதிராக இரகசியமாகப் படை திரட்டியமை
3."வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றமை
4.சுயராச்சியக் கட்சியை ஆரம்பித்து சுதந்திரத்திற்காகப் போராடியமை

28. மா ஓ சேதுங்கினால் முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் செயற்படுத்தப்பட்டது.
1.விவசாயத் துறையில் விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு
2.நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தை அமைதிப்படுத்தும் பொருட்டு
3.கைத்தொழில் துறையில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு
4.வெற்றிகரமான புரட்சிக் கருத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு

29."அ" நிரலிலுள்ள துறைகளை "ஆ" நிரலிலுள்ள நபர்களின் பெயர்களுடன் முறையாக இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| i.இலக்கியம் | A மைக்கல் ஏஞ்சலோ |
| ii.வைத்தியம் | B அமெரிக்கோ வெஸ்புசி |
| iii.ஓவியம் | C தோமஸ் மூர் |
| iv.வானியல் | D பெரசல்சஸ் |
| | E கலிலியோ கலிலி |

1.A,B,D,E 2.B,A,C,E 3.C,D,A,E 4.C,E,A,B

30. நீர்ப்பாசனத்துறையை ஒழுங்கமைத்து விவசாய வளர்ச்சிக்கு உதவிய பிரித்தானிய ஆளுநர்களின் பெயர்கள்
"அ" நிரலிலும், அவர்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குளங்களின் பெயர்கள் "ஆ" நிரலிலும் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை முறையாக இணைக்கும்போது பெறப்படும் சரியான விடை

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| ஹென்றி வோட் | A கந்தளாய் |
| ஹர்கியுலஸ் ரொபின்சன் | B நாச்சதுவ |
| வில்லியம் கிரகரி | C இரக்காமம் |
| வெஸ்ட் ரிஜ்வே | D திஸ்ஸமகாராம |

1.C,B,D,A 2.C,D,A,B 3.C,A,B,D 4.D,A,C,B

31. முதலாம் உலக மகா யுத்தத்திற்கான உடனடிக் காரணம்
1.சரஜிவோ சம்பவம்
2.அல்சாஸ் - லொரேன் பிரச்சினை
3.பிஸ்மார்க்கின் உடன்படிக்கைக் கொள்கை
4.குடியேற்றங்கள் தொடர்பான போட்டி

32. மொரோக்கோ தொடர்பாக பிரான்சுக்கும், ஸ்பானியாவுக்கும் இடையிலான போட்டியில் பிரான்சிற்கு எதிராக ஸ்பானியாவுக்கு உதவிய ஜேர்மனியப் பேரரசன்
1.கெய்சர் வில்லியம் 2.ஒட்டோவன் பிஸ்மார்க்
3.அடோல்ப் ஹிட்லர் 4.நெப்போலியன் பொனபாட்

33. ஆளுநர் நாயகம் பதவிக்குப் பதிலாகப் பெயரளவு நிர்வாகியாக ஜனாதிபதிப் பதவி அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் யாப்பு
1.டொனமூர் யாப்பு 2.சோல்பரி யாப்பு
3.முதலாம் குடியரசு யாப்பு 4.இரண்டாம் குடியரசு யாப்பு

34. 1978 ஆம் ஆண்டு யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய மக்கள் இறைமை என்பதால் கருதப்படுவது.
1.நிறைவேற்று அதிகாரம் 2.நிர்வாக அதிகாரம்
3.நீதித்துறை அதிகாரம் 4.உயர் அதிகாரம்

35. பின்வரும் எச்சந்தர்ப்பங்களில் அகில இலங்கையும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படுகின்றது?
A - பொதுத் தேர்தல் B - ஜனாதிபதித் தேர்தல்
C - பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு D - உள்ளூராட்சித் தேர்தல்
1. A யும் B யும் 2. A யும் C யும் 3. B யும் C யும் 4. B யும் D யும்

36. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் விகிதாசார பிரதிநிதித்துவ முறையை மட்டும் உள்ளடக்கும் விடை
A - தேர்தல் வேட்பாளர்கள் குழுவாக முன்வருதல்
B - தாம் விரும்பும் அரசியல் கட்சிக்கு வாக்களித்து, தாம் விரும்பும் வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை அளித்தல்
C - ஒரு தேர்தல் தொகுதிக்கு ஒரு கட்சியிலிருந்து ஒரு வேட்பாளர் மாத்திரம் போட்டியிடல்
D - ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் தெரிவு செய்யும் உறுப்பினர்களின் தொகையை முன்கூட்டியே தீர்மானித்தல்
1.A,B,C 2. A,B,D 3.A,C,D 4.B,C,D

37. தற்போதைய இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை
1) 220 2) 196 3) 225 4) 248

38. இலங்கையில் நீதிமன்றத் தொகுதியின் ஆரம்ப நீதிமன்றமாக விளங்குவது
1. மேன்முறையீட்டு நீதிமன்றம் 2.இணக்க சபை
3. உச்ச நீதிமன்றம் 4.மேல் நீதிமன்றம்

39. இலங்கையில் நிலவிய இராஜகாரிய முறையை நீக்கிய ஆங்கில ஆளுநர்
1. விலியம் கிரகரி 2. பிரட்ரிக் நோர்த்
3.தோமஸ் மெயிட்லன்ட் 4. எட்வட் பாண்ஸ்

40. A - யப்பானின் ஆக்கிரமிப்புக் கொள்கை
B - லுசிடானியாக் கப்பலை மூழ்கடித்தல்
C - இத்தாலியில் முசோலினியின் செயற்பாடு
D. - சீனாவின் ஷேன்டுங் தீபகற்பத்தை யப்பான் கைப்பற்றியமை
மேற்கூறப்பட்டுள்ளவற்றுள் இரண்டாம் உலக மகா யுத்தம் ஆரம்பமாவதற்குக் காரணங்களாய் அமைந்தவை
1.A யும் B யும் 2. A யும் C யும்
3. B யும் C யும் 4. C யும் D யும்

## வரலாறு பகுதி II

பகுதி I

1. (அ)வழுங்கப்பட்டுள்ள இலங்கைப் படத்தில் பகுதி (i) இலுள்ள எல்லா வரலாற்று இடங்களையும், உலகப் படத்தில் பகுதி (ii) இன் கீழே தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் குறித்துப் பெயரிடுக.
(i) மகாநாகஹுல, தப்போவா வாவி, மினிப்பே அணை, மகாதித்த, கிரிந்தி ஓயா, அம்பதித்த, கம்பளை புலஸ்தி நகர், சிகிரியா, ஊராத்தோட்டை
(ii) இத்தாலி, சுயெஸ் கால்வாய், பாருகச்ச, பர்மா, பீஜிங், மகாநதி, லண்டன், பாரசீக வளைகுடா

(ஆ) (i) A,B,C,D எனத் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் எழுதுக.
A - எல்லாளன் இலங்கையை ஆக்கிரமித்தபோது அநுராதபுரத்தை ஆட்சி செய்த மன்னன்
B - மாத்தளை அலுவிஹாரையில் திரிபிடகம் நூலுருப் பெறும்போது ஆட்சி செய்த மன்னன்
C - இரண்டாம் உலகப் போரின் இறுதியில் நிபந்தனையின்றி சரணடைந்த யப்பான் பேரரசன்
D - 1917 ஆம் ஆண்டு ஒக்டோபர் புரட்சியை வென்று சோவியத் ரஷ்யாவைத் தோற்றுவித்த சமவுடைமைத் தலைவன்
தரப்பட்டுள்ள படங்களை அவதானித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(ii) 1. இந்த உருவில் காணப்படும் கட்டடத்தின் பெயரைக் குறிப்பிடுக.
2. அது எந்த நாட்டில் உள்ளது?
3. இக்கட்டடம் எதன் பொருட்டு நிறுவப்பட்டுள்ளது?
4. இக்கட்டடத்தை ஓவியங்களால் அலங்கரித்த கலைஞர் ஒருவரின் பெயரைத் தருக?



(iii) 1. படத்தில் காணப்படும் கட்டடத்தின் பெயரைக் குறிப்பிடுக.
2. அது எந்த நாட்டில் உள்ளது?
3. இந்தக் கட்டடம் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது?
4. 1947 ஆம் ஆண்டு இக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னோடியாக விளங்கியவரின் பெயரைத் தருக.



பகுதி II

2. (i) கீழே தரப்பட்டுள்ள A,B,C என்ற எழுத்துக்களால் குறிப்பிடப்படும் நூல்களின் ஆசிரியர்களின் பெயரைக் குறிப்பிடுக.
A - டிமுண்டா B - பூகோள சாஸ்திர பிரவேசம் C - பாரசீக யுத்தம்
(ii) பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுக்கான கல்வெட்டுக்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.
A - வர்த்தக நகரங்கள் மற்றும் கைத்தொழில்கள்
B - வர்த்தக சந்தை நிர்வாகம்
C - நீதிமன்றத்தின் மூலம் பெறப்படும் வருமானம் விஹாரைக்குரியது என்பது பற்றியது.
D - ஆராமை நிர்வாகம்
(பெரிமியன் குளம், பம்பரகல, களுதிய பொக்குண, சித்துல் பவ்வ, கொடவாய, பதுளைத் தூண் கல்வெட்டு, யட்டஹாலென, ரிட்டிகல)
(iii) மகாசேன மன்னனின் ஆட்சிக் காலத்தின்
A - பொருளியல்
B - சமயம்
என்பவற்றின் முக்கியத்துவத்தை விபரிக்குக.
(iv) அநுராதபுர இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் மூன்றினை விளக்குக.

3. (i) பின்வரும் குளங்களை அமைத்த அரசர்களை முறையே குறிப்பிடுக.
A -ஹூருளு B - பதவியா C - கந்தளாய்
(ii) A,B,C, D என்ற எழுத்துக்களால் குளம் ஒன்றின் கூறுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகளைச் செய்யும் கூறுகளை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து அவற்றை ஒழுங்குமுறையில் எழுதுக.
A-குளத்தின் நீரை வயல்களுக்கு வழங்குவதற்குக் கால்வாய்க்கு நீரைத் திறந்து விடுதல்
B-குளத்தின் நீரைக் கால்வாய்க்கு வழங்கும்போது குளக்கட்டைப் பாதுகாத்தல்
C-வான்கதவு உடைந்துபோகும் சந்தர்ப்பத்தில் குளத்து நீர் முழுமையாக வெளியேறாமல் பாதுகாத்தல்
D -மேலதிக மழைநீர் குளத்திற்கு வருவதைத் தடுத்தல்
(வான்கதவு (சுருங்கை) கலிங்கற்கட்டு, உள் வான்கதவு, கலிங்கல் தொட்டி, கலிங்கல் (மடைக்கதவு), குளக்கட்டு, உயர் அணை, சிறு குளங்கள்)
(iii) இரண்டாம் பராக்கிரமபாகு தம்பதெனிய யுகத்தின் சிறந்த ஆட்சியாளன் எனக் கொள்வதற்கு அவனால் மேற்கொள்ளப்பட்ட
A - அரசியல் B - சமயம்சார்
பணிகள் ஒவ்வொன்று வீதம் விபரிக்குக.
(iv) தென்மேற்கு இராசதானிக் காலத்தில், சமூகத்தில் காணப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பான பண்புகள் ஒவ்வொன்றினை விளக்குக.
A - கலாசாரம் B - பொருளாதாரம்

4. (i) வரலாற்று நிகழ்வுகள் தொடர்பான விடயங்கள் A,B,C என்ற எழுத்துக்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குப் பொருத்தமான ஆண்டுகளை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.
A - போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருதல்
B - ஒல்லாந்தருக்கும், இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கும் இடையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டமை
C - ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றல்
(கி.பி. 1500, கி.பி. 1505, கி.பி. 1638, கி.பி. 1766, கி.பி. 1803, கி.பி. 1815)
(ii) இலங்கையில் சமய மறுமலர்ச்சி தொடர்பான நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றிற்கு முன்னோடியாக விளங்கியவர்களின் பெயர்களை எழுதுக.
A - மகாபோதி சங்கத்தை நிறுவியமை
B - ஞாயிறு சமய பாடசாலை ஆரம்பித்தமை
C - பர்சிவல் பாதிரியாருடன் இணைந்து பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்தமை
D - "மத்ரஸா" எனும் முஸ்லிம்களின் சமயப் பாடசாலைகளை மறுசீரமைத்தமை
(iii) இலங்கையரை ஜனநாயக அரசியல் முறைக்குப் பயிற்றுவிப்பதில் டொனமூர் யாப்பு எவ்வாறு உதவியது என்பதை இரண்டு விடயங்களை முன் வைத்து விளக்குக.
(iv) பிரித்தானியரது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் பாரம்பரிய விவசாயம் வீழ்ச்சியடைந்தமைக்கான மூன்று காரணிகளை விளக்குக?

5. (i) A - சீதாவாக்கை இராச்சியத்திற்கு எதிரான முல்லேரியாப் போரில் தலைமை வகித்த போர்த்துக்கேயத் தளபதி
B-போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளனாக இருந்தவன்
C-வீரசுந்தர பண்டாரவைப் பொறிக் கிடங்கில் வீழ்த்திக் கொன்ற சீதாவாக்கை மன்னன்
மேற்கூறப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை எழுதுக.
(ii)A - இரண்டாம் இராஜசிங்க மன்னனுடன் சமாதானமாக செயற்பட்டமை
B - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுடன் கி.பி. 1766 ஆம் ஆண்டு உடன்படிக்கை செய்தமை
C - சிவில் உத்தியோகத்தர்களுக்கு சிங்கள, தமிழ் மொழிகளைக் கட்டாயமாக்கியமை
D - நீர்ப்பாசனத் திணைக்களத்தை நிறுவியமை
மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொடர்புடைய ஆளுநர்களின் பெயர்களை அடைப்புக் குறிக்குள்ளிருந்து தெரிவுசெய்து எழுதுக.
(ஜோரிஸ் பன் ஸ்பீல் பேர்கன், வெஸ்ட் ரிஜ்வே, தோமஸ் மெயிட்லன்ட், லோரன்ஸ் பீல், ரொபட் பிரௌன்றிக், வில்லியம் பல்க், பன் எங்கல்பெக், பிரட்ரிக் நோர்த்)
(iii) "கோட்டை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு தொன் ஜுவான் தர்மபாலனின் செயற்பாடுகள் காரணமாயமைந்தமையை இரண்டு உதாரணங்களுடன் விபரிக்குக.
(iv) ஒல்லாந்தர் இலங்கையில் தமது வர்த்தக ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு 1766 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகள் காரணமாயின என்பதனை இரண்டு உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக.

6. (i) கீழே தரப்பட்டுள்ள ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களின் பின்னர் இலங்கையின் பிரதமர்களாகப் பதவியேற்றவர்களின் பெயர்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.
A - 1947 B - 1956 C - 1965
(விஜயானந்த தஹநாயக்க, டட்லி சேனாநாயக்க, ஜோன் கொத்தலாவல, டி.எஸ். சேனாநாயக்க, ஜே.ஆர்.ஜெயவர்தன, எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க)
(ii) 1978 ஆம் ஆண்டு யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள இரண்டு அடிப்படை மனித உரிமைகளைத் தருக.
(iii) அ) 1978 ஆம் ஆண்டு யாப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட இரண்டு பிரதிநிதித்துவ முறைகளைக் குறிப்பிடுக.
ஆ) அவற்றில் ஒன்று செயற்படும் முறையைத் தெளிவுபடுத்துக.
(iv) 1978 ஆம் ஆண்டு யாப்பின்படி
A - பாராளுமன்றம் B - அமைச்சரவை
மேற்குறிப்பிட்டவை தொடர்பாக ஜனாதிபதிக்கு உரிய அதிகாரங்கள் ஒவ்வொன்று வீதம் எழுதுக.

பகுதி III

7. (i) வேத காலத்தில் ஆரியர்கள் வழிபட்ட மூன்று தெய்வங்களின் பெயர்களை எழுதுக.
(ii)A,B,C,D என்ற எழுத்துக்களில் கொடுக்கப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்குமுறையில் அவற்றை எழுதுக.
A - பாடலிபுத்திரத்தை மகதத்தின் தலைநகராக்கிய மன்னன்
B - நந்த அரச வம்சத்தின் ஆரம்ப மன்னன்
C - செலியுகஸ் நிக்கேடருடன் போரிட்டு வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்றியவன்
D - நான்காம் பௌத்த மகா நாட்டைக் கூட்டுவதற்கு முன்னோடியாக இருந்தவன்
(பிம்பிசாரன், மகா பத்மநந்தன், அஜாசத்ரு, சமுத்திர குப்தன், சந்திர குப்த மௌரியன், கனிஷ்கன், தனநந்தன், அசோகன்)
(iii) மகதத்தின் ஆட்சியைப் பலமடையச் செய்யும் பொருட்டுப் பிம்பிசார மன்னன் பின்பற்றிய இரண்டு வழிமுறைகளைத் தெளிவுபடுத்துக.
(iv) குப்தர் காலத்தில் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட எழுச்சியைத் தெளிவுபடுத்துக.
A - கல்வி B - இலக்கியம்

மிகுதி நாளை வெளிவரும்...

**Sats-Tech Engineers**
மற்றும்
**Tv Lanka Digital Cable Less Televion**



நிறுவனத்தினர் இணைந்து வழங்கும்
நல்லூர் கந்தனின்
மஹோற்சவ கால விசேட சலுகை விற்பனை
தொலைக்காட்சி ரசிகர்களே!!!
ரூபாய் 4,999/-* செலுத்தி இணைப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்.
2 வருடங்கள் எந்தவிதமான
கட்டணங்களும் செலுத்த வேதவையில்லை.

**Rs. 4,999/-***

**2 year total free subscription**



சன் டிவி/ கே.டிவி உட்பட 25 தமிழ் சானல்கள் மற்றும்
விளையாட்டு/ சிறுவர் நிகழ்ச்சி
/ ஆங்கிலச்சானல்கள் / விஞ்ஞான சானல்கள்
மொத்தம் 60 டிஜிட்டல் டிவி சானல்களை கண்டு களிக்க
கூடிய அதி உயர் தொழில்நுட்ப முறையிலான
கேபிள் இல்லா தொலைக்காட்சி சேவை மூலம்
கண்டு களிக்க ஓர் அரிய வாய்ப்பு!

தொடர்புகளுக்கு :-
**SATS-TECH ENGINEERS**
NO 298 K.K.S ROAD JAFFNA
PHONE: 0212228812

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.


## இரு நூலும் சஞ்சிகையும் பெறப்படும்

இலங்கை எழுத்தாளர்களிடமிருந்து இரண்டு நூல்களையும் சஞ்சிகையாளர்களிடமிருந்து ஒரு சஞ்சிகையும் பெற்றுக்கொள்ள கொழும்புத் தமிழ்ச்சங்கம் தீர்மானித்துள்ளது என அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கம்மா சிவசுப்பிரமணியம்

ஓய்வு நிலை அதிபர் - கிளி/ வட்டக்கச்சி தெற்கு (அ.க.ப)
நெடுந்தீவு - வட்டக்கச்சி



நெடுந்தீவு மேற்கை பிறப்பிடமாகவும் இல.908, கட்சன் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்து வந்த வரும் கிளி/வட்டக்கச்சி தெற்கு அ.த.க. பாடசாலையின் ஓய்வுநிலை அதிபருமாகிய திருமதி தங்கம்மா சிவசுப்பிரமணியம் அவர்கள் 2016.08.13 ஆம் திகதியன்று காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான கந்தையா-கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலம் சென்றவர்களான பரராஜசிங்கம் -இரத்தினம்மா தம்பதிகளின் மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான பேரம்பலம் பசுபதி, இலட்சுமி மற்றும் பொன்னுத்துரை, தர்மலிங்கம், காலம்சென்ற கனக்மலர் மற்றும் லோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரியும்.

பாஸ்கரன் (தயா-லண்டன்) புஸ்பகரன் (ஜெயா-இத்தாலி), சோதீஸ்வரி (ஜெயந்தி-லண்டன்), சிவனேஸ்வரி (சாந்தி-லண்டன்), காலம்சென்ற திலகேஸ்வரி (வசந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும் சதாம்பிகை (சசி-லண் டன்), பொன்மலர் (மாலா-இத்தாலி), சண்முகலிங்கம் (சத்தி-லண்டன்), பிரேம்குமார் (பிரேம்-லண்டன்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும்

திவாகரன், ஜெபேசன், மிதுசா,சீதுசா, சுலக்சன், அனுசன், தனுஜா, வினுஜா, அபிஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2016.08.16 ஆம் திகதி நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு வட்டக்கச்சியிலுள்ள சொந்த இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மம்மில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்

இல. 908, கட்சன் வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி. (C-5448)

தகவல்
குடும்பத்தினர்
ப. சிவசுப்பிரமணியம் (கணவன்)
077 8315 183

# நல்லை மங்கையர்க்கரசியின் மனம் நெகிழஞ்சலி



எமது பாடசாலையில் அண்மையில்
அதிபர் சேவையில் இணைந்து
கொண்ட ஆசிரியை திருமதி
கௌரிபாலினி கோடீஸ்வரன்
அவர்களின் அன்புத் தாயார் திருமதி
**ஜெயபாலினா இராஜேஸ்வரி**
(ரோகினி ரீச்சர்) அவர்களின் பிரிவுத்துயரில்
நாமும் பங்கேற்று அவரின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
(சி-5222)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 810

**கன்சி**

பணம் இருந்தா செத்துப்போன
காதலிக்கு தாஜ்மஹால் கூட
கட்டலாம்டா...
பணம் இல்லைனா உயிரோட
இருக்கற காதலிக்கு தாலி கூட
கட்ட முடியாதுடா...

**மது**




15 வருஷமா தீராத உங்க வியாதிக்கு.
ஒரு வழியா மருந்து கண்டு பிடிச்சுட்டேன். ஆனா
பேட் லக் எழுதி வெச்ச என்னோட கையெழுத்தை
என்னாலேயே படிக்க முடியல!

**தர்சி**

சொந்தக்காலில் வாழ்ந்தாலும் அடுத்தவர்களையும்
மதிக்கக் கற்றுக் கொள்... ஏனென்றால்




**உஷா**



**நிசாந்தன்**

சாப்பிடும்போது ரிவி பாக்காதிங்க,
சாப்பாட்டு டேஸ்ட்டே தெரியாது.




**மதுசிகா**

நான் படிச்சாதான் என் குடும்பத்த நான் காப்பாத்த
முடியும்!!!



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சர்வதேச போட்டித் தடையை தவிர்க்க முடியும்- தயாசிறி

இலங்கைக்கு சர்வதேச போட்டித்தடை விதிக்கப்படக்கூடிய நிலையிருக்கின்ற போதிலும், இரண்டு மாதங்களில் சட்டங்களில் திருத்தம் செய்து தடையை தவிர்க்க முடியும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை விளையாட்டுச் சட்டம், விளையாட்டு நியமனங்கள் மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொண்ட நியதிகளை மாற்றியமைப்பதாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்டங்கள் நியதிகளை மாற்றி அமைப்பதாக சர்வதேச ஒலிம்பிக் பேரவைக்கு அளித்த வாக்குறுதிகள் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இன்னும் இரண்டு மாதங்களில் இலங்கைக்கு சர்வதேச போட்டித் தடை விதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சர்வதேச ஒலிம்பிக் பேரவை எச்சரிக்கை விடுத்துள்ளதாக ரியோ ஒலிம்பிக் கிராமத்திலிருக்கும் தேசிய ஒலிம்பிக் பேரவையின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தடை விதிக்கப்பட்டால் இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகள் சர்வதேச ஒலிம்பிக் கொடியின் கீழ் போட்டிகளில் பங்கேற்க நேரிடும் என அவர் தெரிவிததார்.இந்த விடயம் பாரதூரமானது என பல தடவைகள் எச்சரிக்கை விடுத்தும் விளையாட்டு அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், இரண்டு மாதங்களில் சட்டங்களில் திருத்தம் செய்து தடையை தவிர்க்க முடியும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (இ-5-7)

# சுவிஸ் குடியுரிமை பெற்ற மற்றுமொரு எம்.பியுள்ளார்

## கீதா குமாரசிங்க தகவல்

இலங்கையில் தன்னைப் போன்று சுவிஸ் குடியுரிமை பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கீதாகுமாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் பெயரைக் கூற மறுத்த கீதா, அவர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் என தெரிவித்தார்.அதேவேளை தான் 15 வருடங்களாக திரைப்படங்களில் நடித்துள்ளதாகவும், தொலைக்காட்சி நாடகங்களில் நடிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

அரசியலுக்கு வருவதற்கு முன், மறைந்த ரணசிங்க பிரேமதாஸவின் படத்தில் நடித்துக்கொண்டிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சுவிஸிற்கு குடியுரிமை பெற்றிருந்த கீதா குமாரசிங்கவின் இரட்டைகுடியுரிமை இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 50 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 80 | 95 | 100 | 100 |
| பச்சைமிளகாய். | 200 | 200 | 200 | 200 | 200 | 200 |
| தக்காளி | 50 | 40 | 30 | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 60 | 80 | 80 | 80 | 100 |
| கோவா | 120 | 100 | 70 | 120 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 100 | 120 | 120 | 120 |
| பூசணி | 30 | 50 | 40 | 50 | 60 | 60 |
| புடோல் | 40 | 40 | 20 | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 100 | 100 | 90 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 | 70 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 80 | 90 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 100 | 120 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 30 | 60 | 30 | 50 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | — | 120 | 140 | 180 |
| பயற்றங்காய் | 40 | 20 | 20 | 30 | 20 | 50 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 30 | 60 | 60 | 70 |
| கறிமிளகாய் | 200 | 200 | 150 | 120 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 80 | 50 | 100 | 100 | 100 | 60 |
| போஞ்சி | 160 | 200 | 150 | 150 | 200 | 180 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 50 | 50 | 60 | 70 |
| கீரை – 1பிடி | 10 | 10 | 20 | 30 | 30 | 15 |
| தேசிக்காய் | 150 | 100 | 120 | 100 | 200 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 15-25 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 140 | 120 | 160 | 150 |
| முள்ளாங்கி | 40 | 40 | 20 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 10 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 30 | 40 | 30 | 50 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலிகளின் 2 தலைவர்கள் சரண் 252

எங்களுடன் அவர்கள் போரிடவில்லை. பயந்து ஓடிக்கொண்டிருக்கிறார்கள். போர் நிறுத்தத்துக்கு அவசியமே இல்லை. உலக நாடுகளை ஏமாற்றவும் மீண்டும் தங்களை வலுப்படுத்தும் முயற்சியாகவே போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர். விடுதலைப்புலிகள் உடனடியாக சரணடையவேண்டும். இல்லாவிட்டால் முற்றிலுமாக அழிக்கப்படுவார்கள்.

விடுதலைப்புலிகளால் வலுக்கட்டாயமாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ள தமிழர்களை மீட்க மேலும் ஒரு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ளும். தினமும் ஏராளமான மக்கள் வெளியேறி வருகின்றனர். விடுதலைப் புலிகளிடம் 5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு மட்டுமே உள்ளது.

இவ்வாறு கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் 2 தலைவர்கள் சரண் அடைந்ததாக இராணுவம் அறிவித்தது.

சிங்கள இராணுவம் நடத்திய உச்சகட்ட தாக்குதலைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் 18 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு பகுதி மட்டுமே விடுதலைப்புகளின் கட்டுப்பாட்டிலிருந்தது. இராணுவம் நடத்திய இறுதி கட்ட தாக்குதலில் அந்தப் பகுதியில் இருந்த தமிழர்கள் அரசு கட்டுப்பாட்டு பகுதியை நோக்கி வெளியேற தொடங்கினார்கள்.

அதன் பிறகு தொடர்ந்து முன்னேறிச் சென்ற இராணுவம் விஸ்வமடு குளம், ஆலங்குளம் உள்பட மேலும் 8 சதுர கிலோமீற்றர் பரப்பளவு குறுகிய பகுதிக்குள் விடுதலைப்புலிகள் சுற்றி வளைக்கப்பட்டனர்.

### 2 தலைவர்கள் சரண்

இதற்கிடையே 22-04-2009 அன்று புது மாத்தளன் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு இருந்த போது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் 2 பேர் தங்கள் குடும்பத்தினருடன் சரண் அடைந்ததாக இராணுவம் அறிவித்தது. அவர்களில் ஒருவரான வேலாயுதம் தயாநிதி என்கிற தயா மாஸ்டர் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமை செய்தித் தொடர்பாளராக இருந்தார். வடமராச்சியை சேர்ந்த அவர் விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் சேருவதற்கு முன்பு ஆங்கில ஆசிரியராகப் பணி புரிந்து வந்தார்.

மற்றொரு தலைவரான வி.கே.பஞ்சரத்தினம் என்கிற ஜார்ஜ் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவராகப் பணி புரிந்து போரில் கொல்லப்பட்ட தமிழ்ச்செல்வனின் உதவியாளராகவும் மொழிப் பெயர்பாளராகவும் பணி புரிந்தவர். விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைவதற்கு முன்பு அவர் தபால் அதிகாரியாகப் பணிபரிந்து வந்தார்.

### கோர்ட்டில் ஆஜர்

போரில் பிடிபடும் நிலை ஏற்பட்டால் சயனைட் சாப்பிட்டு உயிர்த்தியாகம் செய்வது விடுதலைப்புலிகளின் வழக்கம் ஆகும். அதற்கு மாறாக இரு முக்கிய தலைவர்கள் இராணுவத்திடம் சரணடைந்து இருப்பது இதுவே முதல் முறை என்று இராணுவத்தரப்பில் தெரிவிக்கப் பட்டது.

சரணடைந்த இரு தலைவர்களும் விமானத்தில் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு கோர்ட்டில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

### விடுதலைப்புலிகள் மறுப்பு

விடுதலைப்புலிகள் இயக்க மூத்த தலைவர்கள் தயா மாஸ்டர், ஜார்ஜ் ஆகிய இருவரும் இராணுவத்திடம் சரணடைந்ததாக இராணுவத் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் அதை விடுதலைப் புலிகள் மறுத்தனர். இது தொடர்பாக அவர்கள் கூறியதாவது,

தயா மாஸ்டரும் ஜார்ஜும் நோய்வாய்ப்பட்ட நிலையில் பாதுகாப்புப் பகுதியில் உள்ள புதுமாத்தளன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர். அந்த வைத்தியசலையை இராணுவம் கைப்பற்றிய போது இருவரையும். இராணுவம் கைது செய்தது. இவ்வாறு அவர் கூறினார்.





### போர் முனையில் பிரபாகரன்

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும் அவருடைய முக்கிய தளபதிகளும் எங்கும் தப்பிச் செல்லவில்லை. என்றும் இன்னும் போர் முனையில் தான் உள்ளனர் என்றும் இராணுவத் தகவல்கள் தெரிவித்தன.

பிரபாகரன் போர் முனையில் இருப்பதை உறுதி செய்த இராணுவ அமைச்சக செய்தித் தொடர்பாளர் கெகலிய ரம்புக்வெல விடுதலைப்புலிகள் தங்களுடைய இராணுவப்பலத்தை முற்றிலும் இழந்த விட்டதாகத் தெரிவித்தார்.

இராணுவத் தாக்குதலை நிறுத்தவேண்டும் என்றால் விடுதலைப்புலிகள் தங்கள் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு சரணடைவதைத் தவிர வேற வழியில்லை. இன்னும் 15 ஆயிரம் தமிழர்கள் மட்டுமே போர் பகுதியில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

ஒருலட்சத்துக்கு அதிகமான தமிழர்கள் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

### 2 இலட்சம் தமிழர்கள்

ஆனால் இன்னும் 2 இலட்சம் தமிழர்கள் போர் பகுதியில் சிக்கி இருப்பதாக தெரிவித்த ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் தாக்குதல் தொடர்ந்தால் குழந்தைக் பெண்கள் உள்பட ஏராளமான பேர் பலியாகும் பேரழிவு நிச்சயம் என்று மீண்டும் எச்சரிக்கை விடுத்தனர்.

கடலோரத்தில் வால் போல் காட்சியளிக்கும் குறுகிய நிலப்பரப்பிற்குள் 25 ஆயிரம் கூடாரங்கள் அமைக்கப் பட்டிருப்பதை அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள செயற்கைக்கோள் படத்தில் பார்க்க முடிந்தது.

இதன் மூலம் ஏற்கனவே கடந்த 2 நாட்களில் வெளியேறிய 95 ஆயிரம் பேர் தவிர இன்னும் 1 இலட்சத்து 25 ஆயிரம் பேர் வரை போர் முனையில் சிக்கி இருக்கலாம் என்று கருதப்பட்டது.

### பாதுகாப்பு அரண்கள் தகர்ப்பு

5 சதுரகிலோமீற்றர் நிலப் பரப்பிற்குள் விடுதலைப் புலிகள் முடக்கப்பட்டனர். அங்கு கனரக ஆயதங்கள் பயன்படுத்தப்படுவதை நிறுத்திக் கொள்வதாகவும் அதே சமயத்தில் விடுதலைப்புலிகளிடம் சிக்கியுள்ள தமிழர்களை மீட்கும் நடவடிக்கை தொடரும் என்றும் அரச அறிவித்தது.

(தொடரும்)

# விழிப்புடன் செயற்பட தூக்கமே அவசியம்!

## தொழில் ரகசியம்

இந்தப் பத்தி தூக்கத்தை பற்றியது. விழிப்புடன் வேலை செய்ய செழிப்பாய் தூங்குங்கள் என்பதைச் சொல்கிறது. அதனால் தூங்காமல் கவனத்துடன் படிக்கவும்!

நம்மூரில் ஒரு கெட்ட எண்ணம் உண்டு. தூங்குபவன் சோம்பேறி, தூக்கத்தை துறந்து வேலை செய்பவனே உழைப்பாளி. இப்படி சொல்லியே தானாய் வரும் தூக்கத்தை கெடுத்து குட்டிச்சுவராக்கி நிம்மதியாய் உறங்குவதையே ஒருவித குற்ற உணர்ச்சியாக்கி சுகமாய் செய்ய வேண்டியதை யாருக்கும் தெரியாமல் போர்வையால் முகத்தை மூடிக் கொண்டு தூங்கும் அளவிற்கு தள்ளியிருக்கிறது.

உழைக்கிறேன் பேர்வழி என்று சரியாய் தூங்காமல் இருப்பது கற்றுக் கொள்ளும் திறனைக் குறைத்து, தேவைக்கு அதிகமாக உணர்ச்சி வசப்படவைத்து, நெஞ்சில் படபடப்பை அதிகப்படுத்தி மொத்தத்தில் மூளையை மழுங்கச் செய்து அதன் உற்பத்தித்திறனை குறைக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இது தெரியாமல் உறங்காமல் உழைப்பதை பெருமைப்படதாக்கி அதுவே அதிக செயல்திறன் என்று தவறாக நினைக்க வைத்து தூக்கமில்லா உழைப்பு ஒரு தொழில் கலாசாரம் ஆகிவிட்டது. இதனாலேயே பலர் 18 மணி நேரம் உழைக்கிறேன் என்று மார்தட்டி 3 மணி நேரம் மட்டும் தூங்குகிறார்கள்.

கம்ப்யூட்டர் ஹாங் ஆனால் அதை ரீபூட் செய்கிறோம் இல்லையா? அதைப் போலத்தான் மனித மூளையும் என்கிறார்கள் ஆய்வாளர்கள். ஆயிரம் வேலை தலைக்கு மேல் உட்கார்ந்து மென்னியை முறிக்கும் போது மூளையும் எண்ணங்களும் ஓஃப் ஆகி ஒன் ஆக மாட்டேன் என்று அடம்பிடிக்கிறது பாருங்கள், அப்பொழுது ஒரு சின்ன தூக்கம் போட்டால் மூளை ரீபூட் ஆகி மகிழ்ச்சியாய் வேலை செய்யுமாம்.

புறசிடிங் ஒப் நசனல் அக்கடமி ஒப் சயின்ஸ் என்ற அமைப்பு கனவுடன் கூடிய தூக்கம் மனதில் பதிந்திருக்கும் பல்வேறுபட்ட தகவல் களை ஒருங்கிணைக்க வைத்து புதுமையாய் சிந்தித்து புதிய விடைகளைக் கண்டுபிடிக்க வைக்கும் என்று ஆராய்ந்து கூறியிருக்கிறது. நல்ல தூக்கம் நினைவாற்றலை கூட அதிகரிக்குமாம். தூக்கம் என்றால் இரவில் படுத்து மறுநாள் மதியம் வரை தூங்கி வீட்டில் உள்ளவர்கள் தலைமாட்டில் ஊதுவத்தி ஏற்றி ஊருக்கு தகவல் தரவேண்டுமோ என்று நினைக்கும் அளவிற்கு தூங்க வேண்டும் என்றில்லை. கிடைத்த இடைவெளியில் ஆறு நிமிட தூக்கம் கூட எதேஷ்டமாம். இதை மைக்ரோ நேப் என்கிறார்கள்.


நான்கு ஐந்து நாட்கள் தொடர்ந்து சராசரி 4 மணி நேரம் மட்டும் தூங்கினால் இருபத்தி நான்கு மணி நேரம் தொடர்ந்து தூங்காமல் இருப்பதற்கு சமம். தூக்கமின்மை சிந்திக்கும் திறனை குறைத்து சரக்கடித்தால் ஏற்படுமே அந்த கிறுகிறுப்பிற்கு சமம். இப்படி பத்து நாள் தொடர்ந்து செய்தால் 48 மணி நேரம் தொடர்ந்து தூங்காமல் இருப்பது போல் இருக்கும். இதனால் மூளை செயல்பாடு பாதிக்கப்பட்டு முடிவெடுக்கும் திறன் முடக்கப்பட்டு, பதிலளிக்கும் நேரம் நீட்டிப்பட்டு பிரச்சினை தீர்க்கும் திறன் கெடுக்கப்படுகிறது.

துக்கம் நிறைந்த வாழ்க்கையை கூட வாழலாம், தூக்கமில்லா வாழ்க்கை ரொம்பவே துயரமானது. இனி மேலாவது தூங்காமல் உழைப்பதே சிறந்தது என்று அப்பாவியாய் நினைக்காமல் கொட்டாவி வந்த மாத்திரம் தூக்கத்தோடு மல்லுக்கட்டாமல் மல்லாக்க படுத்து மற்றதை மறந்து சொப்பனத்தோடு சௌக்கியமாய் உறங்குங்கள். அறிவு சார்ந்த இன்றைய பொருளாதாரத்தில் விழிப்புடன் செயல்பட தூக்கமே அத்தியாவசியம் என்பதை உணருங்கள்.

தூக்க விடயத்தில் தலைசிறந்த நிபுணர் 'ஹாவர்ட் மெடிகல் ஸ்கூலை' சேர்ந்த டாக்டர் சார்லஸ் செய்ஸ்லெர் நிர்வாகங்கள் தங்கள் மற்றும் நிறுவன ஊழியர்களின் செயல்பாட்டை உயர்த்த நினைத்தால் தூக்கத்தை உதாசீனப்படுத்தாமல் அதன் முக்கியத்தை உணரவேண்டிய தருணம் வந்துவிட்டது என்கிறார்.

எந்த காரணம் கொண்டும் யாரும் 12 மணி நேரத்துக்கு மேல் உழைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு 24 மணி நேரத்திற்கும் அனைவருக்கும் தொடர்ந்த 11 மணி நேர ஓய்வு கட்டாயம் தரவேண்டும். யாரும் வாரத்திற்கு 60 மணி நேரத்திற்கு மேல் உழைக்கக்கூடாது. எக்காரணம் கொண்டும் கண்டிப்பாக வாரத்திற்கு 80 மணி நேரத்திற்கு மேல் உழைக்கவே கூடாது.

மேற்பார்வையாளர்கள் முதல் நிர்வாகம் வரை அனைவருக்கும் தூக்கம் மற்றும் Fatigue Management பயிற்சிகள் கண்டிப்பாய் அளிக்கப்பட்டு அவர்கள் கீழ் வேலை செய்பவர்களை அவர்கள் ஊக்கப்படுத்த அறிவுறுத்த வேண்டும். நிறுவன நிர்வாகமும் ஊழியர்களும் தேவைப்படும் உறக்கத்தை பெற்று துடிப்புடன் ஊழியம் புரிய தேவையான ஓய்வு கிடைக்கும் வகையில் நிறுவன செயல்திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் என்கிறார்.



பல நிறுவனங்கள் இன்று Pro-napping Policy ஒன்றையே வகுத்து வைத்திருக்கின்றன. 'கூகுள்' தன் அலுவலகத்தில் தூங்குவதற்கு தனி அறைகளை கட்டித்தந்திருக்கிறது. பல நிறுவனங்கள் நெகிழ்வான வேலை நேரத்தை வைத்திருக்கின்றன. கொடுக்கும் வேலையை நேரத்தில் செய்து முடிக்கவேண்டும் என்பது தான் முக்கியமே ஒழிய அதை எப்படி, எவ்வாறு, எங்கு, எப்பொழுது செய்து முடிப்பது என்பதை ஊழியர்கள் சௌகரியத்திற்கு விட்டுவிடுகிறார்கள்.

பல நிறுவனங்கள் ஊழியர்களின் வேலைத் திறனை அதிகரிக்க கோடிக் கணக்கில் செலவு செய்கின்றன. உற்பத்தித்தினை அதிகப்படுத்தும் தூக்கத்தை சரியான அளவு கிடைக்கும் படி செய்தால் அதுவே ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். இதையெல்லாம் செய்ய முடியுமா, பலன் தருமா என்று மலைக்காமல் நிறுவனத்தின் ஒரு பிரிவில் மட்டும் இதை பரட்சார்த்த முறையில் செயல்படுத்தி பார்க்கலாம்.

நிறுவனத்தின் கொள்கை ஒரு பக்கம் இருக்கட்டும். நமக்கு நாமே ஒரு தூக்க திட்டம் வைத்துக்கொள்வது நல்லது. சரியாய் தூங்காமல் கூட்டத்தில் கொட்டாவி விட்டு நம் செயல் திறனில் பாதியை மட்டும் பிரயோகித்து அதை ஈடுகட்ட இரட்டிப்பு நேரம் செலவழிப்பது எதற்கு. அதற்கு பதில் நன்றாக உறங்கி பிரெஷ்ஷாக வேலை செய்தால் பாதி நேரத்தில் இரட்டிப்பு செயல்திறன் காட்டலாமே.

நீல ஒளியோடு இயங்கும் செல்ஃபோன், லேப்டாப், ரேப்லட் போன்ற எல்இடி கருவிகள் மூளையில் கார்டிசால் என்ற சமாச்சாரத்தை அதிகப்படுத்தி தூங்குவதற்கு தேவையான மெலடோனினை கட்டுப்படுத்துகிறதாம். படுக்கும் வரை இவைகளுடனேயே நாம் அதிகம் குடும்பம் நடத்துவதால்தான் தூக்கம் வராமல் அவதிப்படுகிறோமாம். தூங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பு இந்த கன்றாவிகளை அணைத்து தொலையுங்கள் என்கிறது 'நஷனல் ஸ்லீப் பவுண்டேசன்'என்ற அமைப்பு.

தூக்கத்தைப் பற்றிப் பேச இன்னமும் கூட நிறைய விஷயம் இருக்கிறது. ஆனால் பாருங்கள், எனக்குத் தூக்கம் வருகிறது. பிறகு பார்ப்போமே!

# உங்கள் வளம் உங்கள் மனதில்!

ஏன் சிலர் மட்டும் எளிதாக பணத்தை சம்பாதித்துவிடுகிறார்கள், மற்றவர்கள் இதனை பெரும் போராட்டமாக தங்கள் வாழ்வில் எதிர் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்றாவது நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? இந்த இரு பிரிவினரிடையே ஏதாவது வேறுபாட்டினை கண்டதுண்டா?. அவர்களது கல்வியில், அறிவு திறனில், மற்ற திறமைகளில், பணி தொடர்பான பழக்கங்களில், தொடர்புகளில், அதிர்ஷ்டத்தில், வேலைகளை தேர்வு செய்வதில், தொழிலில் அல்லது முதலீட்டில் என எதிலாவது வேற்றுமை உண்டா என்றால், இவற்றில் எதுவும் இல்லை என்பதே இதற்கான பதில்.

வேறு என்ன வித்தியாசம் என்கிறீர்களா? தங்களுக்கான நிதியின் எதிர்காலத்தை தங்கள் மனதிலிருந்து சரியாக அறிந்துகொண்டால் மட்டுமே, அதனை அடையவும் முடிகின்றது என்கிறார் "சீக்ரெட்ஸ் ஒப் தி மில்லியனரி மைண்ட்" என்னும் இந்த புத்தகத்தின் ஆசிரியர் "டி ஹார்வ் எகெர்".


### நிதி செயல்திட்டம்!?

எனக்கு ஐந்து நிமிடம் கொடுங்கள், உங்களது ஒட்டுமொத்த வாழ்விற்கான நிதி எதிர்காலத்தை என்னால் கணித்துக்கொடுக்க முடியும் என்கிறார் ஆசிரியர். ஆம், ஒருவருடைய பணம் மற்றும் வெற்றியின் செயல்திட்டத்தை சரியாக அடையாளம் காண்பதன் மூலம் இதைச் செய்ய முடியும் என்கிறார். நம் ஒவ்வொருவருக்கும் நமது ஆழ்மனதில் நமக்கான தனிப்பட்ட இந்த செயல்திட்டம் பதியப்பட்டுள்ளது என்பதையும் தெளிவுபடுத்துகிறார். இதுவே மற்ற எதையும் விட நமது நிதி எதிர்காலத்தை தீர்மானிக்கும் வல்லமை உடையது. இதனை கண்டறிந்து புதுப்பிக்கவும், அதன்மூலம் இயற்கையான வெற்றிகளை வசப்படுத்தவும் முடியும் என்பதே ஆசிரியரின் வாதம்.

பணம் தொடர்பான அனைத்தும் நமக்கு தெரிந்திருக்கலாம். மார்க்கெட்டிங், பங்கு, தொழில் என நிதி ரீதியிலான அனைத்திலும் நாம் கில்லாடியாக இருந்தாலும், உயர்ந்த வெற்றிக்கான நமது நிதி செயல்திட்டத்தை சரியாக 'அமைத்துக் கொள்ளாத நிலையில், நம்மால் அதிகப்படியான பணத்தை சம்பாதிக்க முடியாது என்கிறார் ஆசிரியர். ஒருவேளை சம்பாதித்தாலும், அவற்றை சரிவர கையாளாமல் இழந்துவிடுவதற்கான வாய்ப்புகளே அதிகம் என்பதையும் குறிப்பிடுகிறார்.

### எப்படி உருவாகிறது!?

உங்களுக்கான நிதி மற்றும் வெற்றியின் செயல்திட்டம் எவ்வாறு உருவாகின்றது என்பதை தெரிந்து கொள்வோம். இதன் முதல்படி உங்களுக்கு கிடைக்கும் தகவல் களிலிருந்து தொடங்குகின்றது. பெரும்பாலும் இந்த தகவல்கள் உங்கள் பெற்றோர், உடன்பிறந்தோர், நண்பர்கள்,




ஆசிரியர்கள், ஊடகம் மற்றும் உங்கள் கலாசாரம் போன்ற பல முனைகளிலிருந்தும் சிறுவயது முதலே உங்களுக்குள் ஊடுருவி புரோகிராமிங் செய்யப்பட்டு விடுகின்றன. இந்த அடித்தள தகவல்களே உங்களது வெற்றிக்கான செயல்திட்டத்திற்கு தொடக்கப்புள்ளி.

மனதிலுள்ள இந்த தகவல்களே உங்களது எண்ணங்களுக்கு வழி வகுக்கின்றது. பிறகு இந்த எண்ணங்கள், உங்களது உணர்வுகளுக்கு வழி வகுக்கின்றது. அதன்பிறகு உணர்வுகள் செயல்வடிவம் பெற்று உங்களிடமிருந்து வெளிப்படுகின்றது. இறுதியில் இந்த செயல்பாடே உங்களது வெற்றிக்கு வழிவகுக்கின்றது. ஆக, சிறு வயது முதலே நீங்கள் பார்த்தது, கேட்டது மற்றும் உங்கள் அனுபவம் ஆகியவற்றில் பணம் தொடர்பான விஷயங்கள் எவ்வாறு இன்றைய உங்களது நிதிநிலையை பாதித்துள்ளது என்பதன் மூலமே உங்களுக்கான நிதி திட்டமிடல் உருவாகின்றது.

### வெற்றியாளர்களின் சிந்தனை!?

பணக்காரராக வேண்டுமானால் பணக்காரர்களின் சிந்தனையையும் செயலையும் கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு அவர்கள் எவ்வாறு சிந்திககிறார்கள் மற்றும் செயல்படுகிறார்கள் என்பது தெரிந்திருக்க வேண்டும்.

ஏழ்மையான மற்றும் நடுத்தர மக்களிடமிருந்து பணக்காரர்களின் சிந்தனையும் செயலும் பெரிதும் வேறுபடுவதாக சொல்கிறார் ஆசிரியர். பணம், வசதி, அவர்களுக்கான மற்றும் மற்றவர்களுக்கான எண்ணம் என வாழ்வின் அனைத்து நிலைகளிலும் அவர்களின் செயல் பாடு வேறுபட்டதாகவே உள்ளது. இவர்களிடம் உள்ள சிந்தனை மற்றும் செயல்பாடு களில் உள்ள வேறுபாடே அவர்களை பணக்காரர்களாக மாற்றியுள்ளது என்பதை உணர்ந்து செயல்படும்போது நீங்களும் அவர்களது நிலையை அடையலாம்.

### வாழ்க்கையின் உருவாக்கம்!?

பணக்காரர்களிடம் உள்ள பணம் அவர்களுக்காக கடுமையாக உழைக்கின்றது. மற்றவர்களோ பணத்திற்காக கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், நிதி நிலைமையில் சிறந்தவர்கள் ஒருபோதும் தங்களது தேடுதலை நிறுத்திக்கொள்வதில்லை. இந்த வேறுபாடுகளை உணர்ந்து வெற்றியாளர்களைப் போல் செயல்பட்டு நாமும் வளம் பெறுவோம்.

பழத்தை உருவாக்கியது விதைகளும் வேர்களும்தானே. அதை ஏன் மறந்து விடுகிறீர்கள்?. எது உங்கள கண்களுக்கு தெரியாமல் தரைக்கு அடியில் உள்ளதோ, அதுவே உங்கள கண்களுக்கு தெரிகின்ற தரைக்கு மேல் உள்ளதை உருவாக்குகின்றது என்பதை மறந்துவிடாதீர்கள்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,522.14 | 6,517.13 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,566.84 | 3,531.36 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 3,313.216

***உயர்வடைந்த பங்குகள்(ரூ)*** அலியான்ஸ்(1035.90), எஸ்எம்பி லீசிங்(0.90), லக்ஸ் சபரன (10.30), ஏசிஎல் பிளாஸ்ரிக்(225.00), சிங்கபுத்திர பினா(9.60).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** எஸ்எம்பி லீசிங்(X)(0.30), நெஸ்ரல்(2086.00), றோயல் பாம்ஸ்(30.00), அமானா தகபுல்(0.90), பலாங்கொட 14.70).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 143.38 | 147.16 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 185.32 | 191.78 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 158.74 | 164.90 |
| சுவிஸ் பிராங் | 146.08 | 152.07 |
| கனேடிய டொலர் | 109.74 | 114.20 |
| அவுஸ்திரேலிய டொலர் | 109.12 | 114.10 |
| சிங்கப்பூர் டொலர் | 106.15 | 110.16 |
| ஜப்பான் யென் | 1.39 | 1.45 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.17 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.61 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# புதிய பொருளாதார வலய அமைவிடம்



பேராசியர்
பசுபதி சிவநாதன்

வியட்நாம் யுத்தத்திற்குப் பின் மக்கள் அழிவிற்குப் பின்னரான பொருளாதார செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு புதிய பொருளாதார வலயம் (New Economic Zone) தோற்றுவிக்கப்பட்டது என்பது வரலாறாகும். அவ்வாறான எண்ணப் பாங்குடன் போருக்குப்பின் அழிவுக்குட்பட்ட பிரதேசத்தில் புதிய பொருளாதார வலயம் ஒன்றைத் தோற்விற்பதற்குத்தான் வவுனியாவில் புதிய பொருளாதார வலயம் ஒன்று வேண்டும் என அரசாங்கம் முடிவெடுத்து 200 மில்லியன் ரூபாவை செலவிட முன்வந்ததோ என எண்ணத் தோன்றுகிறது.

உலகில் தேவை கருதி ஒவ்வொரு நாடும் பொருளாதார வலயங்களைத் தோற்றுவித்து தமது பொருளாதார இலக்கை அடைவது வழமையான தொன்று. எவை எவை அவசியம் என கருதப்படுகிறதோ அதற்கு ஏற்ற வகையில் பின்வருவனவற்றில் ஒன்றையோ ஒரே வேளையில் ஒன்றிற்கு மேற்பட்டவற்றையோ தெரிவு செய்வர். அவ்வகையில் விசேட பொருளாதார வலயம் (Special Economic Zone) கட்டற்ற அல்லது சுதந்திர வர்த்தகவலயம் (Free Trade Zone) ஏற்றுமதி தயாரிப்பு வலயம்(Export processing Zone), கட்டற்ற அல்லது சுதந்திர வலயம் மற்றும் கட்டற்ற அல்லது சுதந்திர பொருளாதார வலயம் (Free Zone /Free Economic Zone ) கைத்தொழில் பூங்கா மற்றும் கைத்தொழில் பேட்டை (Industrial parks / Industrial Estates ) சுதந்திர அல்லது கட்டற்ற துறைமுகம் (Free Ports) தீர்வையற்ற இட மாற்றற் பூங்கா அல்லது வலயம் (Bonded Logistic Parks) நகர முயற்சியாண்மை வலயம் (Urban Enterprise Zone)

பிரதேச அபிவிருத்திக்கு வரையறுக்கப்பட்ட பொருளாதார வலயமே அவசியம் அமைக்கப்படும். பொருளாதார வலயத்தில் சந்தைகளும் இடம்பெறலாம். ஆனால சந்தையே தனித்து பொருளாதார வலயமாகாது.பொருளாதார வலயம் என்ற எண்ணக்கரு பரந்துபட்ட பொருளாதர செயற்பாட்டிற்கான வாய்ப்புக்களை வழங்கக் கூடிய வகையில் உட்கட்டுமானங்களைக் கொண்டதாகவும் எதிர் காலத்தில் விரிவடைவதற்கான நெகிழ்வுடைய பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடக் கூடிய வகையில் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டுமானங்களை நிர்மாணித்தல் வேண்டும் .200 மில்லியன் ரூபாவில் இது ஆரம்பிக்கப்பட்டாலும் பின்னர் விசேடமாக தெரிவு செய்யப்பட்ட பிரதேசமாக ,மக்களுக்கும் முயற்சியாளர்களுக்கும் இனம் காட்டப்பட்டதைத் தொடர்ந்து புதிய பொருளாதார செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.காலப்போக்கில் கைத்தொழில்களும் வர்த்தகமும் பொருளாதார சேவைகளும் வங்கிச் சேவைகளும் போக்குவரத்துச் சேவைகளும் களஞ்சியப்படுத்தல் வசதிகளும் நிறைந்த பிரதேசமாக மாற்றமடையும்.இதற்கென இங்குள்ள தொழில் முயற்சிகளுக்கு வரி விடுதலைகளும் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு பல சலுகைகளும் வழங்குவதே ஏனைய நாடுகளில் உள்ள வழமை. இத னைக் கண்டு உள்ளூர் முதலீட்டாளர்களும் வெளிநாட்டு முதலீட்டாளர்களும் முதலீடுகளை மேற்கொள்வர். இவற்றின் விளைவாக வேலை வாய்ப்பும் வருமானப்பங்கீடும் தன்னியல்பாகவே இடம்பெற்று இப்பிரதேசம் நகரமாகவோ, உப நகரமாகவோ அபிவிருத்தியடையும். இதுவே பொருளாதார வலயம் ஒன்று அமைப்பதன் நோக்கமா இருக்கும். இவ்வாறில்லாமல் வெறும் கடைத் தொகுதிகள் கட்டுவதிலேயே பொருளாதார வலயத்தை முடக்கிவிடுவது புதிய பொருளாதார வலயம் அமைத்தல் என்ற பரந்துபட்ட நோக்கத்திலிருந்து விலகிச் செல்வதாகவேயிருக்கும். இதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் பிரதேச ரீதியாக தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களும் வடக்கு மாகாண சபை முதலமைச்சரும் துணை போகக்கூடாது.

தற்போது இலங்கையின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவில் வவுனியாவில் புதிய பொருளாதார வலயம் (New Economic Zone) ஒன்று அமைக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அழிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மக்களுக்கான புதிய பொருளாதார வலயம் என கருதிக் கொள்வோமானால் இதற்கு பொருத்தமான இடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்திருக்கும் மாங்குளமே. இருந்தபோதும் வவுனியா மாவட்டத்தில் தான் அமைக்கப்பட வேண்டுமென நிபந்தனை விதிக்கப்படுமானால் ஓமந்தையே பொருத்தமான இடமாகும். புதிய பொருளாதார வலயம் மேலும் தொழில் வகையில் பிரிக்கப்படுவது பொருளாதார வலயத்தின் செயற்பாடுகளை பலவீனமடையச் செய்யும் முழுமையன செயற்பாடுகளையுடைய பொருளாதார வலயமே முழு நன்மையை பெறுவதற்கு வழிசமைக்கும. எனவே அமைச்சரவையின் முடிபுக்கு அமை வாக மாங்குளம் ஒன்றே போதும்.

பொருளாதார வலயம் எங்கு அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அதன்படி இரண்டு இடங்கள் தெரிவு செய்யப்பட்டதாகவும் ஒன்று கடல் உணவுச்சந்தைக்கான இடமாக மாங்குளமும் விவசாய மற்றும் மரக்கறிச்சந்தைக்கான இடமாக மதகுவைத்த குளமும் தெரிவு செய்யப்பட்டதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்செய்திகள் உண்மை தானா? அவ்வாறாயின் எந்த நியாயங்களை அடிப்படையாகக்கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டது என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

நான் அறிந்தவகையில் இலங்கைப் பாரளுமன்ற முதலமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் 2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத திட்ட உரையில் வவுனியாவில் ஒரு புதிய பொருளா தாரவலயம் (New Economic Zone) 200 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்தது. எந்த ஒரு சந்தாப்பத்திலும் சந்தைகள் அமைப்பது என்று குறிப்பிடப்படவில்லை. அவ்வாறு நாம் அர்த்தம் கொள்வோமாயின் பிரதமரின் குறிக்கோளுக்கு விரோதமாய் அமைந்துவிடும்.

தற்போது எடுத்திருக்கும் தீர்மானம் உண்மையாக இருக்குமானால் மாங்குளத்தில் கடலுணவுச் சந்தையும் மதகுவைத்த குளத்தில் விவசாயச் சந்தையும் அமைக்கப்படும் என்ற தீர்மானத்தினூடாக மீண்டும் ஒரு தவறு நிகழ்ந்ததாகவே எண்ணத் தோன்றுகிறது.

பகுத்தறிவாக சிந்திக்கத் தலைப்பட்டால் விவசாயிகள் நிறைந்ததும் விவசாயப் பிரதேசத்தின் மையமாகவுமுள்ள மாங்குளத் தில் விவசாயப்பொருள் வர்த்தக மையம் அமைவதே பொருத்தமானதும் வினைத்திறனான முடிவாகவுமிருக்கும். அவ்வாறில்லாமல் மாங்குளத்தில் கடலுணவுச்சந்தையை அமைப்பதென்று முடிவு எடுக்கப்படுமானால் பகுத்தறிவாக சிந்திக்காது எடுத்த முடிபாக வேயிருக்கும். மீன் வியாபாரத்தில் நேரம் முக்கியமாக கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்பது எல்லோரும் அறிந்த உண்மை. குறிப்பிட்ட நேரத திற்குள் விற்று முடிக்க வேண்டும். காலதாமதமானால் எல்லாம் பழுதடைந்து விடும். தற்போது மீன்மொத்த வியாபாரம் கடற்கரையோரத்திலேயே நடைபெறுகின்றது.

குளிரூட்டப்பட்ட வாகனங்களில் ஏற்றப்பட்டு இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதற்கு மாற்றீடாக மாங்குளத்தில் அமைக்கப்படும் மீன் சந்தை அமையுமா? என்பது சந்தேகமே. இல்லை அங்குதான் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்படுமானால் குறிப்பிட்ட சில மணித்தியாலத்தின் பின் கொள்வனவாளரும் விற்பனையாளரும் இல்லாத வெறிச்சோடிய சந்தையாகவே இருக்கும். தென் பகுதி மீன் வர்த்தகர்கள் நேரத்தை கருத்தில் கொண்டு எது கிட்டிய தூரத்தில் இருக்கின்றதோ அங்கு தான் செல்வார்கள்.

ஒப்பீட்டு ரீதியில்மதகுவைத்தகுளம் மதவாச்சிக்கு அண்மித்ததாக இருப்பதால் தென்னிலங்கை மீன் வியாபாரிகள் அதனையே விரும புவர். மன்னார், முல்லைத்தீவு, கொக்கிளாய், நாயாறு போன்ற இடங்களில் பிடிக்கப்படும் மீன்கள விரைவில் கொண்டு வரக்கூடியதாயிருக்கும்.

யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் பிடிக்கப்படும் மீன்கள் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் இங்கு கொண்டு வரப்படலாமஅல்லது நேராகவே தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்படலாம். கடல் உணவு வியாபாரத் திறகென ஒரு நிலையம் அமைபபது தான் என்ற முடிபு எடுக்கப்படுமானால் ஒப்பீட்டு ரீதியில் மதகுவைத்தகுளமே பொருத்தமான இடம்.

விவசாயப் பொருட்களைச சந்தைப்படுத்துவதற்காகவே பொருளாதார மையம்அமைக்கப்பட முடிவானால் மாங்குளமே அதற்குப் பொருத்தமான் இடமாகும்.விவசாயப் பிரதேசம் என்பதோடு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாந்தை, மடு, வவுனியா வடக்கு மற்றும் வவுனியாவின் ஏனைய பகுதிகளின் மரக்கறி மற்றும் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு மிக அண்மித்த பிரதேசத்தில் அமைந்த பிரதேசமாக விளங்கும்.

யாழ்ப்பாணம் மேட்டு நிலப் பகுதியாக இருப்பதால் மரக்கறிப் பயிர்ச் செய்கைக்கு வாய்ப்பாக இருப்பதை யாவரும் அறிவர். வடக்கு மாகாணத்தின் மொத்த மரக்கறி உற்பத்தியில் யாழ். மாவட்டமே கூடிய பங் குடையதாக உள்ளது (அதுமாத்திரமல்ல 1915ஆம் ஆண்டு தொடக்கம் புகையிரதத்தில் இரண்டு (compartments) பெட்டிகளில் மரக்கறிகள் அனுப்பப்பட்டதாக அப்போதைய அரசாங்க அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது.

தென இலங்கையில் தொழில புரிந்த எம்மவர்களுக்காகவே இந்தசந்தைப்படுத்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது)

எனவே விவசாய உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு பொருத்தமானதும் அச்சந்தைப்படுத்தலின் விளைவாக பொருளாதார நடவடிக்கைகளை அவதானிக்கும் விவசாயிகள் ஊக்கமடைவதோடு விவசாயத்தை விரிவுபடுத்தவும் முனைவர். பொருளாதார அபிவிருத்தியில் உற்பத்த் தொழில்களின் முனகொளு பின்கொளு (Forward link Backward link) செயற்பாடுகள் ஒரு உற்பத்தி இன்னொன்றுக்கு அவசியமானதாக இருக்கும். ஒரு உற்பத்தித் தொழில் முன்னோக்கிய அசைவுடையதாக இருக்கும் போது இன்னொரு உற்பத்தித் தொழில் பின்னால் கொழுவிச் செல்வது போன்றதாக அமையும்.

விவசாய உற்பத்திகளைப் பொறுத்த வரையில் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு பெறுமதிசேர் உற்பத்திக்காக விவசாயம்சார் கைத்தொழில்கள் தோற றம் பெறும். இவ்வாறான நடவடிக்கைகள் பொருளாதார செயற்பாடுகளை விரிவாக்குவதோடு விரைவாக்கும் செயற்பாட்டையும் கொணடுள்ளது.

எனவே விவசாயப் பொருட் சந்தைப்படுத்தலுக்கு விவசாயப் பிரதேசமான மாங்குளமே பொருத்தமானது.

# தமிழ் சினிமா வரலாறு 232

## சாதனை படைத்த சிவாஜியின் படங்கள்

*தீபாவளி காரணமாக 164 நாட்களில் (வெள்ளி விழாவுக்கு 11 நாட்கள் இருக்கும் போது ) ஐந்து தியேட்டர்களில் படம் எடுக்கப்பட்டது.*

*திருவிளையாடல் (31-07-1965) சென்னையில் மூன்று தியேட்டர்களிலும் மதுரையிலும் வெள்ளி விழா கொண்டாடியது. மற்றும் 9 ஊர்களில் 100 நாள் முதல் 150 நாள் வரை ஓடியது.*

*தர்த்தி ( சிவந்த மண்) (06-02-1970) சிவாஜி கௌரவ வேடத்தில் நடித்த இந்தப்படம் மும்பையில் 3 தியேட்டர்களில் 200 நாட்களைக் கடந்து ஓடியது. மும்பை மினவா தியேட்டரில் 259 நாட்களும் டில்லியில் 4 தியேட்டர்களில் 200 நாட்களைக் கடந்தும், கொல்கத்தாவில் 266 நாட்களும் ஓடியது.*

*பட்டிக்காடா பட்டணமா (06-05-1972) 14 தியேட்டர்களில் நூறுநாட்களுக்கு மேல் ஓடிய இப்படம் மதுரை சென்ட்ரலில் 182 நாட்கள் ஓடியது.*

*வசந்த மாளிகை (29-09-1972) மொத்தம் 17 அரங்குகளில் நூறு நாட்களைக் கடந்து ஓடிய படம். சென்னை சாந்தியில் 176 நாட்களும் மற்றும் 52 தியேட்டர்களில் 140 நாட்களும் நியூ சினிமாவில் 200 நாட்களும் ஓடி சாதனை படைத்தது. கொழும்பு நகரில் கேபிடல் தியேட்டர்களில் 287 நாட்களும் பிளாசாவில் 176 நாட்களும் ஓடியது. யாழ்ப்பாண நகரில் வெலிங்டன் தியேட்டரில் 34 வாரங்களும், லிடோ தியேட்டரில் 17 வாரங்களும் ஓடியது.*

*தங்கப்பதக்கம் (01-06-1974) சென்னையில் சாந்தி, கிரவுன், புவனேஸ்வரி ஆகிய தியேட்டர்களிலும், திருச்சியில் பிரபாத் தியேட்டர்களிலும் வெள்ளிவிழா கொண்டாடியது. 17 அரங்குகளில் நூறு நாள்.*

*பைலட் பிரேம்நாத் 30-10-1978 இந்தியா இலங்கை கூட்டு தயாரிப்பில் வெளியான படம். கொழும்பு கேபிடல் தியேட்டரில் 189 நாட்களும்*



*ராஜேஸ்வரா தியேட்டரில் 176 நாட்களும் யாழ்ப்பாணம் வின்சன்ட் தியேட்டரில் 222 நாட்களும் வெள்ளவத்தை சவோய் தியேட்டரில் 189 நாட்களும் ஓடின.*

*திரிசூலம் (27-01-1979) சிவாஜியின் மாபெரும் வெற்றிப்படம். தியேட்டர்களில் நூறு நாட்களைத்தாண்டி ஓடியது.10 அரங்குகளில் வெள்ளிவிழா 5 தியேட்டர்களில் 20க்கும் மேற்பட்ட வாரம்.*

*சென்னையில் மிட்லண்ட் தியேட்டரில் ராஜ்கபூரின் பாபி படம் 283 நாட்கள் ஓடி ரூ.14,51,782 வசூலித்தது.*

*ஒரு தியேட்டரில் 175 நாட்களில் திரிசூலம் வசூலித்த படம் என்று பாபி ஏற்படுத்தியிருந்த ரெக்கோட்டை திரிசூலம் முறியடித்தது. சாந்தி தியேட்டரில் 175 நாட்களில் திரிசூலம் வசூலித்த தொகை ரூ16, 13,648. மதுரை சிந்தா மணியில் 400 காட்சிகள் தொடர்ந்து ஓடின.*

*(தொடரும்..)*

அடை மழை விட்டாலும்
செடி மழை விடாது.
– மலையகப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## விஷ ஊசி ஏற்றப்பட்ட விவகாரம் மருத்துவ பரிசோதனையை முன்னெடுங்கள்

முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதான தகவல்கள் சம்பந்தப்பட்டவர்களையும் அவர்தம் குடும்பங்களையும் உளவியல் ரீதியில் பாதித்துள்ளது.

விஷ ஊசி ஏற்றப்பட்டதால் எங்களின் வாழ்வு இன்னும் எத்தனை நாட்களுக்கு என்று ஏங்கிக் கலங்குகின்றவர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கும் அதேவேளை,

அவர்களது உடல்நிலை குறித்து மருத்துவ பரிசோதனை செய்வதும் அவர்களின் உடல் பாதிப்புக்களைத் தடுப்பதும் எங்களின் தார்மீகக் கடமையாகும்.

முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உண்மை நிலையை கண்டறியும் பொருட்டு மருத்துவப் பரிசோதனை செய்வதற்கு இலங்கை அரசு தயாராக இருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவித்துள்ளார்.

எனவே, இந்த அறிவித்தலோடு முன்னாள் போராளிகளுக்கு மருத்துவ பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

இந்தப் பணியை இலங்கை அரசின் சுகாதார அமைச்சு, வடக்கு மாகாணத்தின் சுகாதார அமைச்சு என்பன கூட்டாக இணைந்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையினதும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தினதும் மருத்துவ நிபுணர்கள் குழு செய்வது பொருத்துடையதாகும்.

தேவையேற்படும் பட்சத்தில் வெளிநாட்டு வைத்திய நிபுணர்களையும் பரிசோதனைக்குத் தேவையான கருவிகளையும் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு வழங்குவதாகக்கூறி அவர்களுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதென்பது நிரூபிக்கப்பட்டால், சர்வதேச ரீதியில் அது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் என்பதற்கப்பால், எங்கள் பிள்ளைகளின் உயிரைப் பாதுகாத்தல் என்பதற்காக மருத்துவ பரிசோதனை என்பது அவசியமாகின்றது.

மருத்துவ பரிசோதனை என்பதை மேற்கொள்வதற்கு முன்னதாக தகவல்களைப் பதிவு செய்யவும் முன்னாள் போராளிகளின் தேகாரோக்கியத்தை கண்காணிப்பதற்குமான விசேடகுழு ஒன்றும் நியமிக்கப்படுவது அவசியமாகிறது.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளில் இதுவரை சுமார் 105பேர் உயிரிழந்ததான தகவல்கள் சாதாரணமானவையல்ல.

எனவே, உயிரிழந்த போராளிகளின் விபரங்கள்; அவர்களின் மரணத்துக்கான காரணங்கள்; புனர்வாழ்வு காலத்தில் தங்களுக்கு ஊசி போடப்பட்டதான தகவல்கள் ஏதேனும் அவர்களால் சொல்லப்பட்டதா? என்பது போன்ற விடயங்களையும் அறிந்து கொள்வது அவசியமாகும்.

எதுவாயினும் முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி போடப்பட்டதான விவகாரத்தில் ஒரு தெளிவான மருத்துவ பரிசோதனை செய்து உண்மை நிலை கண்டறியப்பட வேண்டும்.

இல்லையேல் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் உடல், உள ரீதியில் பெரும் பாதிப்பை அனுபவிக்கும் துர்ப்பாக்கிய நிலை தவிர்க்க முடியாததாகி விடும்.

# இணைந்த வடக்கு - கிழக்கு அடிப்படையில் அதிகாரங்களின் மூலமாக தீர்வு வேண்டும்

## இதுவே தமிழரசுக்கட்சியின் நிலைப்பாடு - சுமந்திரன்

(குருமன்காடு)

இணைந்த வடக்கு கிழக்கில் இறைமையின் அடிப்படையில் பகிரப்படுகின்ற அரச அதிகாரங்களின் மூலமாக தீர்வு வேண்டும் என்பதே இலங்கை தமிழர்சுக்கட்சியின் தீர்மானம் என கட்சியின ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் வவுனியாவில் நேற்று மாலை 6.30 மணியளவில் முடிவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

விசேடமாக இன்றைய அரசியல் சூழ்நிலை அரசியல அமைப்பு சட்ட உருவாக்கம் மற்றும் எமது பிரதேசங்களில இயல்பு வாழ்வுக்கு எமது மக்கள் திரும்ப முடியாதுள்ளமைக்கான பல அழுத்தமான விடயங்கள் போன்றவற்றை இன்று நாம் பேசி ஆராய்ந்திருக்கின்றோம். இதன் இறுதியில் மூன்று முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

தமிழரசுக்கட்சி எங்களுடைய போர்க்குற்ற விசாரணைகள் சர்வதேச விசாரணையாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கருதுவதாகவும் அப்படியான நிலைப்பாட்டை எடுத்துள்ளதாகவும் விசமத்தனமாகவும பொய்யாகவும் ஒரு பரப்புரை செய்யப்பட்டு வருகின்றது. எனினும் அப்படியாக கட்சி ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கவில்லை.

கட்சியினுடைய நிலைப்பாடாக முழுமையான சர்வதேச ஈடுபாடோடுதான் விசாரணைகள் இடம்பெறவேண்டும் என்பது தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது.

இந்த நிலைப்பாட்டில் இருந்து கட்சியோ கட்சியின் உறுப்பினர்களோ மாறுபட்ட கருத்தைகொண்டிருக்கவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையினாலே இலங்கையினுடைய முன்மொழிவோடு சேர்த்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்பதில் எந்த விதமான மாற்றுக் கருத்தும் கட்சிக்கோ கட்சி உறுப்பினர்களுக்கோ கிடையாது என்பதனை நாம் ஏகமனதாக இணங்கியிருக்கின்றோம்.

அடுத்து அரசியல் தீர்வு சம்பந்தமாக ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்பதுதான் நாம் எடுத்துள்ள நிலைப்பாடு என்று ஒரு பொய்யானதும் விசமத்தனமானதுமான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அப்படியான நிலைப்பாட்டை கட்சியோ கட்சி தலைமையோ கட்சியின் உறுப்பினர்கள் எவரேனும் எந்த காலத்திலும் எடுத்திருக்கவில்லை. சமஷ்டி அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்கில் எங்களுடைய இறைமையின் அடிப்படையில் பகிரப்படுகின்ற அரச அதிகாரங்களின் மூலமாக ஒரு தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே தொடர்ச்சியாக நாம் இன்றும் கொண்டுள்ள நிலைப்பாடு அது தொடர்ந்தும் இருக்கும். இதை விடுத்து எந்த மாற்றுக் கருத்தும் எந்தக்காலத்திலும் எடுக்கப்படவில்லை என்பதும் நாங்கள் ஒரு தீர்மானமாக எடுத்துள்ளோம்.

மற்றும் இதுவரை காலமும் அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் மக்களின் இயல்பு வாழ்வு சம்பந்தமாகவும் இலங்கை தமிழரசுக்கட்சியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் எடுத்துள்ள நடவடிக்கைகள் எல்லாவற்றையும் ஆமோதிப்பதாகவும் ஆதரிப்பதாகவும் மத்திய செயற்குழு ஏகமனதாக தீர்மானத்தை எடுத்துள்ளது.

இவை தவிரவும் மேலும இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் நாங்கள் தீர்மானம எடுத்துள்ளோம். அதாவது முன்னாள் போராளிகள் அதிகளவில் மரணிப்பதாக வந்த செய்திகளை நாங்கள் மிகவும் தீர்க்கமாக ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம். இதில உண்மை இருக்குமாக இருந்தால்பாரதூரமான விடயமாகும்.

எனவே இதனை இலகுவாக புறக்கணித்து செல்ல முடியாது. அதற்கான அடிப்படை தரவுகளை அறிகின்ற விடயங்களையும் சில முன்னேற்பாடான விடயங்களையும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் தலைமையில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு எடுத்துள்ளது. அதனை கிழக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரின் ஊடாக எடுக்கும் படியாக நாம் கேட்டுள்ளோம்.

இதன் உண்மை சரியான விதத்தில் அறியப்படவேண்டியதாக இருக்கின்றது. ஏனெனில் இவ்வாறான விடயம் இடம்பெற்றிருந்தால் இது பாரதூரமானதாகும். அத்துடன் இவ்வாறான செய்தி வந்துள்ளமையினால் முன்னாள போராளிகளும் அவர்களது குடும்பத்தினரும் மிகவும் உளவியல் ரீதியில் பாதிப்படைந்துள்னர்.

எனவே இது மிக அவதானமாகவும் பொறுப்போடும் நேர்த்தியாகவும் கையாளப்படவேண்டிய விடயம். வெறுமனே பேசவேண்டும் என்பதற்காகவும் குற்றச்சாட்டுக்களை சுமத்த வேண்டும் என்பதற்காகவும் பொறுப்பில்லாமல் பேசி ஏற்கெனவே நொந்து போயுள்ள முன்னாள் போராளிகளையும் அவர்களது குடும்பங்களையும் மேலும் மன உளைச்சலுக்குள் ளாக்ககூடாது. அவர்களுக்கு வேண்டிய எல்லா ஆதரவுகளையும் கொடுக்கவேண்டும் என்ற தீர்மானத்தையும் நாங்கள் எடுத்துள்ளோம் என சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார். (செ-250)

## 71 இலங்கையர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் குவைத் நாட்டில் தங்கியிருந்த இலங்கை தொழிலாளர்கள் 71 பேர் நேற்றைய தினம் அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

இவ்வாறு நாடு திரும்பியவர்களில் 62 பெண்களும் 9 ஆண்களும் இருந்ததாக வெளிநாட்டு வேலைவாய்பபு பணியகம் தெரிவிக்கின்றது.

இவர்கள் தொழில் ஒப்பந்தம் இன்றி வருடக்கணக்கில் குவைத் நாட்டில் தங்கி இருந்ததாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு குவைத் நாட்டிலுள்ள தூதரகத்தின் பாதுகாப்பு அலுவலகத்தில் மேலும் 61 இலங்கையர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களையும் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (செ-11)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வேண்டல் வளம்



ஒவ்வொருவருடைய தேவையையும், விருப்பத்தையும் உணர்ந்து, எந்த இடத்தில் குறை இருக்கிறது, எந்த இடத்தில் நிறை இருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டு உதவி செய்வது, வாழ்வது தான் அன்பும் கருணையும். இதைத் தமிழில் வேண்டல் வளம் என்று சொல்வார்கள். வளம் என்றால் நம்மிடத்தில் இயற்கையாக உள்ள இருப்பு என்பதாகும். வேண்டல் என்றால் அவ்வப்பொழுது ஏற்படக் கூடிய தேவை என்ன என்பதாகும். இதே போன்று பிறரின் வேண்டல் வளம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வளத்தைப் பயன்படுத்தவும், வேண்டலைப் பூர்த்தி செய்யவும் உதவ வேண்டும் என்பதுதான் வேண்டல் வளம் தெரிந்து விளைவறிந்து வாழ்தல் என்பதாகும்.

இப்பொழுது அந்த வார்த்தை வழக்கில் வண்டவாளம் என்றாகி விட்டது. நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கும், நம்மோடு இணைந்து உள்ளவர்களுக்கும் வேண்டல் வளம் தெரிந்து விட்டால், நான் எந்த அளவில் என்னுடைய வேண்டல் வளம் இந்த இரண்டையும் வைத்துக் கொண்டு அவர்களின் மூலமாக என்ன பெற முடியும், அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை அறிந்தால், உயிர்களிடத்து அன்பும், கருணையுமாக இருக்கக் கற்றுக் கொள்ளலாம். இந்த முறையில் ஒவ்வொருவரும் அன்பையும், கருணையையும் எழுச்சி பெறச் செய்து, அதன் வழியே வாழ முற்படும்பொழுது எல்லா உயிர்களோடும் ஓர் இனிமை ஏற்படும் அல்லவா? அந்த இனிமை தான் வாழ்வில் முழுமை தரும், அறிவை உயர்த்தி வைக்கும்.

## நல்லூர்க்கந்தனுக்கு



### நல்லூர் முருகன்

இராகம்: தோடி தாளம்:ஆதி

**பல்லவி**

நல்லையில் வாசா– ஞானப்பிரகாசா

**அனுபல்லவி**

நல்லதெய்வானை வள்ளியம்மை சமேதா
நரர்சுரர் பணி ஞானபண்டி தாபரா (நல்லை)

**சரணம்**

நான் உன்னை நம்பினேன் நல்குரவு பிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்
தேனுந்து வேங்கையாய்த் தினைப்புனம் நின்றனை
ஸ்ரீராமன் மருகனே முருகனே கிருபாகரா (நல்லை)

சிவத்திரு யோகர்சுவாமிகள்

# வடமராட்சி நவசக்தி விளையாட்டுக்கழக 40வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்து

## இறுதிப்போட்டியில் டயமன்ஸ்



வடமராட்சி நவசக்தி விளையாட்டுக்கழகம் தமது 53 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வடமராட்சி லீக், பருத்தித்துறை லீக் என்பவற்றின் அனுமதியுடன் நடத்தும் 40 வயதைக் கடந்தவர்களுக்கான ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டம் ஒன்று நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதில் வதிரி டயமன்ஸ் அணிக்கும் மணற்காடு அன்ரனீஸ் அணிக்கும் இடையிலான போட்டி நவசக்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

விறுவிறுப்பாக நடந்த ஆட்டத்தின் முதற்பாதியில் வதிரிட யமன்ஸ் அணி 2 கோல்களைப் போட்டு முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதியாட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் அணி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு சமநிலை கொண்டது.

பின்னர் அதற்கு பதில் கொடுத்த வதிரி டயமன்ஸ் அணி அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டு முன்னிலை வகித்தது. பின்னர் மணற்காடு சென்.அன்ரனீஸ் அணி ஒரு கோலை போட்டது. இறுதியாக போட்டி முடிவுக்கு வர வதிரி டயமன்ஸ் அணி 4: 3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுக்கொண்டது. (கு)

# அரையிறுதிக்குள் நுழைந்தது நாவாந்துறை சென்.மேரிஸ்



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட சுப்பர் 8 போட்டியின் அண்மையில் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் மோதியது. ஆட்டம் தொடங்கிய முதலாவது பாதியாட்டத்தின் 03 ஆவது நிமிடத்தில் யுனிற்றன் கோல் போட்டார். முதல் பாதியாட்டம் 1:0 என்ற அடிப்படையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் பந்தை தன்வசப்படுத்தி வைத்திருந்த சென். மேரிஸ் 46 ஆவது நிமிடத்தில் நிதர்சன் கோல்போட்டு அணியின் கோல் உயர்த்தினார். ஆட்டத்தின் 47 ஆவது நிமிடத்தில் யூட் அற்புதமான கோல் ஒன்றை போட்டார். நிதர்சனால் அணிக்காக இரண்டாவது கோல், 58 ஆவது நிமிடத்தில் போட இறுதி நேர முடிவில் 4:0 என்ற அடிப்படையில் யங்ஹென்றீசியன்ஸை வீழ்த்தி அரை இறுதிக்குள் நுழைந்தது சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம்.போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் வீரர் யூட் தெரிவு செய்யப்பட்டார். (கு)

# இமையாணன் உதைபந்தாட்ட தொடர் மணற்காடு சென்.அன்ரனீஸ் வெற்றி



இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட சுப்பர் 8 போட்டியின் அண்மையில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனீஸ் மோதியது. ஆட்டத்தின் முதலாவது பாதியாட்டத்தில் இரண்டு அணியும் கோல் போடாத நிலையில் முதல் பாதி நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இரு அணிகளும் 44 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனீஸ் வீரர் செல்லப்பா கோல் போட்டு அணியை வலுப்படுத்தினார்.



நவஜீவன்ஸ் கோல் போட முற்பட்டது. வாய்ப்புக்கள் இல்லாமல் போக ஆட்டத்தின் இறுதி நேர முடிவில் 1 :0 என்ற அடிப்படையில் நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது மணற்காடு சென். அன்ர னீஸ் வி.கழகம். போட்டியின் ஆட்ட நாயகனாக சென். அன்ரனீஸ் வி. கழக வீரர் செல்லப்பா தெரிவு செய்யப்பட்டார். (கு)



# ஜனாதிபதி தங்கக்கோப்பை கரப்பந்திற்கு விண்ணப்பிக்குக

டயலொக் நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படவிருக்கின்ற ஜனாதிபதி தங்கக் கோப்பைக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. மேற்படி போட்டியானது 22 வயதுக்கு கீழ் பிரிவாகவும் வயதெல்லையற்ற பிரிவாகவும் ஆண், பெண் இருபாலாருக்குமிடையில் நடத்தப்படவுள்ளது.

போட்டிக்கு விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்காதவர்கள் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் தலைவர் கே. மனோகரனிடம் (077 662 1255) தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (கு)

# கைதடி ஐக்கியத்தை வீழ்த்தியது மல்லாகம் ஸ்ரீமுருகன் வி.கழகம்

மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்றுத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

குழு A இற்கான முதல் போட்டியில் கைதடி ஐக்கியம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கைதடி ஐக்கியம் வி.கழகம் நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்ற முடிவில் 5 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வதிரி ஸ்ரீமுருகன் வி.கழகம் 3.5 பந்துப் பரிமாற்ற நிறைவில் 2 இலக்கு



களை மாத்திரம் இழந்து வெற்றி பெற்றது. வதிரி ஸ்ரீ முருகன் வி.கழகம் சார்பில் துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் பந்துவீச்சில் ஒரு இலக்கினையும் கைப்பற்றிய டெஸ்மன் ஆட்ட நாயகனாக தெரிவானார். (கு)

# கணேசானந்தா வி.கழக மென்பந்து இறுதிப்போட்டி

## பிங்பொங் சம்பியன்



கணேசானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் சக்திவேல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பிங்பொங் (அம்பன்) விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்ற போட்டியில் பிங்பொங் (அம்பன்) அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றிக்கொண்டது. (கு)

# அம்பாள் வி.கழக உதைபந்து போட்டி

புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்தும் தீவகத்துக்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் புங்குடுதீவு நண்பர்கள் விளையாட்டுக்கழகத்துடன் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

பின்னர் நடைபெற்ற அடுத்த சுற்றுக்கான போட்டியில் வேலணை அம்பிகை நகர் மகேஸ்வரி விளையாட்டுக்கழகத்துடன் ஐயனார் விளையாட்டுக்கழகம் மோதியதில் 1:1 என்ற சமநிலையில் போட்டி முடிவடைந்ததால் தண்ட உதையில் அம்பிகை நகர் மகேஸ்வரி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (கு)

# பிரமாண்டமான...

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்து அரசுக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் தமிழ் மக்களை ஒன்று திரட்டி ஜனநாயக ரீதியிலான போராட்டம் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் பொது அமைப்புக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் உபகுழுவின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்



தில் நடைபெற்றது.

அக் கலந்துரையாடலின் பின்னரே மேற்குறித்த தீர்மானத்தினை அறிவித்துள்ளனர். இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசினால் நிறைவேற்றப்பட்டுவரும் சிங்கள குடியேற்றங்கள், சிங்கள மக்கள் வாழாத இடத்தில் கொண்டுவரப்படும பௌத்த ஆலயங்கள் மற்றும் சின்னங்கள் நிறுவுகின்றமை, இதன் மூலம் வடக்கு மாகாணத்தை சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவருவதென்ற இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலை உடனடியாக நிறுத்துமாறு கோரியும், மீள்குடியேற்றம் மற்றும் இராணுவம் தொடர்ந்தும் மக்களின் காணிகளை அபகரித்து வைத்திருப்பதை கண்டித்தும், மீள்குடியேற்றத்துக்கு உடனடியாக அரசு ஆவனசெய்ய வேண்டும் என்றும், காணாமல்போனோர் தொடர்பான முழுமையான பதிலை தர வேண்டும் எனவும் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க வேண்டும் எனவும் நிரந்தர அரசியல் தீர்வை




தரவேண்டும் என கோரி மாபெரும் மக்கள் எழுச்சி பேரணி ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம்.

முன்னைய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலிலேயே தற்போதைய அரசாங்கமும் செயற்பட்டு வருகின்றது. இதற்கு தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான எதிர்ப்பை தெரிவிக்கும் முகமாக இப்பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன் எம்மால் நடத்தப்படும் போராட்டங்களுக்கு அரசாங்கம் உரிய பதிலை வழங்காமல் போனால் வடகிழக்கு முழுவதும் தொடர்சியான முறையில் மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.





இது தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்களின் கோரிக்கைகளை மையப்படுத்திய போராட்டமாகவும் தமிழ் மக்களின் இருப்புக்களை வாழ்வாதாரங்களை பாதுகாத்துக்கொள்வதற்கான மறுக்கமுடியாத போராட்டமாக இதை மேற்கொள்ளவுள்ளோம்.

நல்லாட்சி அரசாங்கம் என கூறும் தற்போதைய அரசு முன்னைய ஆட்சியாளர்கள் செய்த அதே வேலைகளை செய்கின்றது.

அண்மையில் முன்னாள்ஜனாதிபதி சந்




திரிகா அம்மையார் கூறியிருக்கின்றார். காணாமல்போனவர்கள் தொடர்பான உண்மை நிலையை கண்டறிய 2வருடங்கள் காத்திருக்க வேண்டும் என தெரிவித்திருந்தார். 2 வருடஅவகாசம் கோரல் என்பது வெறுமனே போர் குற்றங்களில் அந்த விடயம் இடம் பெறாமல் தவிர்ப்பதற்கும், மக்களை ஏமாற்றுவதற்குமேயாகும்.

இதற்குள் காணாமல்போனவர்கள் செயலகம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த செயலகத்திற்கு குற்றம் தொடர்பான சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரமே கிடையாது.

இந்த அரசு இனங்களுக்கிடையே நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதாக பொய்யான தகவலை கூறி விரைவாக வடக்கில் சிங்கள மயமாக்கல் செயற்பாடுகள் நடைபெற்று வருகிறது.

எனவே இவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக எதிர்வரும் செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்திலும், 9 ஆம் திகதி யாழ் மாவட்டத்திலும் பாரிய மக்கள் போராட்டம் அல்லது மக்கள் பேரணியை நடத்த தீர்மானித்திருக்கின்றோம்.

இந்த தீர்மானத்தை இங்கே கலந்து



கொண்டிருந்த சகல அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஏகமனதாக தீர்மானித்துள்ளனர் என தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் உபகுழு இணைப்பாளர் சட்டத்தரணி எஸ். புவிதரன் கருத்துத்தெரிவிக்கையில்,

எமது மக்கள் பிரதிநிதிகள் மேற் குறித்த விடயம் தொடர்பில் எடுக்கத்தவறிய விடயங்களை அவர்களுக்கு சுட்டிக்காட்டுவதாகவும் தமிழ் மக்களுக்குரிய தீர்வில் முக்கிய விடயத்தை கவனிக்கத்தவறியுள்ளார்கள் என்பதை எடுத்துக்கூறுவதாக இந்த மக்கள் எழுச்சி போராட்டம் அமையும் என அவர் தெரிவித்தார்.

தமிழ்தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து தெரிவிக்கையில்,

வரவிருக்கும் அரசியல் அமைப்பு தமிழ் மக்கள் மீது ஒற்றை ஆட்சிக்குள் எமது அரசியலை முடக்கக்கூடிய வகையில் அமைக்கப் படக்கூடும். இவ்வாறு ஆபத்து நிலவிவரும் நிலையில் தமிழின இன அழிப்பு அதாவது பௌத்த மயமாக்கல், சிங்கள குடியேற்றம் போன்ற கோரிக்கைகளோடு மட்டும் மட்டுப்படுத்தாமல் அரசியல் தீர்வுத்திட்டம் தொடர்பான



அரசியல் ரீதியான தாக்கத்தை செலுத்தும் போராட்டமாக இது அமையும் என தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் சர்வமத அமைப்புக்கள், தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் அமைப்புக்கள், காணாமல்போனவர்களின் உறவினர்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள், பல்கலைகழக கல்விசாரா ஊழியர்கள் உட்பட பல அமைப்புக்கள் கலந்து கொண்டிருந்தன.(செ-9)

# போரின் வேதனை...

ரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஆசிய பசுபிக் சட்ட மாநாட்டின் 50 வருட பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்றுவரும் மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்வு, நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு, மக்களிடையே புரிந்துணர்வையும் நட்புறவையும் ஏற்படுத்துவதற்கும் புதிய அரசியலமைப்பு போதுமானதாக அமையாதென சந்திரிகா மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், சட்டத்தினை பாதுகாப்பதற்கு முக்கியத்துவத்துடன் செயற்படுவது போல நல்லிணக்கம் மற்றும் நிரந்தர சமாதானத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது அனைவரதும் கடமையென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# ஹயஸ் விபத்து; ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுப்பாட்டை இழந்த ஹயஸ் வாகனம் வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 9.10 மணியளவில் கொழும்புத்துறை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அதில் அதே இடத்தினைச் சேர்ந்த வாகனச் சாரதியான பிறின்சன் ஹாட்சன் (வயது38) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இதுதொடர்பில் பொலிஸ் முறைப்பாடென்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (செ-30)

# வாகன விபத்து; குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

காருடன் துவிச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் பருத்தித்துறை வீதி கோப்பாய் மாதா கோவிலடியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கோப்பாய் தெற்கினைச் சேர்ந்த வல்லிபுரம் டெறிஸ்தோஷ் (வயது52) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணமான கார் கோப்பாய் மாதா கோவிலடியிலிருந்த ஒழுங்கையிலிருந்து பருத்தித்துறை வீதி நோக்கி பயணமான துவிச்சக்கரவண்டியும் மோதியதிலேயே மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்துத் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (செ-30)

# மழலைகள் சிந்திய இரத்தம் வீணானது அல்ல; விடுதலைக்கானது

## அருட்தந்தை ஜெபநேசன் தெரிவிப்பு

தமிழ் மக்களின் மீட்பு வரலாற்றில் சிறு மழலைகள் சிந்திய இரத்தம் வீண்போகாது. அவர்கள் சிந்திய இரத்தத்தினால் தமிழ் மக்களின் வாழ்வில் விடுதலை கிடைக்கும் என யாழ் மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

செஞ்சோலை சிறுவர் இல்ல குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டு 10 ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்றைய தினம் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

10 ஆண்டுகளுக்கு முன்னர் பரிதாபமாக கொல்லப்பட்ட சிறார்களின் நினைவாக நாம் கூடியுள்ளோம்.

தமிழ் மக்களுடைய மீட்பு வரலாற்றில் குழந்தைகளின் தியாகம் மறக்க முடியாதது. இவர்கள் கொடுத்த உயிர் இவர்கள் சிந்திய இரத்தம் இவற்றின் ஊடாக மக்களுக்கு விடுதலை வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையை அந்த நேரத்தில் அவர்கள் அறியாமல் இருந்தாலும் அவர்களுடைய இரத்தத்தினால் தமிழ மக்களின் வாழ்வில் விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.



அறியா பருவத்தில் கூட அந்த மழலைகள் செய்த தியாகத்தை நினைவு கூருகிறோம். இந்த மழலைகளை இழந்து தவிக்கும் உறவுகளுக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன் இவர்களின் தியாகம் அர்ப்பணிப்பு வீண்போகாது. நாம் விரும்பித்தேடுகின்ற விடுதலை வாழ்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து வாழுவோம்.

இந்த குழந்தைகள் இறைவனின் பிரசன்னத்தில் இருப்பார்கள். நாங்களும் எமது மக்களுக்காக தொடர்ந்து சேவைகளை செய்யவுள்ளோம். இன்றைய தினம் (நேற்று) ஒரு உந்து சக்தியாக உள்ளது. இதயத்தினாலும் கண்ணீராலும் அஞ்சலி செலுத்துகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## 500 ஏக்கரை...

காணப்படுவதாக தெரியவருகிறது.

வலி.வடக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுமக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வருடம் வரையில் வலி வடக்கு பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த 5331.31 ஏக்கர் பொது மக்களுடைய காணிகளில் இது வரை 288.08 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ளது. மீதியாக 5043.23 ஏக்கர் காணி இன்னமும இராணுவத்தினர் வசம் உள்ளது.

அந்த வகையில் உயர் பாது காப்பு வலயத்தில் உள்ள ஆயிரத்து 528 ஏக்கர் காணிகளை விடுவிப்பது தொடர்பில் அண்மையில் மீள் குடியேற்ற அமைச்சினால் அமைச்சரவைப்பத்திரம் தாக்கல் செய்யப் பட்டிருந்தது.

ப்பாதுகாப்புபடை பிரிவில் இருந்து அதற்கான பரிந்துரை அறிக்கை கிடைக்காத க்ரணத்தினால் அமைச்சரவை அனுமதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில் மீள்குடியேற்ற அமைச்சு கோரிய ஆயிரத்து 528 ஏக்கர் காணியில் அண்ணளவாக 500 ஏக்கர் காணிகளே விடுவிக்கப்படும் என இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஆராய பாதுகாப்பு அமைசசின் செயலாளர் கருணாசேன கெட்டியாராட்சி நேற்றையதினம் வலி.வடக்கு பகுதிகளுக்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அப்போது பாதுகாப்பு படைத்தரப்பு மற்றும் உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடிய துடன் பளை வீமன்காமம் பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்களையும் சந்தித்து கலந்துரையாடியதுடன் நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்காக இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டத்தையும் பார்வையிட்டார்.

மேலதிகமாக நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை விரைவாக மீள குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை ‘மும்முரமாக செயற்படுவது தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (செ-9)

## காணாமல் போனோ...

கட்டப் போரின் போது, காணாமல் போயுள்ள நபர்கள் சம்பந்தமாக ஆராய்வதற்கு மாத்திரம் இந்த அலுவலகம் அமைக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

யுத்தத்தின் போது, 5000-க்கும் மேற்பட்ட அரசு பாதுகாப்பு படையினர் காணாமல் போயுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி சிறிசேன, கடந்த ஆட்சிக் காலத்தில் ஊடகத்துறையினர் பலர் கடத்தப்பட்டதாக தெரிவித்தார்.

அதே போல், 1988 - 1989 - இல் நடைப்பெற்ற கலவரங்களின் போது, ஆயிரக்கணக்கான தனது அங்கத்தவர்கள் காணாமல் போயுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

எனவே, இவ்வாறு காணாமல் போனோர் தொடர்பாக ஆராய்ந்து, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிரந்தர அலுவலக மொன்று அவசியமென்று ஜனாதிபதி தெரிவித்தார்.

காணாமல் போனோரின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு தடைகளை ஏற்படுத்திவரும் நபர்கள், இவ்வாறான அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும், ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (செ-11)


### தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல சிகை அலங்கரிப்பு (சலூன்) நிலையத்துக்கு அனுபவமுள்ள வேலையாள் ஒருவர் தேவை. (5618)

தொடர்புகளுக்கு :- 0770692641

### வேலையாட்கள் தேவை

விற்பனையாளர் ஆண் / பெண் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு :-
பமிலி சுப்பர் ஸ்பொட்
(சந்தைக்கு அருகாமை)
மானிப்பாய்.
தொ.பே. :- 021 225 6131
(C-5453)


## காட்டுக்குச் சென்ற...

ஸார் தெரிவித்தனர்.

கிளாலியைச் சேர்ந்த பத்திநாதன் சுதாகரன் (வயது 39) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். வெடி பொருட்கள் அப்ாயமுள்ள மேற்படி பகுதியில் இன்னமும் மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் மேற்படி நபர் குறித்த பகுதிக்குள் சென்றுள்ளார். இவரைக் காணவில்லையென அவரது மனைவி கடந்த 13ஆம் திகதி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு தேடுதல் பணியில் களமிறங்கியிருந்த பொலிஸார் அவருடைய சடலத்தை மீட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் காணப்பட்ட வெடி பொருட்களை எடுப்பதற்காக இவர் அப் பகுதிக்குள் சென்றிருக்கலாம் என்றும் அவ்வாறு செல்கையில், வெடிபொருள் வெடித்து அவர் உயிரிழந்திருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## எரிபொருள் சேமிப்பு நிலையமாக அம்பாந்தோட்டை துறைமுகம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை எரிபொருள் சேமிப்பு நிலையமாக பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எரிபொருள் சேமிப்பு நிலையம் அமைப்பது தொடர்பில் உதவிகளை பெறுவதற்கு சீன அரசாங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட உள்ளதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கையில் சீன நிறுவனங்களை நிறுவுவதற்கான கட்டுமானங்களை சீன அரசாங்கம வழங்கும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஊடகவியலாளர்களுக்கு...

மணியளவில் அதனைச் செய்து சேகரிக்கச் சென்ற கிளிநொச்சியின் நான்கு பிராந்திய செய்தியாளர்களை மக்கள் போராட்டம் செய்கின்ற இடத்திற்கு முன்னால் உள்ள இராணுவ காவலரணில் கடமையிலிருந்த இராணுவத்தினர் துப்பாக்கியுடன் வந்து தம்மை படம் எடுத்ததாக கூறி கடும் தொனியில் அச்சுறுத்தியதாகவும் இதனால் தமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அற்றநிலையில் குறித்த ஊடகவியலாளர்கள் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தமது பாதுகாப்பு வேண்டி முறைப்பாட்டினை நேற்று இரவு பதிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய பகுதியானது அண்மையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டிருந்த பகுதியாகும்.

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் எதுவித பொலிஸ் பாதுகாப்பின்றி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமக்கள் எவ்வித மின்விளக்குகளும் இன்றி அப்பகுதியில் இருப்பதனால் தமது பாதுகாப்புக்கு என்னவாகுமோ என்ற அச்ச நிலை கேள்வியையும் எழுப்பியுள்ளனர். (செ-312)

## பாடசாலை மாணவியொருவர்...

வதாவது, நேற்று முன்தினம் இரவு சுமார் எட்டு மணியளவில் வீட்டில் இருந்து குறித்த சிறுமி காணாமல் போயிருந்தார்.

இதனையடுத்து அவரை தேடி அவரது பெற்றோர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

முறைப்பாட்டை அடுத்து குறித்த மாணவியை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் உறவினர்கள் இணைந்து ஈடுபட்டிருந்த போதும் குறித்த மாணவியை கண்டுபிடித்திருக்க முடியவில்லை.

இந்நிலையிலேயே நேற்று ம்ாலை குறித்த மாணவியின் வீட்டில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரமளவில் உள்ள வயல் வளவொன்றுக்குள் உள்ள கிணற்றுள் இருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இவ்வளவிற்குள் உள்ள தென்னை மரத்தில் தேங்காய் பறிப்பதற்காக வந்த சிலரே கிணற்றினுள் சடலமிருப்பதை கண்டு பொலிஸாருக்கு தெரியப் படுத்தியிருந்தனர்.

இம் மாணவி எவ்வாறு வீட்டில் இருந்து காணாமல் போயிருந்தார். இவர் கொலை செய்யப்பட்டு கிணற்றுள் வீசப் பட்டாரா? அல்லது தற்கொலை சம்பவமா? என்பது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் சடலத்தை நேரில் சென்று பார்வையிட்ட ஊர்காவற்றுறை பதில் நீதவான் இ.சபேசன் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

சன நடமாட்டம் குறைந்த வயற்பகுதியில் உள்ள கிணற்றிலிருந்து மாணவி சடலமாக மீட்கப்பட்டுள்ளமை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும், சடலத்தில் எந்தவிதமான பெரிதான காயங்கள் ஒன்றும் வெளித் தெரியவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் சம்பவ இடத்திற்கு சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் வருகை தந்து நிலைமைகளை பார்வையிட்டிருந்தார். (செ-4,9,246)

## செஞ்சோலை படுகொலை...

61 மாணவிகளின் 10 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்றைய தினம் யாழ் முனியப்பர் கோவில் முன்றலில் அனுஷ்டிக்கப் பட்டது

முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுமிகள் இல்லத்தின் மீது கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14ஆம் திகதியன்று விமானப்படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் பாடசாலை மாணவிகள் 61 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், 129 பேர் காயமடைந்திருந்தனர்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் 10ஆம் ஆண்டு நினைவு தினத்தில் மாணவிகளின் நினைவாக கல்லறைகள் அமைத்து அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் ஈகச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் மதத்தலைவர்கள், அரசியல் கட்சிகளின் ப்ரதிநிதிகள், பொது அமைப்புக்கள், கொல்லப்பட்ட மாணவிகளின் பெற்றோர் உறவினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (செ-9)

## பிரித்தானியா...

றுள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை நல்லிணக்கப் பாதையின் முக்கிய நகர்வாக கருத முடியும் எனவும் இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் பிரித்தானியா சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த அலுவலகம் ஊடாக காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்களுக்கு நன்மை ஏற்படும் எனவும், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன வாயிற்று என்பதனை அறிந்து கொள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும், இதன் ஊடாக நல்லிணக்கத்தை வலுப்படுத்த முடியும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் போனவர் குறித்த ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் தொடர்பில் அலுவலகம் நடவடிக்கை எடுக்கும் போது சவால்களை எதிர்நோக்க நேரிடும் என்பதனை தாம் உணர்ந்து கொள்வதாகவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (செ-11)


### நகைக்கடைக்கு வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான நகைக்கடை ஒன்றிற்கு

- கணக்கு லிகிதர்கள்
- பயிலுநர்கள்

தேவை. யாழ்.நகரில் இருந்து 5 Km தூரத்தில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. உடன் நேரில் வரவும்.

0777234912

நியூ மைதிலி ஜூவல்லறி
38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-5450)

### அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226240

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS
(C-5441)





## பிரபாகரனின் உருவப்படத்...




மூடைகளிலேயே இந்த ரிசேர்ட்கள் இருந்துள்ளன.

இது தொடர்பில் கடையின் உரிமையாளர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து, குறித்த புடைவைக்கடைக்கு விரைந்த பொலிஸார், கடை உரிமையாளரிடம விசாரணைகளை மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணைகளையும மேற்கொண்டுவருகின்றன. (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.